"விழலுக்கு நீர் பாய்ச்சி மாயமாட்டோம்"

வளமான நிலங்களுக்குத்தான் வேண்டிய மட்டும் நீர் பாய்ச்சி நாடு செழிக்க மக்கள் கொழிக்கப் பாடுபடுவோம் என்கிறார்கள் பண்ணைமக்கள். "ஸிக்மா" பம்ப் இவ்வேலையைச் சுலபமாக்கி எவ்வளவு தண்ணீர் இறைக்க வேண்டுமானாலும் உதவி செய்யும்.



எந்த விதமான ஆலை, ரசாயன சாலை, நீர்ப்பாசனம் வடிகால்களுக்கும் தக்க "பம்ப்" எங்களிடம் கிடைக்கும். உறுதியாக நீடித்து உழைப்பவை. முழு விவரங்களுக்கு எழுதுங்கள்.

ஸிக்மா

விவசாயபம்புகள்...

வில்லியம் ஜாக்ஸ் & கோ., லிமிடெட்.

37, செகண்டு லைன் பீச், சென்னை. 1. Kittu's

டெலிபோன்: 3226, தபால்பெட்டி: 1282, தந்தி: "LIMPET"

1948-ஆம் ஆண்டு

உங்களுக்கு

வைத்திருப்பது என்ன?

அறியவேண்டாமா? என்றைய தினம் என்ன ஸம்பவம் நடக்க இருக்கிறது என்பதை எளிதில் நீங்கள் அறிந்துகொண்டுவிடலாமே! இன்றே ஒரு கார்டு எழுதுங்கள். உங்கள் முழு விலாஸமும் நீங்கள் நினைக்கும் ஓர் புஷ்பத்தின் பெயரும் கண்டு எழுதுங்கள் போதும். எழுதும் தேதியிலேயிருந்து வரும் பன்னிரண்டு மாதங்களுக்கு உங்களுக்கு கிடைக்கப்போகும் லாபம், நஷ்டம், எந்த வியாபாரத்தின் மூலம் எந்தவிதமாக ஏற்படப்போகிறது என்ற விபரம், வேலை எப்பொழுது கிடைக்கும், சம்பளம் எப்பொழுது உயரும், பரீக்ஷையில் நீங்கள் தேறுவது முதலான எல்லா விஷயங்களையும் மாதவாரியாகப் பலன் குறித்து ரூ. 1—4—0க்கு வி. பி. யில் அனுப்பிவைக்கப்படும்.

★

தபால் செலவு தனி.

இங்கிலீஷிலேயே எழுதியனுப்பவும்

★

Shree

Swami Yogiraj Jyotish Asram,

C. K. PHAGWARA. (Kapurthala State)

மாதவிடாய்

நின்றிருந்தாலும் அல்லது வேறு எவ்வித மோசமான நிலையிலிருந்தாலும் 'ரிதுபர்த்தினி' (கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர்ட்) தீமையற்றது. ஒரே நாளில் விடாயாவது நிச்சயம். விலை ரூ. 3-0-0. பார்வதி கர்ப்பத்தடைக்கு அபாயமில்லாத சிறந்த மருந்து. தற்காலிக கர்ப்பத்தடைக்கு ரூ. 2-0-0. நிலையான கர்ப்பத்தடைக்கு ரூ. 4-8-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

விரைவாதம்

விரைவாதம், குடல்வாயு, பைலேரியா முதலியவற்றிற்கு, பி.எச். தைலம் உபயோகிப்பதால் பூர்ண குணம் கிடைக்கிறது. இவ்வியாதிகளுக்கு உடனடியான குணம் அளிக்கக் கூடிய ஒரே மருந்து. விலை ரூ. 3-0-0. உட்கொள்ளும் மருந்து ரூ. 2-0-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

வீரியம்

தங்கம், வெள்ளி, கஸ்தூரி, பவழம் முதலியவற்றால் தயார் செய்த விகரின் உபயோகிப்பதால் இழந்த வீரியத்தைத் திரும்பப் பெறலாம். வீரிய மிழந்து, ஞாபக சக்தியின்றி, மனச் சோர்வுள்ள வாலிபர்களுக்குப் புத்துயிரளிக்கிறது. நரம்புகளைப் பலப்படுத்தி, புதிய ரத்தத்தை அபிவிருத்தி செய்கிறது. வேண்டிய அளவு வாழ்விற்குச் சுகமளிக்கிறது. சாதாரணம் விலை ரூ. 3-0-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

ஆஸ்த்மா

க்ஷயம் போன்ற எல்லா சுவாசகோச வியாதிகளும் ஒரேநாளில் குணப்படுத்தப்படுகின்றன. முறைப்படி ஆஸ்மோலா, ஒரு பாட்டில் உட்கொண்டால் உபாதையுற்ற சுவாசக் கருவிகள் குணம்பெற்று இயற்கை நிலை அடைகின்றன. ரூ. 3-0-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்.

KAVIRAJ R. N. CHAKRAVARTHI

Ayurvedha Sasthri (K. M.)

24, Debendra Ghose Road, Bhowanipore

CALCUTTA, 25.

Telephone : South 308

Stockists:

Messrs. APPAH & CO., 286, China Bazaar Road, Madras.

198060
19806

பார்லிக் கஞ்சி தயாரிக்க சுலபமான முறை

இரண்டு டீஸ்பூன் பார்லியை சிறிது ஜலத்தில் பசைபோல் கரைத்து, பின் இரண்டு டம்ளர் ஜலத்தில் போட்டு ஐந்து நிமிஷம் நன்றாகக் கொதிக்கவைக்கவும். பின்னர் இறக்கி ருசிக்கு வேண்டிய உப்பு அல்லது சக்கரை சேர்த்துப் பருகவும். இவ்வளவு சுலபத்தில், ஐந்தே நிமிஷத்தில், ஓர் ருசியான சிறந்த பானத்தைத் தயாரிக்கலாம். வியாதியுற்றோ குணப்படும் தருவாயிலோ உள்ள பலஹீனருக்கு இது சிறந்த உணவு. *பியூரிடி பார்லி* புஷ்டியான தானியங்களினின்றும் தயாரித்து காற்று புகாமல் தகரடப்பாக்களில் அடைக்கப்பட்டிருக்கிறது. ஒரு பங்கு பியூரிடி பார்லி எட்டு பங்கு அரிசி பார்லிக்கு ஈடாகும். இதனால் எவ்வளவு நேரம், சிரமம் மிச்சமாவது என்று நினைத்துப்பாருங்கள்.

பியூரிடி
இந்தியன் பார்லி

AYBX 1116

உயிர்ப்பிச்சையளிக்கும் லிவர்க்யூர்!

ஜம்மியின் லிவர் க்யூர்

38 வருஷங்களாக ஆயிரக்கணக்கான குழந்தைகளை அகாலமரணத்தினின்றும் காப்பாற்றியிருக்கிறது. குழந்தைகளின் சுரல் குணக்கட்டி கோளாறுகளுக்கு கைகண்ட ஔஷதம்.

ஜம்மி வெங்கடரமணய்யா & சன்ஸ், தலைமை ஆபீஸ்: மைலாபூர், மதராஸ்.

லிவர்க்யூர் பிராஞ்ச் ஆபீஸ்,
பெரியதெரு, கும்பகோணம்.

●

LIVER CURE Branch, Office
Parekh Mansion, Sandhurst Road (West).
BOMBAY 4.

தி ஜெனரல் அஷ்யூரன்ஸ் ஸொஸைடி லிமிடெட்

(ஸ்தாபிதம் 1907)

சென்னை டிவிஷனல் ஆபீஸ்: 304, தம்புசெட்டித் தெரு, மதராஸ் 1.

முற்றிலும் தேசிய ஸ்தாபனம்

அமுலிலிருக்கும் பாலிஸிகள் சுமார்		....	ரூ.	20,00,00,000
ஆயுள் நிதி	,,	....	ரூ.	2,00,00,000
மொத்த ஆஸ்திகள்	,,	....	ரூ.	2,20,00,000
உரிமையாளர்களுக்கு கொடுக்கப்பட்ட தொகை	,,	....	ரூ.	1,00,00,000

சேர்மென்: ஸ்ரீ பி. என். ஜலான் (ஸூராஜ்மல் நாகர்மல்) கல்கத்தா.

தென்னிந்தியாவில் கிளை ஆபீஸ்கள்:

மதராஸ், மதுரை, திருச்சினுப்பள்ளி, கோயம்புத்தூர், பெங்களூர், பெல்லாரி,
பெஜவாடா, & கொழும்பு (இலங்கை) மற்றும் எல்லா முக்கிய பட்டணங்களிலும்
— இன்ஸ்பெக்ஷன் ஆபீஸ்கள் இருக்கின்றன. —

A. V. S. டாப்பியோக்கா கிழங்கு மாவுகள் சுத்தமாயும் சுகாதார முறைப்படியும் நீண்ட நாள் அனுபவத்தில் தயாரிக்கப்பட்டவை. அவைகள் கலப்பில்லாதவை யென்பதற்கு அத்தாக்ஷி மைக்ராஸ்கோப் என்னும் கண்ணாடி மூலம் பரீக்ஷை செய்து நாணயமான டாப்பியோக்கா மாவு என்று சர்டிபிகேட் பெற்றிருக்கிறோம். போண்டா, பஜ்ஜி, முறுக்கு, ஓமப்பொடி, சர்க்கரை சேவு, தோசை, ஹல்வா, மைசூர்பாகு, பால்கோவா, பிஸ்கட், கேக், ஓப்பிட்டு, சேமியா, ஜவ்வரிசி, மிட்டாய் தினுசுகளும் இன்னும் வேண்டிய தின்பண்டங்களும் பலகாரங்களும் தயாரிக்கலாம்.

எங்களிடம் முதல் தரமான ஜவ்வரிசி, ஈரோடு சேலம் மஞ்சள் ரகங்கள், No. 1 மஞ்சள் தூள், கடலை எண்ணெய், சுருட்டுக்கும் பீடிக்கும் வேண்டிய புகையிலை ரகங்கள், மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும். 4 அந்தர் எடை போடக்கூடிய பைபில்ட் வேயிங் மிஷின் தராசும் சப்ளை செய்கிறோம். கேட்லாக் வேண்டுவோர் எழுதவும். ஜவ்வரிசி தயாரிக்கும் முறை அடங்கிய புஸ்தகம் வேண்டுவோர் ரூ. 1—0—0 அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். மற்ற விபரங்களுக்கும் சாம்பிள்களுக்கும் எழுதவும்.

A. V. சுப்ரமண்யம்

A. V. S. டாப்பியோக்கா பிளவர் மில்ஸ் & மஞ்சள் எண்ணெய் சப்ளையர்கள்,
புகையிலை ஹோல் ஸேல் லைசென்ஸ்தார்கள்,
ஈரோடு (S.I.Ry.) தந்தி: "INSAF"

அற்புத மருந்துகள்

மூலிகைகளிலிருந்து தயாரிக்கப்படுபவை. பயனில்லையேல் பணம் வாபஸ்.

செமினியா:—(வைடமின் டானிக்) வீரியத்திற்கும், மன சுறுசுறுப்புக்கும் கை கண்ட மருந்து. கெட்ட ரத்தம், சருமக் கோளாறு, தூக்கமின்மை, மன, தேகச் சோர்வு முதலியவற்றுக்குத் தலை சிறந்த மருந்து. நரை மயிரையும் நிரந்தரக் கறுப்பாக்குகிறது. ஒரு முழு முறைக்கு ரூ. 7—0—0.

குஷ்டம், வெண் குஷ்டம்:—இதை உபயோகித்து ஹக்கீம்ஸ் டாக்டர்கள் நாட்டு வைத்தியர்களால் குணப்படுத்த முடியாத நோயிலிருந்து சுகம் பெறலாம். விலை ரூ. 3—0—0.

நரை மயிர் நிவாரணி:—ஆயுர்வேத முறையால் தயார் செய்யப்பட்ட எங்கள் பிரைனியா வாசனைத் தைலம் உங்கள் நரை மயிருக்கு இயற்கையான கரு வர்ணத்தை அளிக்கிறது. மூளைச் சோர்வை ஓட்டி ஞாபக சக்தியை விருத்தி செய்கிறது. நரை மயிர் கொஞ்சமாக இருந்தால் ரூ 2—8—0 அதற்கு மேற்பட்டிருந்தால் ரூ.3—8—0 எல்லாம் நரையாயிருந்தால் ரூ.5—0—0.

N. B. பார்சலில் எங்கள் பார்மஸியின் பெயர் இல்லாவிட்டால் அதை வாங்காதீர்கள்.

பீகார் மாகாண மாஜி மந்திரி குரு ஷலாய்லால் எழுதுகிறார்.

பிரைனியா தலை மயிர்த் தைலத்தை உபயோகித்து, பயனடைந்தேன். குணப்படுத்தும் தன்மை நிறைய இருக்கும் இம் மருந்து மூளையைக் குளிர்ச்சியாக இருக்கச் செய்வதுடன் தலை வலியையும் உடனே போக்குகிறது. ஸ்நானம் செய்த பிறகுங்கூடத் தைலத்தின் மணம் போவதில்லை. இதைப் போன்ற தைலத்தை நான் பார்த்ததே இல்லை. நரை மயிருக்கு இது மிகவும் உபயோகமானது

Baidya Raj Brij Kishore Ram

RANIGUNJ P. O.

(BURDWAN)

விசேஷ சலுகை

மிகவும் குறைந்த விலையில் சிறந்த "ஸ்விஸ் மேக்" கைக் கடிகாரம். அநுபவ பூர்வமான திறமை வாய்ந்தது. மிக உயர்ந்த ரகக் கருவிகளால் ஆக்கப் பெற்றதும் ஒவ்வொன்றும் 8 வருடங்களுக்கு உத்தரவாதமுள்ளனவும் 'பிளாஸ்டிக பாண்ட்' உடன் கூடியது

No 113—வளைவு வடிவம்.

பிரகாசமான க்ரோமியம கேஸ் ... Rs. 40/-
உயர்ந்த ரகம் ... Rs. 45/-
ரோல்ட் கோல்ட் கேஸ்
(10 வருட கியாரண்டி) ... Rs. 60/-
15 ஜுவல்ஸ் க்ரோமியம் கேஸ் ... Rs. 75/-
15 ஜுவல்ஸ் ரோல்ட் கோல்ட் ... Rs. 90/-

No. 114—'டான்னோ' வடிவம்.

பிரகாசமான க்ரோமியம் கேஸ் ... Rs. 42/-
உயர்ந்த ரகம் ... Rs. 46/-
ரோல்ட் கோல்ட்
(10 வருட கியாரண்டி) ... Rs. 62/-
15 ஜுவல்ஸ் க்ரோமியம் கேஸ் ... Rs. 76/-
15 ஜுவல்ஸ் ரோல்ட்கோல்ட் கேஸ் ... Rs. 92/-



No. 115—மெல்லிய தட்டை வடிவம்

க்ரோமியம் கேஸ் ... Rs. 24/-
,, உயர்ந்த ரகம் (7 ஜுவல்ஸ்) ... Rs. 30/-
15 ஜுவல்ஸ் க்ரோமியம் கேஸ் ... Rs. 38/-
,, ரோல்ட் கோல்ட்
(10 வருட கியாரண்டி) ... Rs. 75/-
,, வாடர் புரூப் க்ரோம் ... Rs. 75/-

No. 116— சமகோணச் சதுர வடிவம்.

க்ரோமியம கேஸ் ... Rs. 38 -
,, (உயர்ந்த ரகம்) ... Rs. 42/-
15 ஜுவல்ஸ் க்ரோமியம் கேஸ் ... Rs. 65/-
,, ரோல்ட் கோல்ட்
(10 வருட கியாரண்டி) ... Rs. 85/-

ஸ்திரீகளின் கைக்கடிகாரம்

மேற்கண்ட எவ்வித வடிவிலும் கிடைக்கும் (12½% அதிகப்படி)

அலாரம் டைம்பீஸ்

Rs. 18/-. உயர்ந்த ரகம் Rs. 22/-

பாக்கிங் தபால் செலவு வேறு.

மேற்கண்டவற்றில் இரண்டு வகைகளுக்கு ஆர்டர் செய்பவர்களுக்கு தபால்செலவு முதலியன இல்லை

PIONEER WATCH CO.

Post Box No. 11428, CALCUTTA.

Show Room 318A, Chittaranjan Avenue.

ராஜா தயாரிப்புகள்



தபால் செலவு அணு 14 தனி

•

தேவையுள்ளவர்கள் 800 ஆபரணங்களின்
தினுசுகள் கொண்ட காட்லாக்குக்கு
எழுதவும்

•

ராஜா கோல்டு கவரிங் கோ.

ராஜா பில்டிங்ஸ் :: த. பெ. No. 22

மசூலிப்பட்டிணம்.

பொருளடக்கம்

சர்வதாரி
மலர் 7

ஆடி
இதழ் 12

ஆண்டு மலர்	7
அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள் ராமய்யா	9
சங்கப் பலகை	13
விமர்சனம்	15
புயல் கிட்டு	17
குழந்தை மனம் க. கணபதி	25
பொன் செய்யும் மருந்து எம். எஸ். கமலா	30
கலையை வளர்த்த காதலன் நஜ்மா	43
தங்க ராமன் வே. ரங்கராஜன்	48
ஷிஷு பித்யா பன் டாக்டர் வே. ராகவன்	53
எனது லண்டன் பிரயாணம் M. S. V. தாதம்	59
நடன கலா கே. சுந்தரம்மாள்	65
நாட்டியக் கலை கலாதாஸன்	81

குறிப்பு :—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே, அவைகளுக்குப் பத்திராசிரியர் பொறுப்பாளியல்ல.

காவேரி

சர்வதாரி மலர் 7	"சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—" பாரதியார்	ஆடி இதழ் 12

ஆண்டு மலர்

ஆண்டு மலர் இதழ் விட்டு வருகிறது. பூத்து வாசகர்கள் கைக்குக் கிடைக்க ஆவணி 15-உ ஆகும். துரிதப்படுத்த முயன்று வருகிறோம். ஆனால் ஆவணி இதழ் வழக்கம்போல் 1உ-யே வாசகர்களுக்குக் கிடைக்கும்.

வாசகர்களுக்கு ஒரு சந்தோஷச்செய்தி. கால நிலையை உத்தேசித்தும் எளிய வாழ்க்கை நடத்தும் வாசகர்களும் வாங்கி ரசிக்கவும் மிகவும் குறைந்த விலையில் மலரை வழங்க உத்தேசித்துள்ளோம். வாழ்க்கைக்குத் தேவையான பண்டங்களின் விலை எப்படி விஷம்போல் ஏறிக் கொண்டு போகின்றனவோ அதேபோல் ஆர்ட் காகிதம் முதலியன குதிரைக் கொம்பாகி, கண்ட விலைக்கு விற்கப்படுகிறது. எனினும் மலரின் வசீகரம் குறையாமலும் பொருள் நிறைந்துமிருப்பதை மட்டும் கருத்தாகக் கொண்டு மலரைத் தயாரித்து வருகிறோம். குறிப்பிட்ட பிரதிகளே அச்சிடுவதினால் மலர் வேண்டுவோர் தாங்கள் வசிக்கும் ஊரிலுள்ள ஏஜண்டிடமோ அல்லது நமது தலைமைக் காரியாலயத்துக்கோ எழுதி, தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

வே. சாரநாதன்

ஆசிரியருள் மாணிக்கம் என்றால் அது காலஞ்சென்ற வே. சாரநாதனுக்குத்தான் ஒவ்வும். கலைக்கென்றே வாழ்வை அர்ப்பணித்த பெரியார் அவர். திருச்சி தேசீயக் கல்லூரியிலிருந்து கொண்டு அவர் செய்ததொண்டு அளவிடவொண்ணாதது. தூய உள்ளம் படைத்த இவ்வறிஞர் தேச விடுதலை இயக்கத்திற்குக் கல்வி வாயிலாகப் பெரும் ஆதரவு அளித்து வந்திருக்கிறார். தன்னலம் என்பதை அறவே ஒழித்து வாழக் கற்றுக் கொண்ட நமது தேசமக்களுள் இவருக்குப் பெரிய ஸ்தானம் உண்டு. கிறிஸ்துவப் பாதிரிமார்கள் மட்டுமே கல்வித் துறையில் ஈடுபட்டுச் செய்துவந்த கைங்கரியத்தை ஹிந்து என்ற உணர்ச்சியுடன் தாம் ஏற்று அவர்களுக்கு நிகராகக் கல்லூரி நடத்திவந்தார். திருச்சி தேசீயக் கல்லூரி இன்று பிரபலமாக விளங்குகிறதென்றால் அதற்கு அடிப்படை நமது ஆசிரியர் வே. சாரநாதன் அவர்கள் முயற்சியேயாகும். தம் பொருள் அனைத்தையும் அக்கல்லூரிக்கே அர்ப்பணித்து விட்டார் என்பதில் ஆச்சரியப்பட இடமில்லை.

தமிழன்னை இவரை ஆட்கொண்டாள். வே. சாரநாதனுக்குத் தமிழில் இருந்த ஆர்வம் தமிழ் நாட்டில் வேறெவருக்கும் இருந்திருக்க முடியாது. எதிலும் ஆழ்ந்து மூழ்கிச் சுவைக்கும் தன்மையுடையவர் வே. சாரநாதன். அவர் எழுதிய கட்டுரைகளை நம் காவேரியிலும் வாசகர்கள் சுவைத்திருப்பார்கள் என்பது திண்ணம்.

இப்பேராசிரியரின் மறைவு நாட்டிற்கே பெருத்த நஷ்டமென்று கூறுவது மிகையாகாது.

ராஜா ஸர் அண்ணாமலைசெட்டியார்

கொடை வள்ளல் ராஜா ஸர் அண்ணாமலை செட்டியார் காலமானதைக் குறித்து வருந்துகிறோம். கல்விக்கு அவர் செய்த கொடை பொன் எழுத்துக்களால் சரித்திர ஏடுகளில் குறிக்கப்பெற வேண்டியவை. அவருடைய பரந்த நோக்கத்தைப் பின்பற்றித்தான் வட நாட்டில் ஸர் ஹரிசிங் கோர் முதலானவர்கள் பெரிய கல்வி ஸ்தாபனங்கள் நிர்மாணிக்க ஆரம்பித்தனர். வித்யாதானத்திற்கு வழிகாட்டியாகச் சமீபகாலத்தில் விளங்கிய ராஜா ஸர் அவர்களின் மறைவு தமிழ்நாட்டிற்குப் பெருங்குறையாகும். அவர் கொடையினால் ஆக்கப்பெற்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகம் உயரிய நோக்கத்துடனும், தூய்மையான எண்ணங்களுடனும் நன்கு நடத்தப்பெற்றால் ராஜா ஸர் அவர்களுக்குச் சிறந்த ஞாபகார்த்தச் சின்னமாக அமைவதுடன், அவருடைய ஆன்மாவின் பிராபல்யத்தை வருங்கால சந்ததியினர் உணர்ந்து கொள்ள உதவுவதாகும்.

இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

1948-ஆம் ஜுன்-மீ 30-உ முடிய உள்ள ஸ்டேட்மெண்ட்

பொறுப்புகள்	ரூ.	அ.	பை.	ஆஸ்திகள்	ரூ.	அ.	பை.
செலுத்திய மூலதனம்	18,75,000	0	0	கடன்களும் அட்வான்ஸ்களும்	2,32,90,493	1	3
ரிஸர்வ் நிதி	10,00,000	0	0	பாங்க் கட்டிடங்களின் பொறுமானம்	1,89,275	5	0
வரிகளுக்கு ஒதுக்கியது	2,75,000	0	0	உபகரணங்கள் (Equipments)	2,21,371	5	11
டிபாஸிட்டுகளும் மற்ற இதர பொறுப்புகளும்	3,55,30,697	7	8	வசூலாக வேண்டிய பில்லுகளும், கமர்ஷியல் க்ரெடிட்டுகளும் (per contra)	23,99,161	10	4
வசூலாக வேண்டிய பில்லுகளும், மற்ற கமர்ஷியல் க்ரெடிட்டுகளும்	23,99,161	10	4	சில்லரை இனங்கள்	4,70,912	0	7
சில்லரை இனங்கள் (பிராஞ்சு பற்று வரவு தீர்வு உள்பட)	5,65,533	11	5	இன்வெஸ்ட்மெண்ட்கள் (கவர்ண்மெண்ட் பிராமிஸரி நோட்டுகள் முதலியன)	79,75,130	9	0
லாப நஷ்ட கணக்குபடி லாபம்	2,05,523	9	3	கையிருப்பு (ரொக்கமும், பாங்குகளில் இருப்பும்)	73,04,572	6	7
மொத்தம்	4,18,50,916	6	8	மொத்தம்	4,18,50,916	6	8

மதராஸ், 1948-ஆம் ஜூலை-மீ 8-உ

எஸ். என். என். சங்கரலிங்கய்யர்
மானேஜிங் டைரக்டர்

ராமய்யா

சென்னையில் ஒரு தேசிய சங்கீதக் கழகம் அமைப்பதற்காக, சர்க்கார் கௌன்சில் ஒன்றை நிறுவியிருக்கின்றனராம். உத்தேசிக்கப்பட்டுள்ள கழகம் ஓர் உயர் நிலைக் கல்லூரியாக இருக்க வேண்டும் என்றும், இங்கு டிகிரி பாடங்களும், சங்கீத ஆராய்ச்சிகளும், ஆசிரியர்களுக்குப் பயிற்சியும் வழங்கவேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கிறதாம். இக் கல்லூரியில் ஒவ்வொரு வகுப்பிலும் சுமார் 40 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவாராம். அக்டோபர் மாதத்தில் இக்கல்லூரி திறக்கப்படுமாம்; வாடகைக்கு ஓர் கட்டிடம் எடுத்துக்கொள்ளப்பட்டு இக் கல்லூரி தற்காலிகமாக அக் கட்டிடத்தில் அமைக்கப்படுமாம்.

என்ன வேகம், என்கிறான் அம்மாஞ்சி! அந்தி மயல் கொண்டாள், அப்போதே சூல் கொண்டாள், அடுத்த நாள் காலையில் பிள்ளை விறகு ஒடிக்கப் போனானும்! சங்கீத சம்பந்தமாக, சர்க்காரின் ஆதரவு அபரிமிதமாகிவிட்டது என்றே சொல்லலாம் போலிருக்கிறது! ஆனால் அம்மாஞ்சிக்கும் எனக்கும் பலவித சந்தேகங்கள் ஏற்பட்டுவிட்டன. கேள்விகளைக் கேட்டு விடுகிறோம். எங்களைப் பொருட்டாகப் பாவித்து ஒருவரும் ஜவாபு சொல்லப் போவதில்லை; அது நிச்சயம். ஆனாலும் அன்பர்களுக்கு மனோபாவம் செல்லுமாறு தர்க்கங்கள் ஏற்படுமல்லவா? அது போதும்!

“தேசிய சங்கீதக் கழகம்” என்கிற மொழி பெயர்ப்புக்கு மூல வாக்கியம் ஆங்கிலத்தில், “National Academy of Music” என்று தெரியவருகிறது. ஆதலால் “தேசிய” என்ற பெயருரிச்சொல் சரியான இடத்தில் அமைக்கப்படவில்லை எனலாம். மேற்கூறியபடி வைத்துக் கொண்டால், தேசிய சங்கீதத்துக்காகக் கழகம் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக அர்த்தமானாலும் ஆகலாமல்லவா? ஆனால் அப்படியல்லவென்று அம்மாஞ்சி அபிப்பிராயப்படுகிறான். சங்கீதத்துக்காகத் தேசிய கழகம் ஒன்றே ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பது அவன் கருத்து. இந்த வியாக்கியானம் சரிதானோ? உங்கள் அபிப்பிராயம் என்னவோ?

இதைப் பற்றி ஏன் இவ்வளவு சிந்தனை என்பீர்களோ? கவனியுங்கள்! நமது நாட்டில் உள்ள சங்கீதம், சுமார் முப்பது வருஷங்களுக்கு முன்வரை, இரண்டு வகைப் பட்டுள்ளதாக விருந்தது; அதாவது, கர்னாடக சங்கீதம் (தென் இந்திய சங்கீதம்) என்றும், ஹிந்துஸ்தானி சங்கீதம் (வட இந்திய சங்கீதம்) என்றுமே. பிறகு புதிய இயக்கங்களின் காரணத்தால் இரண்டு வகுப்புகளிலும் நூதன சம்பிரதாயங்கள் தலைப்பட்டதால், உட்பிரிவுகள் ஏற்பட்டன. வட இந்திய சங்கீதத்தில் கவி ரவீந்திரநாத தாகூர் அமைத்த வங்காள சம்பிரதாயம் என்றும், பண்டித விஷ்ணு திகம்பர், உஸ்தாத்கள் அப்துல்கரீம்கான், அல்லாயுத்தீன்கான், டைகர் பியாஸ்கான் முதலியவர்கள் கைப்பற்றிய ஆக்ரா சம்பிரதாயம் என்றும், பண்டித விஷ்ணு நாராயண் பாட்கண்டே ஸ்தாபிதப் படுத்திய லக்னௌ சர்வ கலாசாலை சம்பிரதாயம் என்றும் உட்பிரிவுகள் கிளம்பின. கர்னாடக சங்கீதத்தில் சாஸ்திர சம்பிரதாயமான (Scientific) சங்கீதம் என்றும், மகிழ்ச்சி சம்பிரதாயமான (Popular) சங்கீதம் என்றும், இரண்டு உட்பிரிவுகள் கிளம்பின, இதனிடையே தமிழ் இசை யென்றும் ஒன்று ஏற்பட்டது. சாஸ்திர சம்பிரதாயத்துக்கு விரோத பதம், அசாஸ்திரியம் என்றும் (Unscientific), மகிழ்ச்சிக்கு விரோத பதம் வெறுப்பு (Unpopular) என்பதையும் உட்பிரிவுக் கிளர்ச்சிகளில் ஈடுபட்டவர் மறந்துவிட்டனர் எனினும், மகிழ்ச்சிச் சங்கீதம் பெரும்பாலும் அசாஸ்திரிய

முறைகளையே கைப்பற்றிவிட்டது; பயிற்சிக்கும், உழைப்புக்கும் லாயக்கில்லாதவர்களெல்லாரும் மகிழ்ச்சிச் சங்கீதத்தைக் கையாண்டு, நாடகமேடை, பேசும் படம், ரேடியோ நிகழ்ச்சிகள்—இவைகளில் இதைப் பெருக்கிவிட்டனர். ஆகவே தற்சமயத்தில் ''சங்கீதம்'' என்கிற கலையில்,

"ஆடு தின்னாத இலையில்லை
குரங்கு தின்னாத காயில்லை
அவியலுக்கு இடாத கஷ்ணமில்லை''

என்கிற மலையாள பாஷைப் பழமொழி போல, வட இந்திய சங்கீதம், தென்னிந்திய சங்கீதம், நாடக சங்கீதம், சினிமா சங்கீதம், இன்னும் நாட்டிலுள்ள சகல பாணிகளும் செலாவணியாய் விடுகின்றன. தேசிய சங்கீதக் கழகத்தில் எல்லா வித சம்பிரதாயங்களுக்கும் புத்துணர்ச்சி ஏற்படப்போகிறதா என்பது முக்கியப் பிரச்னை.

இத்தகைய புத்துணர்ச்சியே முக்கிய கருத்தாகவிருந்தால், தேசீய வளர்ச்சி ஏற்படுமோ என்னமோ; கலை வளர்ச்சி ஏற்படுமோ என்பதுதான் தெரியவில்லை. எல்லாத் தேசங்களிலும் தேசீய வளர்ச்சியின் முன்னோக்கம் ஒன்றுபடுத்துவதேயல்லவா? சங்கீதத்தில் பிரிவினைகள் லபிப்பிது சகஜம் என்பதை உணர்ந்தவர்கள்—அதாவது பொதுஜனங்களின் வாழ்க்கை நடைகளும், முக்கிய இச்சைகளுமே (Socio-Economic forms and basic needs) எல்லாக் கலைகளின் மலர்ச்சிக்கும், மறுமலர்ச்சிக்கும், உணர்ச்சிக்கும் புத்துணர்ச்சிக்கும் ஏதுவாகவும் ஆதாரமாகவும் இருந்துவரும் என்பதை அங்கீகரிப்பவர்கள்—இத்தகைய பிரிவினைகளை இயல்பாகவே விட்டு, வரப்பு வெட்டி வாய்க்கால்களைச் சீர் திருத்தி நீரோட்டம் பெருக்குவதே முறையென்று அனுஷ்டித்தல் கலாபிவிருத்திக்குச் சிறப்பாகும். பிரிவுகளைத் தடுத்து, யாவற்றையும் ஓரிடத்தில் சேமித்து, கதம்பக் குழம்பாக்கி, அதன் மூலம் தேசிய வளர்ச்சியும் கலைப் பெருக்கும் வாய்க்கும் என்று கருதினால், —இந்த வாக்கியத்தை முடிக்கவேண்டாமே! நீங்களே கழகத்தின் ஜாதகத்தைக் கணிக்கலாமே!

சங்கீதத்தை மறுமலர்ச்சி செய்ய முய்லும் பெரியோர்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, கர்னாடக சங்கீதத்தின் பிரத்தியேக அமைப்பு. சுமார் 50 வருஷங்களுக்கு முன்வரையில் கர்னாடக சங்கீதம் பிரபுக்களுக்கும், அரிய நூல்களை அறிந்த பெரியோர்களுக்கும், கலைஞர்களுக்கும் உரியதாக இருந்ததேயொழிய, Common man எனப்படும் நாடோடி மனிதனுக்குப் பொருத்தமாய் இருக்கவில்லை. நாடோடிக்கும் இதில் சிரத்தையும் ஊக்கமும் இல்லாமலிருந்தது. அலங்கார ரீதியாகவே இந்தச் சங்கீதம் சுமார் 40 வருஷங்களுக்குமுன் வரையில் இருந்தபடியால் நாடோடி ஜனங்கள் இந்தக் கலையில் தம் புத்தியைச் செலுத்தவில்லை. மறுமலர்ச்சி இயக்கமும் நாடோடியின் மனோபாவங்களைப்பற்றிக் கவனம் செலுத்தவில்லை. முற்றிலும் குரு சிஷ்ய சம்பிரதாயத்திலேயே சங்கீதப் பயிற்சி என்பது குடிகொண்டிருந்தபடியால், கலையைக் கற்கவும் ஆட்கள் திரளவில்லை. இவ்வித சந்தர்ப்பங்களினால் சங்கீதத்தின் தன்மையும் கடினமான சாஸ்திர முறையைத் தழுவி நின்றது. எனினும், கீர்த்தனைகள், பதங்கள், ஜாவளிகள், வர்ணங்கள், தில்லானாக்கள் போன்ற உருப்படிகளைச் சிருஷ்டித்த மகான்கள் கர்னாடக சங்கீதத்தின் திரையை விலக்கி, அதை அப்புறப்படுத்தி, சங்கீதத்தின் அழகையே விமரிசைப்படுத்தியதாக நாம் சொல்லலாம். தியாகய்யர், தீக்ஷதர், சாமா சாஸ்திரியார், க்ஷேத்திரஞ்யர் முதலிய பெரியோர்கள் இயற்றிய கீதங்கள் எப்பொழுது வெளிக்கிளம்பினவோ அப்பொழுதே நாடோடி ஜனங்கள் கர்னாடக சங்கீதத்தின் அழகு, பெருமை, அலங்காரம், அனைத்தையும் செவி திறந்து கேட்டுக் களிக்கலானார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் கச்சேரி பத்ததி என்ற சிரேஷ்டமான இயக்கத்தை ஆரம்பித்த பெரியோர்களைப்பற்றி நாம் புகழவேண்டும். கோயமுத்தூர் ராகவய்யர், மகா வைத்தியநாதய்யர், சரப சாஸ்திரியார், பட்டணம் சுப்பிரமணிய அய்யர், பூச்சி அய்யங்கார், திருக்கோடிகாவல் கிருஷ்ணய்யர், கோவிந்தசாமி பிள்ளை, வீணை தனம் அம்மாள்— இவர்களெல்லோருக்கும், இன்னும் அநேக பெரியோருக்கும், கர்

ர்நாடக சங்கீதத்தை நாடோடி ஜனங்கள் கேட்டு அனுபவித்து மெச்சவும், ரசிக்கவும், செய்யும்படி அனுஷ்டானத்துக்குக் கொண்டு வந்த கச்சேரி சம்பிரதாயத்துக்காக அளவற்ற கீர்த்தி செலுத்த வேண்டும். இவர்கள் முன்வந்த காலத்தில்தான் தென்னிந்தியாவில் சபைகளும் ஏற்பட்டன. சபைகள் மூலமாக நாடோடி ஜனங்களும் சங்கீத அனுபவத்தில் ஊக்கம் எடுத்துகொண்டதாகவே சொல்லலாம்.

ஆகவே கர்னாடக சங்கீதத்தின் பெருமை சுத்தமான ராகபாணிகள், அவைகளில் அமைக்கப்பட்ட உருப்படிகள், அவைகளை வின்யாசம் செய்யும் குருசிஷ்ய சம்பிரதாயத்தின் மூலம் ஏற்பட்ட நடைகள், கமகப் பொருத்தங்கள், இவைகளுக்குச் சாதனமாகக் கைப்பற்றிய கச்சேரிபத்ததி, இவைகளில் அடங்கியுள்ளன. ஸ்தாபிதப்படும் கழகம் இவைகளை முற்றிலும் கைப்பற்றுமா? கிளைப்பிரிவுகளையும் ஆதரித்து, மூல வஸ்துவான சாஸ்திரத்தைப் பாதுகாக்குமா? எவ்விதப் பயிற்சியிலும் மேன்மையதாகிய குருசிஷ்யப் பயிற்சியைக் கையாளுமா? எவ்விதக் கலைக்கும் முதன்மையதான கல்பனா சக்தியையும், மனோபாவத்தையும் பெருக்குமா?

* * *

தமிழ் நாட்டில் மழையில்லாமல் விவசாயத்துக்கு நீர்ப்பஞ்சம் ஏற்பட்டதற்குக் காரணம் ஜனங்கள் அநேக பாபங்களைச் செய்வதால் என்று நமது மாகாண பிரதம மந்திரி சொல்லிவிட்டார். பூமி படைக்கப்பட்ட காலம் முதல் பாபம், புண்ணியம் இரண்டும் கலந்து இருக்கின்றனவென்றும், அநேக பாபிஷ்டர்கள் இருக்குமிடத்திலும் ஒரு புண்ணிய சிரேஷ்டர் இருந்தால் அந்தப்பிரதேசத்துக்குச் செழிப்பும் சிறப்பும் ஏற்படும் என்றும் ஹிந்துக்களுடைய அபிப்பிராயம். நமது பிரதமர் அதை அங்கீகரிக்கவில்லை போலும். நூற்றில் நூறுபேரும் புண்ணிய அனுஷ்டானத்தையே கைப்பற்றினால் தேசம் முழுதும் ராமராஜ்யமாய் விடுமே, அப்போது பிரதமருக்கே வேலையில்லாமல் போய் விடுமே! அல்லவா? இது நிற்க, மழையில்லாததால் துன்மார்க்கர்கள் மாத்திரமல்ல, சன்மார்க்கர்களுமல்லவோ கஷ்டப் படுகிறார்கள்? கடவுளுடைய திருவிளையாடலில், நல்லவர்களுக்கும் கெட்டவர்களுக்கும் பஞ்சம் பொதுவாகப்பீடித்தாலும்,அந்தப்பஞ்சம் கொடியவர்களுடைய நடவடிக்கைகளால் விளைந்தது என்னும் கொள்கை பரவினால் நல்லவர்கள் நல்ல வழியை நீடித்துக் கைப்பற்ற வேண்டிய அவசியமேயில்லாமல் போய்விடுகிறதல்லவா? நான் மாத்திரம் எதற்காக நல்ல நடவடிக்கையுடன் வாழ வேண்டும், எனக்கும் பஞ்சம் கொடியவனுக்கும் பஞ்சம், எனக்கும் துன்பம் அவனுக்கும் துன்பம், ஆதலால் நானும் பாபத் தொழில்களைச் செய்து அதன் மூலம் சுகமடையலாமே, என்கிற கொள்கை முற்றிவிட்டால்?

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு கதையைச் சொல்லுகிறேன்:— குழந்தை ஒருவன் தன் கைப்பெருவிரலை வாயிலிட்டு அடிக்கடி உறிஞ்சிக் கொண்டிருந்தான்; அந்தக் கெட்ட வழக்கத்தை நிறுத்தவேண்டி, அவனுடைய தாயார், "குழந்தை, விரலைச் சப்பினால் உன் வயிறு வீங்கிப்போம்; ஆகையால் அம்மாதிரி செய்யாதே" என்றாள். அதைக் கேட்டு குழந்தை திடுக்கிட்டு, விரல் உறிஞ்சுவதை நிறுத்திவிட்டான். சில நாட்கள் கழிந்தன. ஒரு தினம் அவன் வீட்டுக்குக் கர்ப்பந் தரித்த ஸ்திரீ ஒருத்தி வந்தனளாம். குழந்தை அவளைக் கண்டான். அவளுடைய பெருத்திருந்த வயிற்றைப் பார்த்துக்கொண்டே நின்றான். அதைக் கவனித்த அந்த ஸ்திரீயானவள், "என்னடா குழந்தாய், என்னையேன் அப்படி வைத்த கண் வாங்காமல் பார்க்கிறாய்" என்று கேட்டாள். அதற்கு அவன், "உங்களுடைய வீங்கின வயிற்றைத்தான் பார்க்கிறேன். எனக்குத் தெரியாதா? அது எப்படி அந்தமாதிரி ஆயிற்று என்று," என்றானும். அதைக் கேட்டு அந்த ஸ்திரீ ஸ்தம்பித்துவிட்டாள்! இவ்வளவு சிறிய வயதுள்ள குழந்தைக்கு இந்தமாதிரி விவகாரத்தை யார் சொன்னார்கள் என்று அவளுக்கு ஆச்சரியம். குழந்தையின் மனதில் தோன்றியது அவனுடைய தாயின் எச்சரிக்கை! ஆனால் அவன் சொன்ன விதத்தால் விபரீத அர்த்தத்துக்கு இடமாயிற்று.

* * *

சென்னையில் சர்க்கார் பஸ்களுக்கு டிக்கட் கட்டணம் ஒரே ரீதியாக இருக்குமென்றும் அதிக தூரத்துக்கு அதிகமாகவும் குறைந்த பிரயாணத்துக்குக்

குறைவாகவும் இனி இருக்காதென்றும் அமுலுக்கு வரும் போலிருக்கிறது. நாள் தோறும் பஸ்களில் போகிறவர்களுக்கு இந்தச் செய்தி நல்ல செய்தியாகவே இருக்கவேண்டும். சில்லறைக்காசுகளுக்காகத் துழாவும் பிரயாணிகளும் கண்டெக்டரும் பஸ்போக்குவரத்துக்கு அனுவசிய இடையூறுகளாகவே இருந்து வருகின்றனர். அணுக்கள் கணக்கில் கட்டணங்கள் ஏற்பாடாய் விட்டால் தொல்லையில்லாமலிருக்கும். கூட, பஸ் பிரயாணிகள் கட்டணத்துக்குரிய சில்லறைக் காசு மாத்திரமே செலுத்த வேண்டுமென்றும், ஒரு ரூபாய் நோட்டை யெடுத்துக்கொடுத்து, பாக்கிப் பணம் கொடு வென்று கேட்கலாகாது என்றும் ஏற்படுத்தினுல் மிகவும் சுகமாயிருக்கும். ஆகக்கூடி, பழக்கத்தில் தானுகவே வரவேண்டிய காரியமன்றோ இது? முன்ஜாக்கிரதையாகவே பஸ்ஸில் ஏறுமுன் வேண்டிய அளவான காசை மாத்திரம் கையில் எடுத்துக்கொண்டு ஏறும் வழக்கத்தை ஏற்படுத்துவது ஒன்றும் அசந்தர்ப்பம் அல்லவே. சில்லறைக் காசுகளுக்கோ எங்கும் பஞ்சம் காணுேம்-ஏன் அப்படிச் செய்யலாகாது? தோலைப் பிடித்து நிற்பவர்கள் நோட்டைக்கொடுத்துச்சில்லறை கேட்பதும், கிடைத்த காசில் ஒன்று இரண்டைக் கீழே போடுவதும், அதை யெடுக்க வேண்டி குனிந்து துழாவுவதும், அந்தச் சமயம் பின் பக்கத்தால் பின்னுல் இருப்ப வரையும், தலையால் முன்னுல் இருப்ப வரையும், கடாக் கன்றுபோல் முட்டுவதும், பஸ் பிரயாணத்தில் சகஜமாய் விட்டன. இத்தகைய சம்பவங்களைக் கூடியமட்டும் நிகழாமல் தடுப்பது பொது நலத்துக்குரிய நிபந்தனையேயாகும்—அல்லவா?



கடைசி பிரிட்டிஷ் இந்திய கவர்னர் ஜனரலும், புது இந்திய யூனியன் கவர்னர் ஜனரலும்

சங்கப் பலகை

நாவலந் தீவு
கலி யுகம்

சத்தியகாமனவர்கட்கு,

தங்கள் கடிதங் கண்டு மிகவும் மகிழ்வுற்றேன். உங்கள் நாட்டில் கல்விக்குத் தகுந்த சிறப்பளிக்கப்பட்டிருப்பதைக் கேட்டவுடன் என் உள்ளத்தில் ஓர் அமைதி ஓடிற்று. ஆனால் இவ்வமைதிக்கும் களிப்புக்குமிடையே ஒரு பெருஞ் சோக முகில் என்னைச் சூழ்ந்துவிட்டது. என் மனத்தின்மீது கவிந்துகொண்டிருக்கிற இவ்வளப்பரும் சோகம் என்றைக்கு அகலுமோ ஓர்ந்திலேன்.

நாட்டிலோ வறுமைக்கு எல்லையில்லை. இவ்வறுமைப் பேயைத் துரத்த வேண்டிய முயற்சிகளைச் செய்தாரில்லை. அதிகார வேட்டையாடுவதிலும் சுயநலத்தைக் கருதுவதிலும் அமாத்தியர்கள் பொழுது போக்குகின்றனர். மாந்தர்களின் அஞ்ஞான இருளைப் போக்கவும் வழி தேடினார்களில்லை. அறிவு வளர்ந்தால் பகுத்தறிவு தோன்றும்; பகுத்தறிவு விரிந்தால் தங்கள் நடத்தையைப் பொது மக்கள் கூர்ந்து நோக்குவார்கள் என்று அஞ்சி இத் தொலையாத நீளிரவில் வைக்கத் தீர்மானித்தார்களா?—தெரியவில்லை. உங்கள் நாட்டில் தெருவுக்கொரு பள்ளிக்கூடமென்று இயம்புகின்றீர்கள். படிப்பிற்காகச் சம்பளங்கூட வாங்குவதில்லை என்று சொன்னீர்கள். உபாத்தியாயர்கள் உன்னத நிலையில் இருக்கிறார்கள் என்ற செய்தியையும் எனக்கறிவித்தீர்கள் ஆனால் எங்கள் நாட்டில் ஆயிரக் கணக்கான ஜனங்கள் படிக்க விரும்புகின்றனர். அவர்களுக்கு வேண்டிய வசதிகளில்லை. ஏதோ நூறு வருஷங்களுக்கு முன் ஏற்படுத்தப்பட்ட சில பள்ளிக்கூடங்கள்தாம் இருக்கின்றன. இவைகளில் எத்தனை பேர் வாசிக்க முடியும் பாருங்கள். பள்ளிக்கூடங்களிலும்கூடத் தகுதியானவர்களுக்கு இடமில்லை. இந்தக் கட்சியைச் சார்ந்தவனா? அந்த வகுப்பைச் சார்ந்தவனா என்றெல்லாம் சிந்திக்கின்றனர். எல்லாச் சாதியார்களும் முன்னேற்றமடைய வேண்டியது உண்மைதான். ஆனால் அறிவாளிகளை எந்தச் சாதியினராயிருந்தாலும் போற்ற வேண்டியது கடமைதானே. எல்லோருக்கும் படிக்க வேண்டிய சந்தர்ப்பங்களையும் சூழ்நிலைகளையும் அமைத்துத் தர வேண்டிய உண்மையை அவர்கள் சாதிச் சழக்கு வெறியால் மறந்துவிட்டனர். அறிவுள்ளவர்களுக்கு ஒரு வழி வகுத்துத் தராவிட்டால், அவர்கள் வாழ்க்கையில் ஒருவிதக் கசப்பு ஏற்பட்டுவிடும். அக்கசப்பு, பல துறைகளில் வெளிக்கிளம்பும் என்பதை அவர்கள் அறியவில்லை. இவர்களே வகுப்புச் சண்டைக்கு வேண்டிய விதைகளைத் தூவுகின்றனர். விஷக் காற்றுக்கு வழி தேடினால், இது கடும் புயலுக்கும் காரண பாகும் என்ற உண்மையை மறக்க முடியுமோ? வகுப்புச் சண்டையால் வரும் கேடுகள் ஏட்டில் அகப்படுமோ? சரித்திரமோ வகுப்புணர்ச்சியோடு எழுதப்படுகின்றது; காப்பியமோ வகுப்புணர்ச்சியோடு அமைக்கப்படுகிறது; கவியோ சாதிச் சழக்குகளின் வேருக்கு நீர் பாய்ச்சுகின்றான்; ஓவியமோ வகுப்பு நோக்கத்தோடு தீட்டப்படுகின்றது; சங்கீதமோ வகுப்புணர்ச்சியில் பாடப்படுகின்றது. நல்லது, கெட்டது என்ற விஷயங்கள் எங்கள் நாட்டில் மறைந்துவிடும். நல்லது கெடுதலாக மாறும்; கெடுதல் நல்லதாக மாறும். எல்லாம் கட்சி வாதங்

களால் தீர்மானிக்கப்படுகின்றன. ஏதோ கணக்கில் வருகிற தவறுகளுக்குப் பரிகாரமாக நான்கும் ஐந்தும் பத்தென்ற தீர்மானத்தைக் கொண்டுவரப்போகிறார்களாம். கணக்கில் ஓர் ஒழுங்கு வேண்டாமா? பல பேர்கள் சேர்ந்து ஒன்றைச் சொன்னால் உண்மையாகி விடும் என்ற எண்ணத்தை நாட்டில் பரப்புகின்றனர். விஷயங்களை அலசிப் பார்க்கும் தன்மையை வேரூன்றாதபடி தடுக்கப் பார்க்கின்றனர். நாட்டில் தக்க கல்வி இல்லாததால், எதைச் சொன்னாலும் அதை ஜனங்கள் நம்பி விடுகின்றனர். பொய்யைப் பத்துத்தரம் திரும்பத் திரும்பச் சொன்னால் அது உண்மையாகி விடுகின்றது. இந்நாட்டில் கல்வித் துறையில் ஒருவர் மீது வைத்த சீற்றத்தால், ஒரு சாத்திரப் படிப்பிற்கே இடமில்லாமற் போய்விடும். அறிவுள்ளவர் வெளிநாட்டில் பிழைக்க வேண்டும். எங்கள் நாட்டில் பிறந்து வளர்ந்த உயர்ந்த ஞானத்தை அடைந்தவர்களைப் போற்ற மாட்டோம். அவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி விடுவோம். அந்தச் சாமர்த்தியம் எங்களிடத்தில் இருந்து வருகின்றது. விவேகம் ஆனந்தம் என்றெல்லாம் பேசுவோம். ஆனால் வேதாந்த சாத்திரத்திற்கு அங்கே இடமில்லாமற் போய்விடும், ஆராய்ச்சித் துறைகளில் அறிவாளிகளுக்கு இடமில்லை. அவைகளிலும் வகுப்புணர்ச்சியை ஓட விடுகின்றனர். அறிவுத்துறைகளில் சாதி மதம் பார்க்காது தகுந்த அறிவுள்ளவர்களையே நியமிக்க வேண்டும். அப்பொழுதுதான் அறிவுத்தாகம் தணியும். அப்பொழுதுதான் உண்மையான ஞானஒளி உண்டாகும். அந்த ஞான ஒளி கொண்டேதான் அஞ்ஞான இருளை மாய்க்க முடியும். பொறாமை போகவில்லை; ஆனால்மற்றவர்களைப் போல நல்லவனாக ஆகவில்லையே, என்ற விஷயத்தில் பொறாமைப் பட்டால் நலமாகும். போராட்டம் அகலவில்லையே? நற்செயல்களில் போட்டி போடலாமன்றோ? சீற்றம் அகலவில்லையே? நம்முடைய சிறுமைகள் கண்டு சீற்றம் அடையலாமன்றோ? ஆசை போகவில்லையே—உலகனைத்தையும் தன்மயமாய்ப் பார்க்கும் ஆசையை வளர்க்கலாமன்றோ. உணர்ச்சிகளை அழிக்க முடியாது, ஆனால் அவைகள் தக்கபடி ஓட வாய்க்கால்கள்வகுக்கலாம், என்றதங்கள் உபதேசத்தை மேற்கொண்டிருக்கிறோம். சாதிச் சழக்குகளை மாய்க்கக் கூடிய சங்கங்களை அமைத்து வர முயலுகிறோம். பிரபஞ்ச முழுவதும் ஒரு சரீரம். அச்சரீரத்தில் ஏதேனும் ஓரிடத்தில் குறைவு ஏற்படுமானால், மற்ற எல்லா இடங்களிலும் அந்நோய் பரவுமன்றோ? எங்களுக்காக நீங்களும் பிரார்த்தனை செய்ய வேண்டும். நாங்கள் குறைவடைந்தால் அக்குறைவு தங்களுக்கு வந்தே தீருமன்றோ? நல்ல எண்ணங்களை எங்கள்பால் செலுத்துங்கள். அவைகள் மூலம் நாங்கள் தூயநிலையை அடைய வழி தேடுவோம். எங்களை மறந்தால், உங்களையே மறந்ததாகும். ஒருவர் இன்னல் அடைந்தால் அகில சராசரங்களெல்லாம் அந்த இன்னலை அடையுமென்ற உபதேசத்தை எங்களுக்குச் சொல்லியிருக்கிறீர்கள். ஒரு முனகல் கேட்டாலும் சரி, ஒரு பெருமூச்செறிந்தாலும் சரி, ஒரு விம்மல் எழுந்தாலும் சரி, ஓர் ஓலம் கிளம்பினாலும் சரி, மாயக் கூத்தனின் இசை மண்டபத்தை நண்ணித் தெய்வ கானத்தைக் கெடுத்துவிடும். அத்தெய்வ கானம் அழிந்தால், ஒவ்வொரு உள்ளத்திலும் சோக ஒலிதான் கேட்கும் என்பதை அறிவீர்கள்; ஆதலால் எங்களுக்காக இறைவனை இறைஞ்சுவீர்களாக; இலக்கியத்தைப் பற்றித் தாங்கள் கொண்ட கருத்துக்களை எங்களுக்கெழுதுவீர்களாக.

பாஞ்சசன்னியம்

விமர்சனம்

தமிழுலகு:

திரு. எம். எஸ். மகாலிங்க முதலியார், தென்னவர் நிலையம், கோட்டாறு, தென் திருவிதாங்கூர். விலை ரூபாய் 2—0—0,

வெம்பகையில் ஒன்றை இகழவுங் கூடாது; பேரன்பினால் ஒன்றை வான ளாவப் புகழவுங் கூடாது; நடுவு நிலையி லிருந்துகொண்டு விருப்பு வெறுப்பின்றி ஆராய்ச்சி செய்தல் கற்றறிந்த மாந்தர் கடனாகும். 'தமிழுலகு' என்ற புத்தகத் தைத் தமிழ் நாட்டிற்குத் திரு எம். எஸ். மகாலிங்க முதலியார் வழங்கி யிருக்கிறார். இப்புத்தகம் நடுவு நிலையிலிருந்து எழுதப் பட்டதா? என்ற கேள்வியை ஒருவர் கேட்கலாம். 'இல்லை' என்ற பதில்தான் இப்புத்தகத்தைப் படிப்போரிடமிருந்து வரும்.

தமிழ்ப்பற்று இவரிடம் இருக்கிறது. உணர்ச்சி ததும்ப எழுதுகின்றார் தமி ழின் பண்டைப் பெருமையை மிக வியந்து பேசுகின்றார். தமிழ் நங்கைக்கு வேண் டிய அணிகளைத் தருகின்றார்.

"வள்ளுவனை முடியாய் வைத்து, கம்பக் குண்டலமணிந்து, சிந்தாமணி சூட்டி, காலிற் சிலப்பதிகாரம் கலகலவென்ன, மணிமேகலை மேகலையாக, சங்க நூற்க ளெல்லாம் தங்க நகையாக அணிபெறச் செய்து தமிழ்த் தேவியை என்றும் இளம் திருவணங்காகவே இருக்கச் செய்வோம்" என்ற வரிகளில் இவர் தமி ழின்பால் கொண்ட பேரபிமானம் திகழ் கின்றது. ஆனால் உணர்ச்சிப் புயல் உண் மைக்கு மாறாகச் சில விஷயங்களைப் பேசும்படி இவரைத் தூண்டிவிட்டது.

"ஆங்கில அரசியின் ஒய்யாரத்தைக் கண்டு சிறிது காலம் ஒதுங்கினாள். ஒதுங் கினும் தன் கற்பின் மாண்பு சிதைந்தி லாது, ஆயிரம் பங்கு திறமை வாய்ந்த அநேக ஷேக்ஸ்பியர்களை வழங்கினவள் தமிழரசி. சரித்திர ஆராய்ச்சிக்கு முன் னரே தழைத்தோங்கி, கடலில் ஆய்ந்த தமிழாய் விளங்கிய இத்தீந் தமிழ் கட லால் விழுங்கப்பட்டும், நெருப்பால் எரிக்கப்பட்டும், ஆற்றில் ஆழ்த்தப் பட்டும், அழியாது என்றும் இளமையாய் இன்றும் இலங்குகின்றது. ஷேக்ஸ்பியரில் அவர் கூத்திலக்கியமும் (Comedies) லியர் (Lear) மன்னன் சுற்றம் முனிவ தும், அந்தோனியின் (Antony) ஆழ்ந்த கூர்மொழித் திறனும், ரோமியோவின் (Romeo) உண்மைக் காதலும், மில்டன் (Milton) பாடிய இழந்த விண்ணின் 'Paradise Lost' கடலினும் ஆழ்ந்த கருத்துக்களும், பைரன் (Byron), வேட்ஸ் வொர்த் (Words worth), கீத்ஸ் (Keats), ஷெல்லி (Shelley) முதலியோர் பாடல்களில் தரும் களிப்பு, தனிமையிலினிமை கடலோசைக்கொப்ப கட்டில்லாப் பாட்டு இயல் வளங்கள் முதலியவைகளும், அதிசன் (Addison), ஸ்டீல் (Steele), மெக்காலே, ஸ்காட்டு (Scott) இவர்களது உரை நடைகளும் ஆங்கிலங் கற்றார் உள்ளத்தில் எத்துணை இன்பத்தைப் பாய்ச்சினாலும், அவர் களது ஆழ்ந்த நெஞ்சுகளில் விஞ்சிய கருத்துக்களெல்லாம் வாழ்க்கைச்சட்டம் வகுத்துத் தந்த வள்ளுவர் குறளுக்கும், வாழ்வு தந்த கம்பன் காவியத்திற்கும், அறநெறி கூறும் சிலப்பதிகாரத்திற்கும் இலக்காகுமோ?"

இத்தகைய விமர்சனத்தைக் கண்டு படிப்போர் திடுக்கிடாமற் போகார். இது உண்மையான விமர்சனமன்று. அபிமா னத்தால்கூறப்பட்டதே தவிர வேறில்லை. தமிழ் நாட்டில் ஒரு ஷேக்ஸ்பியர் தோன்ற ஒரு யுகம் ஆகும். அதுவும் சந்தேகந்தான். இரண்டு இலக்கியங்களை யும் தக்க நிலையில் நின்றுகொண்டு சீர் தூக்கிப் பார்க்காமல் பேசுகின்ற பேச் சின் மணத்தைத்தான் இதில் நுகர்கின் றோம். மேலும் ஆரியம் பெரிதா திரா விடம் பெரிதா என்ற சர்ச்சையை எழுப்புகின்றார்.

"சமுஸ்கிருதம் என்ற சொல்லிற்கு நன் றாய்ச் செய்யப்பட்டது என்று பொருள்

கூறுவர் ஆரியர்கள் தமிழ் நாட்டிற்கு வந்தபின் பின்னரே தமிழர்களைப் பார்த்து, தங்களுடைய மொழியினைச் சீர் திருத்தம் செய்து கொண்டார்கள்......... இதற்கு ஆதாரமாக, கம்பரும் தென் சொற் கடந்தான் வட சொற் கலைக் கெல்லை தேர்ந்தான், என்று தமது இராமாயணத்தில் தெரிந்துள்ளார்.''

நம் நாட்டில் எத்தனையோ பிளவுகள் கிளம்பிவிட்டன. இத்தகைய சாதிச்சழக்குகளை எழுப்புவது தமிழருக்கழகில்லை. ஆரியம் தமிழ் என்று சொல்வதெல்லாம் ஒரு வெறுங் கற்பனையைத் தவிர வேறில்லை. தனித்தமிழால் தமிழ் தழைத் தோங்காது என்றதை அறியவேண்டும். இவ்வாசிரியர் கூறுவது உண்மையன்று. கம்பருடைய கருத்தை ஆசிரியர் அறிய வில்லை என்ற விஷயத்திற்கு வருந்துகின்றோம்.

தென் மொழியில் காணப்படுகிற இலக்கியத்தைக் கடந்தவன் வட சொல்லில் கடல் போல் விரிந்து கிடக்கிற இலக்கியத்திற்கு எல்லை தேர்ந்தான் என்பது தான் இதற்கும் பொருளாகுப். பாடல்களைத் திரித்துப்பொருள் கூறுவது பகை உணர்ச்சியைத்தான் சுட்டும்.

''தமிழ்'' எனுஞ்சொல்லில் 'ழ்'கரத்தை உச்சரிக்க அறியாத ஆரியர் பிறரும் தமிழுக்குத் திராவிடம் எனும் பெயரைச் சேர்த்தனரோ என்றுங் கருதுகின்றனர் சிலர்''

'ழகரம்' தமிழுக்குரியதுதான்; ஆனல் வாழைப்பழம் என்ற சொல் அப்படியே தமிழர் வாக்கில் நுழைகிறதில்லை. வாளப்பளம் என்றுதான் சொல்லக் கேட்டிருக்கிறோம். தமிழ்ப் பேராசிரியர் வாக்கிலும் வழக்கம் என்ற சொல்லிற்குப் பதிலாக வளக்கம் என்றதுதான் பிறக்கிறது. இப்படிச் சாதிப் பிளவுகளைக் கிளப்பக் கூடிய நூல்கள் நாட்டில் வராமலிருக்கலாம். தமிழ்த் தொண்டாற்றுகிறவர் நூலில் பிழைகள் மலிந்து கிடக்கின்றன. அவைகளை அடுத்த பதிப்பில் களைவார்கள் என்று நம்புகிறோம்.

ரா. ஸ்ரீ.



லார்ட் மௌண்ட் பேட்டன் விடைபெற்றுக்கொண்டு வெளியேறுகிறர்.

புயல்

கிட்டு.

கிழவன்
கிழவி
பிரகாசம்
காவல்காரன்

[நகரத்தில்கடற்கரையோரமாக, செம்படவர்கள் வசிக்கும் பகுதியை அடுத்த ஓர் இடம். கடலில் கொந்தளிப்பு அதிகமாக இருக்கிறது. காலம், நடு நிசி. ஒடிந்துபோன படகு ஒன்றின் மீது ஒருவன் சாய்ந்து கொண்டிருக்கிருன். கரையோரமாக ரோந்து வரும் காவல்காரன் அந்த ஒடிந்த படகின் அருகே வருகிருன். அப்பொழுது நகர சபைக் கட்டிடத்தின் மணிக் கூண்டில், பன்னிரண்டு மணியடிக்கிறது.]

காவ: யாரய்யா அங்கே ஒக்காந்துகிட்டு கெடக்கிறீங்க!

புதிபவன்: (பெருமூச்சுவிட்டு) உம்...

காவ: யாரய்யா நீங்க! இந்த நடுநிசிலே வந்து இப்படி சமுத்திரக் கரைலே ஒக்காந்துகிட்டிருக்கீங்க!

பு: நீ யாரப்பா?

கா: நானு கரையோரமா காவலு செய்யறவனுங்க. ராவுலே பதினோரு மணிக்கு மேலே இங்கே யாரும் நடமாடக் கூடாதுங்க.

பு: உலக வாழ்வையே வெறுத்தவனுக்குப் பயம் ஏது! கலக்கம்தான் ஏது?

கா: அப்படியில்லிங்க, இண்ணிக்கி ராவுலே மட்டும் இங்கே ஒக்காந்துக்கிட்டு இருக்கிறதுண்ணு வெசயம் தெரிஞ்சவங்களுக்கெல்லாம் கொஞ்சம் யோசனையாத்தான் இருக்குதுங்க.

பு: ஏன்?

கா: சமுத்திரமே இன்னிக்கி துக்கம் கொண்டாடுதுங்க, அண்ணிக்கி ராவுலே எப்படிக் காத்து அடிச்சுச்சோ அதேமாதிரியல்ல, இண்ணிக்கும் அலை வெட்டி போடுது கணக்கா வீசுதுங்க. அண்ணக்கி இதே அலைங்கதான் அந்த அப்பாவிங்களோட சாம்பலை அள்ளிக்கிட்டுப் போச்சு. அந்த அலைங்கதான் இண்ணிக்கி அவுகளை நெனைச்சு அளுவுதுங்க...உம்... சரியா ஒருவருசம் ஆச்சு.

பு: ஏதப்பா! நீ பெரிய கவியைப் போல் பேசுகிருயே.

கா: அதெல்லாம் ஒண்ணுமில்லிங்க, அவுக ரெண்டு பேருக்கும் கடைசிலே கண்ணுலே ஜலம் வுட்டு அளுவுறத்துக்கு நானு ஒத்தந்தான் இங்கிட்டு இருந்தேன்.

பு: அடாடா ... இந்த அலைகளுக்குத்தான் எவ்வளவு ஆத்திரம்? நான் உட்கார்ந்திருக்கும் கட்டையையே பெயர்த்துக்கொண்டு போய்விடும் போலிருக்கிறதே.

கா: அடேடே, அந்தக்கட்டே மேலேயா ஒக்காந்துக்கிட்டீங்க! ஐயா, தயவு சேஞ்சி கீளே எறங்கி வந்துபுடுங்க.

பு: ஏம்பா?

கா: அவுங்க காபகத்துக்காவ நானு போன வருசம், இந்தக் கட்டுமரத் துடுப்பை இங்கே நட்டுவச்சேனுங்க.

பு: அவர்கள் யார்?

கா: நம்பி, நம்பி, நம்பியே, ஏமாந்து போயி உசுரை விட்ட கௌவனும் கௌவியுந்தான்.

பு: அவர்களுடைய கதையைப் பற்றித்தான் சொல்லேன்.

கா: சரியான சமயம் பார்த்தல்ல, கதே கேக்கிறீங்க ...... இதோ இந்தக் கரையிலேதான் அவுங்க ஆடு இருந்துச்சு. கௌவனுக்கும் செம்படவர் தொழிலு. நல்ல அனுபோவம். நல்ல கை. கண்ணே மூடிக்

கிட்டுத்தான் வலேயே போடுவான். அப்புடியே மீனுங்க வந்து குவிஞ்சு போவும். நெறய துட்டு சம்பாரிச்சான். அவுகளுக்கு ஒரே மவன். அந்த மவனுலேதான் இவுங்களுக்கு இந்தக் கதி வந்துச்சு. ஆனு அந்த மவன் மேலேயும் குத்தம் இல்லீங்க. கேளுங்க .... ஒரு வருசத்துக்கு முந்தி இதே நாளு......

கின்: போய்ப் படுத்துக்கொள்ளம்மா.

கிவி: முடியாது.

கின்: இன்று கடல் ஏன் இப்படிக் குமுறுகிறது?

காட்சி 1

[நள்ளிரவு. வெளியே கடும்புயல். கிழவனின் வீட்டிற்குள். மணி பன்னிரண்டு அடிக்கிறது.]

கிழவன்: மணி பன்னிரண்டு.

கிழவி: காதில் விழுந்தது.

கிவி: எல்லாம் நமது வாழ்வைக் கண்டு தான்.

கின்: நெடு நேரமாகிவிட்டதே; நீ போய், படுத்துக் கொள்ளமாட்டாயா?

கிவி: பதினைந்து வருஷங்களாக வராத தூக்கம் இன்று வந்துவிடப் போகிறதா?

வீட்டிற்கு விரைந்து செல்லுகிறார்

ஹமாம் ஸோப்புத் தேய்த்து குளுமையுடன் ஸ்நானம் செய்ய



ஹமாம் ஸோப்பு

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்.

கின்: வெளியே புயல் அடிக்கிறது. கும்மிருட்டு. யாரும் வெளியே வரப் பயப்படுவார்கள்.

கிவி: அவன் பயப்படமாட்டான்.

கின்: அது தெரியும், இருந்தாலும்...

கிவி: 'இருந்தாலும்' என்ன?

கின்: அவன் இந்த இருட்டில் வரமாட்டான்.

கிவி: ஒரு வேளை வந்தால்...

கின்: வரமாட்டான்.

கிவி: யார் சொன்னார்கள்?

கின்: எனக்குள் ஏதோ ஒன்று சொல்லுகிறது.

கிவி: ஆமாம். பதினைந்து வருஷங்களாகத்தான் 'வரமாட்டான்' 'வரமாட்டான்' என்று நீங்கள் அவநம்பிக்கைப்பட்டுக்கொண்டே இருக்கிறீர்கள். 'வருவான்' 'வருவான்' என்று நான் நம்பிக்கையுடன் இருக்கின்றேன்.

கின்: இதே மாதிரி இருட்டில்தான் அவன் புறப்பட்டுப் போனான்.

கிவி: அதே மாதிரி இருட்டில்தான் அவன் திரும்பி வந்து சேருவான்.

கின்: அவன் எங்கே வரப்போகிறான்?

கிவி: கட்டாயம் வருவான் ... பாவம், களைப்போடு வந்து சேருவான். பட்டினியோடு வந்து சேருவான். தூங்கி எவ்வளவோ நாளாயிருக்கும். அதனால்தான் அவனுக்குச் சாப்பாடும் படுக்கையும் தயாராய் வைத்திருக்கிறேன்.

கின்: ஆம். பதினைந்து வருஷங்களுக்கு முன்பு அவனுக்காகப் போடப்பட்ட படுக்கை.

கிவி: கட்டாயம் ஒரு நாள் அவன் வந்தே தீரவேண்டும். என்றாவது ஒரு இரவில் அவன் வந்து கதவு தட்டும் சப்தம் கேட்கும்.

கின்: எவ்வளவோ இரவுகள் கண் விழித்துப் பார்த்து விட்டோம். எவ்வளவோ இரவுகள், இந்தச் சிறிய விளக்கும் எரிந்து, எரிந்து, நம்மைப்போல் ஏங்கிக் கிடக்கிறது... எங்கே போகிறாய்?

கிவி: சாப்பாடு ஆறி போயிருக்கும். வேறு சூடான உணவு தயாரிக்கப் போகிறேன்.

கின்: இப்படி எவ்வளவு தடவைகள் தான் அடுப்பு மூட்டிக் கொண்டிருக்கப் போகிறாய்?

கிவி: அவன் வரும்வரையில்...

கின்: உம்...

கிவி: விளக்கைத் தூண்டி விடுங்கள். வெளியில் கும்மிருட்டு, வருகிறவனுக்கு வழி தெரியவேண்டும்...கதவு?

கின்: சாத்தியிருக்கிறது.

கிவி: அவன் வந்து தட்டினால், இந்தப் புயல் இரைச்சலில் காதில் விழாதே.

கின்: நான் விழித்துக் கொண்டுதான் இருக்கிறேன். அப்பா, என்ன காற்று! என்ன இரைச்சல்?... என்ன சிரிக்கிறாய்?

கிவி: ஒன்றுமில்லை. குழந்தையைப் பெறும்போது தாய் எவ்வளவு வேதனை அடைகிறாள்! அதே போல்தான் இயற்கையும் வேதனை அடைந்து என் குழந்தையை எனக்குப் பெற்று அளிப்பாள். இதெல்லாம் அவனுடைய வரவுக்கு நல்ல சகுனங்கள்.

கின்: உன் நம்பிக்கைதான் நம்மை இதுவரை காப்பாற்றிக்கொண்டு வந்துவிட்டது. பதினைந்து வருஷங்களாக நாம் கட்டிய கோட்டைகளும் கண்ட சகுனங்களும் கணக்கிலடங்கா.

கிவி: எப்படியும் ஒருநாள் அவன் வந்துதான் ஆகவேண்டும்.

[கதவு தட்டும் சப்தம்]

அதோ...யாரோ கதவைத் தட்டுகிறார்கள். அவன் தான்......அவன் தான்...... என் கண்மணி......என் ராஜா......இந்தக் கதவு தட்டும் சப்தத்தைக் கேட்கத் தானே இவ்வளவு வருஷங்களாய்த் துடிதுடித்துப் போனேன்......

(கதவு மீண்டும் தட்டும் சப்தம்)

கதவைத் திறவுங்கள்......அவன் அப்படியே யிருப்பானா? இளைத்துப் போயிருப்பானா? பழைய மாதிரியே 'அம்மா' என்று அழைப்பானா? வருஷக்கணக்கில்

பார்க்கவில்லையே என்று அசட்டு மரியாதையுடன் நடந்து கொள்வானு?

[கதவு 3ஆவது முறையாகத்தட்டப்பட]

கதவைத் திறவுங்களேன்.

[கிழவன் போய்க் கதவைத்திறக்க யாரோ ஒருவன் உள்ளே பிரவேசிக்கிருன்.]

வந்தவன்: ஐயா, பெரியவரே, இன்றிரவு இங்கே தங்க இடம் கிடைக்குமா?

கிவி: அய்யய்யோ...இதென்ன இப்படி பேசுகிருய்?

கின்: உனக்காகத்தானே இவ்வளவு நாள் காத்துக்கொண்டிருந்தோம்.

வ: எனக்காகவா?

கின்: ஆமாம், நீ எப்படியும் வருவாய் என்ற உறுதியான நம்பிக்கை.

வ: நான் வருவேன் என்று, எப்படித் தெரியும்?

கிவி: பைத்தியக்கார மகனே! பதினைந்து வருஷ காலமாக விடிவிளக்கை ஏற்றி வைத்துக்கொண்டு இராப்பகலாய் விழித்த கண் மூடாமல் எதிர் பார்த்துக் கொண்டிருந்தோம். எங்களுக்கா தெரியாது? இன்று நீ வருவாய் என்று எங்களுக்குத் தெரியும்.

வ: இந்தப் புயலிலா?

கிவி: புயலில் தானே அன்று நீ வெளியே போனுய். எங்களை விட்டுப் பிரிந்து போனுய். நாங்கள் கண் கலங்க, மனந்துடிக்க, காணுமற் போனுய்! அதே புயலில் மீண்டும் வந்து சேர்ந்து விட்டாய். பதினைந்து வருடங்களாக உன் காலடி ஓசை கேட்டுக்கொண்டேதான் இருந்தது. கடைசியில் இன்று, காதில் கேட்ட காலடி ஓசையைக் கண்ணுல் கண்டோம். கருத்தில் கேட்டுக்கொண்டிருந்த கதவு தட்டும் ஓசையைக் காதால் கேட்டோம். இழந்த மகன் இன்று திரும்பி வந்துவிட்டான்.

வ: உங்கள் ம.........மகனு?

கின்: என்னடா குழந்தாய்! அடையாளம் புரியவில்லையா?

கிவி: உன் தாயைக்கூடவா உனக்குத் தெரியவில்லை?

வ: (தயங்கி) நான்......நான்......என் பெயர் பிரகாசம்!

கின்: பிரகாசம்!......நீதான் எங்கள் பிரகாசம். எங்கள் நம்பிக்கையின் ஒளி. எங்கள் வாழ்வின் விளக்கு.

கிவி: பாவம். துரும்பாய் இளைத்து விட்டாயே.

கின்: ரொம்ப களைத்துப்போயிருக்கிருன்.

கிவி: சாப்பிடவாடா......கண்மணி.

வ: எனக்குப் பசியில்லை.

கிவி: பசியில்லையா? ஒவ்வொரு இரவும் உனக்காகச் சாப்பாடு தயாரித்து வைத்தோமே. வா, பசியிருக்கும். உனக்குத் தெரியாது; நீ குழந்தைதானே. வாப்பா.

வ: இன்று ஒரு இரவு, தங்க இடம் தந்தால் போதும்.

கிவி: ஐயோ......ஆனுல் நாளைக்குப் போய் விடுவாயா? போவதற்காகத்தான் வருகிருயா? மறுபடியும பதினைந்து வருஷம் காத்துக் கிடக்க வேண்டுமா? காத்துக் கிடப்பதுதான் எங்கள் வாழ்வா?

வ: நான் உங்கள் மகன் இல்லை.

கிவி: யார் சொன்னது அப்படி? நீ எங்கள் மகன்தான். ஆயிரம் வருடமானுலும், தாய், தன் மகனை அடையாளம் கண்டு கொள்வாள்.

கின்: அதே புன்னகை...அதே குரல்... அதே பார்வை......அதே தோற்றம்...... மகனே.........பதினைந்து ஆண்டுகளுக்கு முன் உன்னை, உன் ஐந்தாவது வயதில், வீட்டிலேயே விட்டுவிட்டு, நாங்கள் மீன் பிடிக்கப் போனேும். திரும்பி வந்ததும் உன்னைக் காணவில்லை. 'குழந்தாய்', 'குழந்தாய்' என்று அலறினேும், அலையும் புயலும் கூடச் சேர்ந்து கதறின.

கிவி: நீ எங்களைத்தான் தேடிப்போயிருக்கிருய் என்று நிச்சயமாகத் தெரியும். நாங்களும் உன்னைத் தேடினேும். கட்டாயம் வருவாய் என்று எதிர்பார்த்

தோம். திரும்பி வந்தால் வீடு அடையாளம் தெரியவேண்டுமே என்று விளக்கேற்றி வைத்தோம்.

வ: அம்மணி! நீங்களிருவரும் புத்திர சோகத்தால், புத்தி தடுமாறி நிலைகலங்கிப் போயிருக்கிறீர்கள்.

கிவி: இப்படியெல்லாம் சொல்லி நீ எங்களை ஏமாற்றிவிட்டுப் பிரிந்துபோய்விட முடியாது. மகனே......மகனே...... இன்னுமா உனக்கு எங்களை அடையாளம் தெரியவில்லை......நீ எங்கள் மகன்தான். 'அம்மா' என்று என்னை ஒரு முறை கூப்பிடு அப்பா. இந்தப் பேதைகளின் உள்ளத்தை இனியும் வதைக்காதே...... குழந்தாய்......குழந்தாய்.

வ: (ஏதோ தீர்மானித்துக் கொண்டவன் போல்)......ஆ......அம்மா!! இப்பொழுதுதான் அடையாளம் புரிகிறது.

கின்: கண்மணி!!

கிவி: கடைசியில் தெரிந்து கொண்டாயா? என் செல்வம்.

கின்: இவ்வளவு நாள் எங்கேயப்பா போயிருந்தாய்?

வ: தெருக்களில் திரிந்தேன். குகைகளில் ஒளிந்தேன். தங்க இடமில்லை. ஆதரவு இல்லை. தேறுதல் கூற ஆள் இல்லை.

கிவி: ஐயோ......என் ராஜா! நாங்கள் தான் தயாராய்க் காத்திருக்கிறோமே.

வ: என் பெற்றோரை எனக்குத் தெரியவில்லை. உற்றாரையும் உணரவில்லை. எங்கேயோ ராமேசுவரத்தில் வளர்ந்தேன். யாரிடமோ என்னைக் கொடுத்தார்களாம்.

கிவி: ஆமாம்......உன்னை யாரோதான் தூக்கிக் கொண்டு போயிருக்க வேண்டும்.

வ: என் பதினைந்து வருஷ வாழ்வில் எவ்வளவு களங்கங்கள். நான் திருடினேன்; வஞ்சித்தேன்; என்னை வளர்த்தவர் கொல்லப்பட்டார். பழி என் தலையில் விழுந்தது. பயந்து ஓடி வந்துவிட்டேன்.

கிவி: நீ கொன்றேயிருக்கமாட்டாயடா கண்மணி! உனக்கு என்னுடைய இதயம் அல்லவா?

வ: இரண்டு வருஷங்களாகச் சட்டத்தின் சீற்றத்திற்குப் பயந்து ஒளிந்தேன். ஓடிக்கொண்டே இருக்கிறேன். இப்படிக் குற்றம் செய்து பயந்து ஓடிக்கொண்டிருப்பவன் உங்கள் வயிற்றில் பிறந்திருக்க முடியாது.

கின்: இல்லை! நீ எங்கள் மகனேதான்!

கிவி: எங்கள் மகனைத்தான் நாங்கள் இவ்வளவு நாட்களாகத் தேடி அலைந்தோம். கடைசியில்......

வ: நானும் என் பெற்றோரைத்தான் தேடுகிறேன். உலகத்தின் வஞ்சக வலைக்குள் என்னைத் தூக்கி எறிந்த அந்தப் பாதகர்களைத்தான் தேடுகிறேன். என் பெற்றோர்கள் பாதகர்கள். ஆகவே நீங்கள் பாதகர்களல்ல.

கின்: அப்பா, துன்பத்தை அதிகமாக அனுபவித்துவிட்டாய். அதனால்தான் நீ இப்படி எங்களைப் புரிந்து கொள்ளாமல் பேசுகிறாய்!

வ: புத்திரசோகத்தினால் நீங்களும் என்னைத் தெரிந்து கொள்ளாமல் பேசுகிறீர்கள்.

கிவி: குழந்தாய்...உனக்காக வெள்ளிச் சாமான்கள் ரூபாய்கள், பட்டு ஆடைகள் எல்லாம் வைத்துக் கொண்டு காத்திருக்கிறோம். உனக்குப் பணம் சேர்க்கவேண்டும் என்பதற்காகவே, தினந்தோறும் போய் மீன் பிடித்து வந்தோம்......நீ எங்கள் மகன் தான். உனக்குத் தெரியவில்லை; எங்களுக்குத் தெரியும்.

கின்: அவன் கொஞ்ச நேரம் தூங்கட்டுமே, பாவம், காலையிலே பேசிக் கொள்ளலாம்.

கிவி: வா குழந்தாய், உனக்காகத் தயாரிக்கப் பட்ட அறையைக் காட்டுகிறேன்.

காட்சி 2

[அதே நள்ளிரவு. வெளியில் புயல் குறைந்தபாடில்லை. மணி 2 அடிக்கிறது. கிழத் தம்பதிகளின் மகனாக வந்தவன் படுக்கையில் புரண்டு கொண்டிருக்கிறான். அப்பொழுது]

குரல்: தூக்கமா?

வந்: தூங்கவில்லை. யார் நீ?

குரல்: வேறு யார் நானேதான்.

வந்: மனிதனுக்கு வேறு சித்திரவதையே வேண்டாம். மனச்சாட்சி ஒன்றே போதும்.

கு: சித்திரவதையா? நீயல்லவா என்னைச் சித்திரவதை செய்தாய்!

வந்: நானு?

கு: ஆமாம். என்னுடைய கொஞ்ச நஞ்சத் தூய்மையையும் அழித்து விட்டாய்......என்ன செய்கிறுய்?

வந்: யோசிக்கிறேன்.

கு: என்ன?

வந்: பலவிஷயங்கள்.

கு: என்னென்ன?

வந்: இவர்கள் யார்? நான் ஏன் இங்கு வந்தேன்? நான் காணுமற்போன மகனு? இவர்கள் என் பெற்றோர்களா?

கு: இருக்கலாம்.

வ: உனக்கு எப்படித் தெரியும்?

கு: இல்லாமலும் இருக்கலாம்.

வ: ஒருவேளை நான் அவர்கள் மகனுகவே இருந்தால்?

கு: அதுவும் சாத்யந்தான்.

வ: ஏன், சந்தேகமா?

கு: நீயல்லவா சந்தேகப்படுகிறுய்?

வ: இவர்களோ தெய்வாம்சம். நானே கொடும்பாவி, மிருகம், பிசாசு.

கு: பலே, இவ்வளவு தூரம் தெரிந்து கொண்டு விட்டாயா?

வ: அன்பின் வெறி அவர்களை ஆட்கொண்டது. அமைதியாகக் காத்திருந்தார்கள்.

கு: துன்ப வெறியினுல் நீ ஓடித் திரிந்தாய்.

வ: நானுந்தான் பதினைந்து வருஷங்களுக்கு முன் பெற்றோரை இழந்தேன். அவர்கள் எனக்காகக் காத்திருப்பார்கள் என்று நானும் நம்பினேன். ஒரே மாதிரியான நிலைமை.

கு: இப்படி சமாதானம் சொல்லி அவர்களைப் பெற்றோர்களாக்கிக்கொள்ளப் பார்க்கிறுயா?

வ: பாவம், தங்கமும் வெள்ளியும் வைத்துக்கொண்டு காத்திருக்கிறுர்கள்.

கு: அவர்களுடைய இருதயத்தைவிட அந்தத் தங்கமும் வெள்ளியுந்தான் உன்னைத் தூண்டிற்றே?

வ: ஒருவேளை வேறு யாரேனும் இவர்கள் மகனு யிருந்து திரும்பி வந்தால்.......

கு: அப்பொழுது நீ ஓடிவிட வேண்டும்.

வ: கடைசியில் மறுபடியும் பழைய நிலைமையா?

கு: அதுதான் உனக்கு ஏற்பட்ட வாழ்க்கை.

வ: வேறு வழியில்லையா?

கு: யோசனை செய்து பார்.

வ: ஒருவேளை அந்த உண்மையான மகன் வராமலேயே இருந்துவிட்டால்?

கு: ஒருவேளை அவன் வந்தால்?

வ: அப்பொழுது என்ன செய்வது?

கு: யோசனை செய்.

வ: ஆனுல் பொழுது விடிவதற்குள் நான் ஓடிவிட வேண்டும்.

கு: அதுதான் சிறந்த வழி.

வ: இந்தப் பணம், சௌகரியம், இவர்களுடைய அன்பு - எல்லாவற்றையும் விட்டு விட்டா?

கு: உனக்குக் கூட அன்பு வேண்டுமா?

வ: நீ ஏன் இப்படிப் பிடி கொடாமல் பேசுகிறுய்?

கு: என்னை நீ முறுக்கிவிட்டாய். உன் மீது நான் வஞ்சம் தீர்த்துக்கொள்ளப் போகிறேன்.

வ: எப்படி?

கு: தானே தெரியும்.

வ: தெரிவதென்ன? மரணம்தான் மனச்சாட்சியின் வஞ்சம் ... இப்பொழுது என்ன செய்யலாம்?

கு: செய்வதென்ன? ... வெளியே இருள். புயல். உள்ளே வீட்டில் பலவீனமான தம்பதிகள். நீயோ பலசாலி. பணம் உனக்குத்தான் தேவை. கிழவனும் கிழவியும் இனி உலகில் இருந்து ஒன்றும் ஆகவேண்டியதில்லை.

[இடி இடிக்க]

வ: ஐயோ ... என்ன அது?

கு: இடி ... மின்னல்.

வ: மின்னலா?

கு: மின்னல்தான். மின்னலைப்போல் தான் வாழ்க்கையின் அரிய சந்தர்ப்பங்களும். இந்தச் சந்தர்ப்பத்தைக் கைநழுவ விடாதே.

வ: வேண்டாம். நான் செய்த பாபச் செயல்கள் போதும்.

கு: ஆனால் இப்பொழுதே வெளியே ஓடிப்போ.

வ: இந்தப் பணம்?

கு: அப்படியானால் இருந்து வீட்டையும் அழித்துவிட்டு இருப்பதையெல்லாம் சுருட்டிக்கொண்டு ஓடு.

வ: நான் அகப்பட்டுக்கொண்டால்?

கு: ஓடி ஒளிபவன் எப்படியும் அகப்பட்டுக்கொண்டாகவேண்டும்.

வ: ஐயோ ... நானே மகனென்று சொல்லி இங்கேயே இருந்துவிட்டால்?

கு: உண்மையான மகன் திரும்பி வந்துவிட்டால்?

வ: அதென்ன மாடத்தில் வெளிச்சம்?

கு: நீ வருவாயென்று எதிர்பார்த்திருந்த விடிவிளக்கு. நீ வந்துவிட்ட சந்தோஷம் தாங்காமல் ஜ்வாலைவிட்டு எரிகிறது.

வ: பணத்தை மட்டும் எடுத்துக்கொண்டு ஓடிவிடுகிறேன்.

கு: இந்த அப்பாவிகளை இன்னும் வேதனைப்படவைத்து விட்டு ஓடப்போகிறாயா? அவர்களுடைய வேதனைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டுப்போ.

வ: மறுபடியும் நான் பாவியாக வேண்டுமா?

கு: என்றுமே நீ பாவிதான். (சிரிப்பு)

[காட்சி முடிகிறது]

காவல்காரன்: அப்பாலே பொழுது விடிஞ்சு பாத்தா, வூடு நெருப்புப் பத்தி எரிஞ்சு கரிஞ்சு போய்டுச்சு. அந்தக் கௌவனும் கௌவியும், பாவம்......

பு: (பெருமூச்சு).........உம்.........அது சரிப்பா. அவர்கள் வீட்டிற்குள் நடந்ததை இவ்வளவு விபரமாக நீ எப்படித் தெரிந்து கொண்டாய்?

கா: அது ரொம்ப ரவசியமுங்க. அத்தே வெளியே சொல்லக்கூடாதுன்னு சத்யம் பண்ணிக் கொடுத்திருக்கேனுங்க.

பு: யாரிடம்?

கா: அவுங்க வூட்டுக்கு ராவுலே வந்து, மவன்னு சொல்லிக்கிட்டுத் தங்கினானே, அவன் கிட்டே.

பு: அவனை எப்பொழுது சந்தித்தாய்?

கா: அடுத்தநாளு ஷாங்காலம். அவன், அவுங்க வூட்லே திருட்டுச்சாமானை யெல்லாம் என் வூட்டே கொண்டாந்து போட்டுப்புட்டு, ஒரு ராத்திரி பூராவும் தான் செஞ்ச குத்தத்தை நெனைச்சு நெனைச்சு கதறி அழுதானுங்க. அப்பாலே பொளுது விடிஞ்சா ஆளைக்காணும்.

பு: ஆனால் அவன்தான் அந்த வீட்டுக்கு நெருப்பு வைத்தவன் என்று உனக்குத் தெரியுமா?

கா: அவன் அதைப் பத்தி ஒண்ணும் சொல்லலீங்க! அவன்தான் செஞ்சிருக்கணும், படுபாவி.

பு: அவன் செய்யவில்லை.

கா: என்னுங்க?

பு: அவன் செய்யவில்லை. அவன் திருடிக்கொண்டு வெளியே வந்து விட்டான். அவனைக் கொலை செய்யும்படி தூண்டி, அவன் மனச்சாட்சி அவனைப் பழிவாங்க நினைத்தது. ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லை.

கா: வூடு எப்படி எரிஞ்சு போயிருக்கும்?

பு: புயலும் அந்த விடி விளக்கும் சேர்ந்து செய்த வேலையாக இருக்கும். ஆம், அப்படித்தான்.

கா: ஆனா, அது ஒங்களுக்கு எப்படித் தெரிஞ்சுச்சு?

பு: அது நடந்து இன்று ஒரு வருஷமாகிவிட்டது, சமுத்திரத்தோடு சேர்ந்து நானும் துக்கம் கொண்டாட வந்தேன். காவல்காரா......என்னை உனக்கு அடையாளம் தெரியவில்லையா? இந்தப்படு பாவியை, துரோகியை, அன்பையே வஞ்சித்த பாதகனை உனக்குத் தெரியவில்லையா?

கா: அடே நீங்களா...அந்த ஆளா! அன்னிக்கி ராவுலே வந்து...ஐயா...ஐயா ...எங்கே ஓடறீங்க...ஐயா...அலை கடுமையாயிருக்குது. அந்தாலே போவாதீங்க ......வாணும்....வாணும்......ஐயா....ஐயா ......ஐயா......ஐயா......ஐயா......

(காவல்காரனின் குரலையும் அடக்கிக் கொண்டு ஒலிக்கும் அலைகள் எதையோ பெரிய காரியத்தைச் சாதித்து விட்டது போல் ஆரவாரித்துக் கொண்டு எழும்புகின்றன. புயல் நீடிக்கிறது]

குழந்தை மனம்

மூல ஆசிரியர்: முலக் ராஜ் ஆனந்த்.
மொழி பெயர்ப்பு: கு. கணபதி.

வஸந்த உற்சவ காலம். குறுகிய தெருக்களிலிருந்தும், சந்துகளிலிருந்தும் மனிதக் கூட்டம் ஆடம்பர ஆடையணி கலன்களை அணிந்துகொண்டு, திரள் திரளாகப் புறப்பட்டது, வளைகளிலிருந்து கிளம்பும் முயல்களைப்போல். வெள்ளிக் கடலெனத் தகதகாய்க்கும் சூரிய ஒளியில் மிதக்கும் நகர வாயிலைக் கடந்து அவர்கள் உற்சவ சந்தைக்குச் சென்றனர். பலர் நடந்தனர். சிலர் குதிரை சவாரி செய்தும், மற்றும் சிலர் மாட்டு வண்டியிலுமாக மகிழ்வுடன் பிரயாணம் செய்தனர். ஒரு சிறுவன் தன் பெற்றோர்களுக்கிடையே ஓடிக்கொண்டிருந்தான். காலை நேரம் பூரிப்புடன் புன்னகை செய்து, இன்னிசை நிறைந்து, அழகிய மலர்கள் பூத்துக் குலுங்கும் திறந்த வயல் வெளிகளுக்கு வாருங்கள் என்று எல்லோரையும் அழைத்தது. அதைப்போலவே அவன் மனதிலும் மகிழ்ச்சி பொங்கி வழிந்தது.

வழியோரமாகவுள்ள கடைகளிலிருந்த விளையாட்டுச் சாமான்களால் கவரப்பட்டு, பின்னால் தங்கித் தயங்கி வரும் குழந்தையை அவனுடைய பெற்றோர்கள் அடிக்கடி கூப்பிட்டுக்கொண்டே அழைத்துச் சென்றனர்.

பெற்றோர்களுக்குப் பயந்து அவனுடைய கால்கள் வேகமாக அவர்களுடன் சென்றாலும், அவனுடைய ஆவல்நிறைந்த கண்கள் மட்டும் பின்னால் மறையும் விளையாட்டுச் சாமான்களிடையே லயித்து நின்றன. அவனுக்காக அவர்கள் காத்திருந்த இடத்திற்கு வந்தான். வழக்கம்போல அவர்கள் அவன் கேட்பதை யெல்லாம் இரக்கமில்லாமல் மறுதலித்து விடுவது இப்போதுகூட அவர்களுடைய கண்களில் பிரதிபலித்தது. எனினும் அவனுடைய இதய வேட்கையை அடக்க முடியாத நிலையில் "எனக்கு அந்த விளையாட்டுச் சாமான்......" என்று கெஞ்சினான்.

அவனுடைய தந்தை தன் சிவந்த கண்களைக் கோபத்துடன் உருட்டி விழித்தார். அவனுடைய தாயார் உற்சவ தினத்தின் உல்லாச உணர்ச்சிகளால் இதயம் இளக்கப்பட்டவளாய், "இதோ பார், குழந்தை, உனக்கு எதிரே!" என்று பராக்குக் காட்டினாள். தன் ஆவல் நிறைவேறாததால் ஏற்பட்ட ஏமாற்றமும் வெறுப்புணர்ச்சியுங்கலந்து, "அ——ம்——மா!" என்ற பரிதாபமான ஏக்கக் குரலில் மறைவதன் முன்பே அவன் எதிரே கண்ட காட்சி ஆவல் நிறைந்த குழந்தை யுள்ளத்தில் இன்பத்தை நிறைத்தது. அவர்கள் புழுதி நிறைந்த சாலையை விட்டு வயல் மார்க்கமாக ஒரு ஒற்றையடிப் பாதையில் நடந்தனர்.

அது பூத்துக் குலுங்கும் கடுகு வயல். அதன் மலர்கள் தங்கமயமாக மைல்கணக்காகப் பரந்து கிடந்தது. பார்ப்பதற்கு மஞ்சள் ஒளியே பிரவாகமாக ஓடுவது போல் இருந்தது. காற்றடிக்கும்போது அவை அலையலையாக அமுங்குவதும் எழுவதுமாகக் காட்சியளித்தது. சில இடங்களில் அத்துடன் பரந்த கிளை நதிகள் வந்து கலந்து இறுதியில் எல்லா வெள்ளமும் தொலைதூரத்திலுள்ள வெள்ளிமயமான சமுத்திரத்தில் சங்கமம் ஆவது போலத் தோற்றமளித்தது. அந்த வயல்கள் முடியுமிடத்தில் ஒருபுறம் மஞ்சளாடை யணிந்த ஏராளமான ஆடவரும் பெண்டிரும் மண் சுவர் எழுப்பி, குடிசைகள் கட்டி யிருந்தனர். அங்கு அவர்கள் குதூகலத்துடன் பேசுவதும், சிரிப்பதும், 'விசில்' அடிப்பதும் தொண்டை கிழியக் கத்துவதுமாக இருந்தனர். அந்தச் சப்தம்

தோட்டம் துரவுகளின் வழியாக நீலத் தொண்டை படைத்த ஆகாயத்தையே எட்டிப் பிடிக்கும்போது பித்தனின் (சிவன்) சிரிப்பைப் போல இருக்கும்.

இந்த அற்புதக் காட்சி இன்பத்தில் லயித்த குழந்தை, தாய் தந்தையர் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். அவர்கள் முகத்திலும் மகிழ்ச்சி பிரதிபலிப்பதை யுணர்ந்து, ஒற்றையடிப் பாதையை விட்டுவிலகி, குதிரைக்குட்டியைப்போலக் குதூகலத்துடன் வயலில் துள்ளிக் குதித்து ஓடினுன். தூரத்திலுள்ள வயல்களின் நறுமணத்தைச் சுமந்து வந்த காற்றுவந்து மலர்களில் அலேமோதுவதற்கேற்ப, அவன் சின்னஞ் சிறு கால்கள் தாளமிட்டன.

மணமிக்க மலர்களைத் தேடியலேயும் வண்ணுத்திப் பூச்சிகள், கன்னங்கரிய வண்டுகள், தேனீக்கள் முதலியவைகளுக்கிடையே சிவந்த நிறமுடைய மெல்லிய சிறகுகளுடைய தட்டாரப் பூச்சிகள் கூட்டங் கூட்டமாகச் சஞ்சரித்தன. குழந்தை அவைகளைத் தொடர்ந்து சென்று, ஏதாவது ஒன்று இறகை மடித்துக் கீழே உட்கார்ந்ததும் அதைப்பிடிக்க முயல்வான். ஆனல் அவன் அதை அநேகமாகப் பிடித்துவிட்டான் என்று இருக்கும் நிலையில் அது சிறகடித்து மேலே பறந்துவிடும். ஒரு கறுப்புத்தேனீமட்டும் அவன் கைக்கு அகப்படாமல் தப்பித்துக் கொண்டு, மிகவும் துணிவுடன் அவன் காதைச் சுற்றி வட்டமிட்டுப் பிறகு அவனுடைய உதட்டில் உட்காருவது போலப் போக்குக்காட்டி அவன் ஆவலேக் கிளறியது. அந்தச்சமயம் பார்த்து அவனுடைய தாயார்——“வாடா கண்ணே! பாதையில் வா”—என்று அழைத்தாள்.

சந்தோஷத்துடன் அவர்களை நெருங்கி, குதூகலமாகக் குதித்துக்கொண்டு அவர்களுக்கு முன்னுலேயே சற்று நேரம் நடந்தான். எனினும் நடைப் பாதையின் இருமருங்கிலும், தமது மறைவிடத்திலிருந்து சூரிய ஒளியில் மூழ்க நினைத்து வெளியே வரும் சின்னஞ் சிறு பூச்சிகளைக் கவனித்துக்கொண்டே வந்தவன் பின் தங்கிவிட்டான்.

அவனுடைய பெற்றோர் ஒரு தோப்பின் நிழலில் இருந்த கிணற்றுக்கு அண்மையில் உட்கார்ந்துகொண்டு அவனையழைக்கவும் அவர்களிடம் ஓடினுன். அங்கே ஒரு பழைய ஆலமரம் தன்னைச் சுற்றி வளர்ந்துள்ள பலாமரம், சம்பகமரம் முதலியவைகளுக்குமேல் தன் பலம் பொருந்திய நீண்ட கரங்களை நீட்டியபடி கம்பீரமாக நின்றது. தங்க நிற மலர்களின் மேலும் சிவந்த குல்மோஹர் புஷ்பப் பாத்திகளின் மேலும் அதன் நிழல் பரந்து கிடந்தது, பாட்டி தன் பேரக் குழந்தைகளின்மேல் தன் புடவைத் தலைப்பை எடுத்துப் போர்த்துவது போல. நாணம் மிகுந்த மலர்கள் தம்மைப் பாதுகாப்பவர்களின் கட்டுக் காவலிலிருந்து பாதி விலகிக்கொண்டு தங்கள் வணக்கத்தைச் சூரியனுக்கு உள்ளன்புடன் சமர்ப்பித்து அஞ்சலி செய்தன. அவைகளின் சுகந்த மணம் கொஞ்சங் கொஞ்சமாக வரும் இளந் தென்றலுடன் கலந்து பரிமளத்தை அள்ளி வீசுவதும் பலத்த காற்று வந்ததும் மறைந்து விடுவதுமாக இருந்தது.

குழந்தை தோப்பையணுகியதும் அவன் மேல் மலர் மாரி பெய்தது தன் பெற்றோரைக்கூட மறந்துவிட்டுப் புஷ்ப இதழ்களைச் சேகரிக்க ஆரம்பித்தான். ஆனல் அதேசமயம் புருக்கள் கூவுவதைக் கேட்டு குதூகலத்துடன் தாய் தந்தையரிடம், —‘அதோ புரு! அதோ புரு!’ என்று சப்தமிட்டுக்கொண்டு ஓடினுன். மலரிதழ்கள் அவன் கையிலிருந்து விழுந்ததைக் கூடக் கவனிக்கவில்லை. அவர்கள் முதலில் ஒருவிதமான அசட்டையாகப் பார்த்தார்கள். ஒரு குயில் வெகு அழகாகக் காதல் கீதம் பாடியதும் அவர்களுடைய அடைபட்டுக் கிடந்த உணர்ச்சிகளும் விடுபட்டன.

இதற்கிடையில் குழந்தை ஆலமரத்தைச்சுற்றி, கன்னு பின்னுவென்று ஓடிக்கொண்டிருந்தான். அவனை அழைத்துக் கொண்டு கடுகு வயல்களைக் கடந்து சந்தைக்குப் போகும் ஒரு குறுகிய பாதையில் போனுர்கள்.

அவர்கள் கிராமத்தையணுகியதும் பல திசைகளிலிருந்தும் பல்வேறு பாதைகளின் வழியாக மனித வெள்ளம் திரண்டு வந்துசேர்வதைக் குழந்தை கவனித்தான். என்றுமே கண்டிராத அந்தப் புது உலகை

அவன் அணுகியதும் அது அவனை மிகவும் வசீகரித்தது.

ஒரு மிட்டாய்க்காரன் குலாப்ஜாமன், ரஸகுல்லா, பர்பி, ஜிலேபி முதலியவை களை ஒரு மூலையில் விற்றுக்கொண்டிருந் தான். தங்கம், வெள்ளி இலைகளினால் அலங்கரிக்கப்பட்டு, பல வர்ண மிட்டாய் கள் நிறைந்திருக்கும் அவன் கடையில் ஏராளமான கூட்டம் நெருங்கிக் கொண் டிருந்தது. குழந்தை ஆவல் நிறைந்த கண் களுடன் பார்த்தான். அவனுக்கு மிகவும் பிடித்தமான பர்பியைக் கண்டதும் நாக்கு ஊற்றெடுத்தது. "அந்த பர்பி ......எனக்கு.........வேணும்"— என்று மெதுவாக முணு முணுத்தான். ஆனால் அவனுக்கே தெரியும்; அவன் என்ன தான் கேட்டாலும் அவன் பெற்றோர் களின் காதில் ஏறாது. அவன் பெரிய ஆசைக்காரன் என்று பழி வேறு சுமத்து வார்கள்——என்றெல்லாம். ஆகவே அவர்களுடைய பதிலை எதிர் பார்க்கா மலே அவர்களுடன் நடந்தான்.

ஒரு பூக்காரன் அழகிய குல்மோஹர் புஷ்பங்களும் மாலைகளும் விற்றுக்கொண் டிருந்தான். அந்த மலர்களிலிருந்து காற் றில் மிதந்து வரும் மிருதுவான, இன்ப மண த்தினால்வெகுவாகக்கவரப்பட்டான். அவன் மலர்கள் குவிந்து கிடக்கும் பூக் கூடைக்கு அருகிலே சென்று, "எனக்கு இந்த மாலை வேணும்"—என்று மெல்லக் கெஞ்சினான். ஆனால் அவனுடைய பெற் றோர்கள் அவைகளெல்லாம் மிகவும்மட்ட மானவை என்று சால்ஜாப்புச் சொல்லி வாங்கமறுத்துவிடுவார்களென்பதும் அவ னுக்குத் தெரியும். எனவே மீண்டும் பதி லுக்குக் காத்திராமல் நடக்க ஆரம்பித் தான்.

அடுத்தாற்போல் ஒருவன் மஞ்சள் பச்சை சிகப்பு வர்ணங்களாலான பலூன் களை ஒரு கோலில் கட்டிக்கொண்டு விற் றுக் கொண்டிருந்தான். வான வில்லின் வர்ணமெல்லாம் பிரதிபலிக்கும் அந்தப் பலூன்கள் அவனை ஆனந்த பரவசத்தில் ஆழ்த்தி, அத்தனை பலூன்கள்யும் தானே வைத்துக்கொள்ள வேண்டும் என்ற அடக்க முடியாத தீவிர ஆசையைக் கிளறி விட்டது. ஆனால் இவைகளை வைத்து விளையாட அவன் என்ன, பச்சைக் குழந் தையா?—என்று சொல்லி வாங்கித் தர மாட்டார்கள் என்பதையும் உணர்ந்து மேலும் நடக்க ஆரம்பித்தான்.

ஒரு பாம்புப் பிடாரன் ஒரு நாகத்திற்கு எதிரில் வெகு நன்றாக மகுடி வாசித்துக் கொண்டிருந்தான். அது ஒரு பெட்டிக் குள் தன் உடல் முழுவதையும் சுருட்டிக் கொண்டு, அன்னத்தின் கழுத்து லாவண் யமாகநிற்பதுபோலத் தலையை உயர்த்திக் கொண்டு நின்றது. மகுடியின் நாதம் அதன் காதுகளில் மிருதுவாக, ஒரு சின்ன நீர் வீழ்ச்சியின் இன்னிசையுடன் நுழைந்து அதைப் பரவசப் படுத்திக் கொண்டிருந்தது. குழந்தை அந்தப் பாம் பாட்டியிடம் சற்றுச் சென்றான். ஆனால் அந்தப் பாம்பாட்டிகளைப் போன்றவர்கள் பாடும் மட்ட ரகமான பாட்டுகளைக் கேட்கவே கூடாது என்று அவனுடைய பெற்றோர்கள் முன்னமேயே கண்டித் திருப்பது நினைவுக்கு வரவும் நேராக நடக்கலானான்.

போகிறவழியில் ஒரு ராட்டினம் இருந் தது. அதில் ஏறிக்கொண்டிருந்த ஆண், பெண், குழந்தைகள் ராட்டினம் சுற்று வதினாலுண்டாகும் ஒருவித குதூகலப் போதையினால் உரக்கக் கத்துவதும், காட்டுச்சிரிப்பாகச் சிரிப்பதுமாக இருந் தனர். அவர்கள் சுற்றிச்சுற்றி வருவதைக் குழந்தை வெகு ஆர்வத்துடன் கவனித்தான். ஆர்வத்தில் எழுந்த புன்னகை அவன் முகத்திற்கு ஒளி செய் தது. அவன் கண்கள் ராட்டினத்தைப் போலவே சுற்றின. ஆச்சரியத்தில் ஆழ்ந்த அக் குழந்தையின் உதடுகள் சற்றே விரிந்திருந்தன. இந்நிலையில் அவன் தானும் அவர்களுடன் சுற்றி வரு வதாகவே கருதினான். ராட்டினம் வெகு வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. பிறகு கொஞ்சங் கொஞ்சமாய் வேகம் குறைய ஆரம்பித்தது. சற்று நேரத்தில், வாயில் விரலை வைத்துக்கொண்டு மெய் மறந்திருந்த குழந்தை அது நின்று விட்டதைக் கண்டான்.

ராட்டினத்தில் ஏறிச் சுற்றப் போகும் சுகானுபவத்தில் அவனுக்குள்ள ஆர்வம், அவனுடைய பெற்றோர்கள் என்றைக் குமே அவன் கேட்பதையெல்லாம் நிரந்தரமாக மறுத்து விடுவதினால்,

மழுங்கி விடுவதற்கு முன்பே மிகவும் துணிந்து,—"அப்பா......அம்மா......நான் ராட்டினத்திலே சுற்றணும்"...என்றான்.

இதற்குப் பதிலே இல்லை. திரும்பினான் அவர்களைப் பார்க்க. அவர்களைக் காணோம். அவனுக்கு முன்னால் நடந்து விட்டார்கள். முன்னால், பின்னால், பக்கத்தில்—எங்கும் பார்த்தான். அவர்களின் அடையாளமே தென்படவில்லை.

அவனுடைய வறண்ட தொண்டையிலிருந்து பரிதாபகரமான அழுகைக் குரல் எழுந்தது. பயத்தினால்,—"அம்மா அப்பா"—என்று அழுது கொண்டே ஓட ஆரம்பித்தான். கண்ணீர் கங்கு கரையின்றி வழிய ஆரம்பித்தது. அவன் சிவந்த முகத்தில் பயமே குடி கொண்டிருந்தது. எங்கே போவது, என்ன செய்வது என்பது ஒன்றும் தோன்றாதவனாய், பீதியுடன் இங்குமங்கும் தாறுமாறாகக் கண்டபடி ஓடினான். அம்மா—அப்பா—என்ற வார்தைகளே அந்த இளந் தொண்டையிலிருந்து மெதுவாக வந்தன. அவனுடைய மஞ்சள் வர்ண முண்டாசு அவிழ்ந்துவிட்டது. அவனுடைய மற்ற ஆடைகளும். வியர்வையில் நனைந்து தூசி படிவதினால் மிகவும் அழுக்கடைந்து விட்டன. அவனுடைய சின்னஞ்சிறு உடல்கூட இரும்புக்குண்டாகக் கனப்பது போல இருந்தது. இங்குமங்கும் ஓடியதில் குழந்தை களைத்துவிட்டான். பலனும் ஏற்படவில்லை. அழக்கூட முடியாத நிலையில் தேம்பிக் கொண்டே நின்றான். எதிரே சற்றுத் தூரத்திலுள்ள புல் வெளியில் ஆடவரும் பெண்டிரும் பேசிக் கொண்டிருப்பது அவனுடைய நீர் நிறைந்த கண்களுக்கும் தெரிந்தது. மஞ்சளாடை உடுத்திருந்த கூட்டத்தினிடையே உற்று நோக்கினான். ஆனால் அவனுடைய தாய் தந்தையரை மட்டும் காணமுடியவில்லை. அங்கிருந்தவர்கள் சிரிக்க வேண்டுமென்பதற்காகவே குதூகலமாகச் சிரிப்பதுபோலக் காணப்பட்டனர். பிறகு ஜனங்கள் கூட்டங் கூட்டமாகப் போய்க் கொண்டிருந்த ஒரு கோவிலை நோக்கி வேகமாக ஓடினான். அங்கே ஒவ்வொரு அங்குலத்தலத்திலும் மனிதக்கூட்டம் நெருங்கி நின்றுகொண்டிருந்தது. எனினும் அவர்களுடைய கால்களுக்கிடையே புகுந்து தேடினான். அப்பொழுதும் அவன் வாய் மிகவும் பரிதாபமான குரலில் அம்மா—அப்பா—என முணுமுணுத்த வண்ணமிருந்தது.

கோவிலின் வாசலில் கூட்டம் மிகவும் அதிகமாக இருந்தது. கொலையின் தாபம் பிரதிபலிக்கும் கொடூரக் கண்களையுடைய முரட்டாத்மாக்களே அங்கே நிறைய இருந்தனர். அவர்களுக்கிடையே நுழையக் குழந்தை முயன்றான். ஆனால் மிக்ககொடூரமாக அவர்களுடைய இரக்கமற்ற கால்கள் அவனை இங்கு மங்கும் தள்ளின. அவன்மட்டில் மிகவும்உரத்த குரலில் — அ...ம்...மா! — அ....ப்...பா எனக்கத்தியிராவிட்டால் அங்கேயே மிதியுண்டு நசுங்கியிருப்பான். அந்தக் கூட்டத்திலிருந்த ஒருவர் அந்தக் குரலைக் கேட்டு, அத்தனை கூட்டத்திலும் குனிந்து துழாவி வெகு சிரமத்துடனே அவனை வாரி எடுத்துக்கொண்டார்.

கூட்டத்தை விட்டு வெளியே வந்ததும் "நீ இங்கே எப்படி வந்து சேர்ந்தாய்? நீ யாருடைய குழந்தை?"...என்றெல்லாம் கேட்டார். குழந்தை முன்னிலும் அதிகமாக ஆத்திரத்துடன் அழுது கொண்டே அம்மா—அப்பா—என்றுதான்கதறினான்.

அவனை ஆசுவாசப்படுத்த எண்ணி ராட்டினத்திடம் கொண்டு போய், "இந்தக் குதிரைகளில் ஏறிச் சவாரி செய்கிறாயா?" என்று கேட்டார். குழந்தையின் தொண்டையிலிருந்து ஆயிரம் விம்மல்கள் கிளம்பின. "அம்மா, அப்பா" என்ற வேண்டுகோளே மீண்டும் எழுந்தது.

அவர் பாம்பாட்டி மகுடி வாசிக்குமிடத்துக்குக் கொண்டு போய்—"பாட்டு வெகு நன்றாயிருக்கிறது தம்பி—கேள்" என்று கொஞ்சினார். ஆனால் குழந்தை தன் காதுகளைப் பொத்திக்கொண்டு உரத்த குரலில்,—"அம்மா, அப்பா வேணும்" என்று கதறினான்.

பலூன்களின் பலவித வர்ணங்கள் குழந்தை மனத்தைக்கவரும் என்ற எண்ணத்துடன் அங்கே எடுத்துக் கொண்டு சென்றார்.

"வானவில் வர்ணமுள்ள பலூன் வேணுமா?" என்று வெகு ஆதரவுடன் அவன் மனதை மாற்ற முயன்றார்.

குழந்தையோ பலூன்களை ஏறிட்டுக் கூடப்பார்க்காமல், "அம்மா—அப்பா—" என்று தேம்பியழுதது.

இவ்வளவிற்கும் அவர் அலுத்துக் கொள்ளாமல் எப்படியாவது அவனைத் திருப்தி செய்விக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் நகர வாசலுக் கருகிலிருக்கும் பூக்கடைக்கு வந்து—"இதோ பார்! எவ்வளவு இனிய மணமுள்ள மாலைகள்; இவற்றுள் ஒன்றை வாங்கி உன் கழுத்தில் போட்டுக் கொள்ளேன்!" என்றார்.

ஆனால் அவன் பூக்கடையிலிருந்து முகத்தைத் திருப்பிக்கொண்டு," அம்மா--அப்பா"—என்றே தேம்பியழுதான்,

என்ன செய்தும் ஆறுதல் செய்ய முடியாமல் போகவே அவர் அவனை மிட்டாய்க் கடைக்கு அழைத்துக்கொண்டுபோய், —"உனக்கு எந்த மிட்டாயெல்லாம் வேணும்?" என்று அன்புடன் கேட்டார்.

அவன் மிட்டாய்க் கடையைக்கூடத் திரும்பிப் பார்க்கவில்லை, "அம்மா—அப்பா—வேணும்" என்ற பதிலே இம்முறையும் தேம்பலுடன் வந்தது.

பொன் செய்யும் மருந்து

எம். எஸ். கமலா

லக்ஷ்மியம்மாள் காம்ரா உள் வாயிற்படிக்கருகில் கூடத்தில் உட்கார்ந்திருந்தாள். அவள் முகம் தெள்ளிய நீரோடையைப்போல் மின்னிக்கொண்டிருந்தது. அடுக்களையில் வேலையாயிருந்த வேதத்தின் காதில் பேச்சரவம் கேட்கவே வெளியில் வந்து எட்டிப் பார்த்தாள்.

அடுத்த தெரு அருணாசலத்திடம் லக்ஷ்மியம்மாள் வெகு கனிவாய் நகை முகத்துடன் பேசிக்கொண்டிருந்தாள். வேதத்திற்கு ஆச்சரியமாயிருந்தது. மாமனார் இறந்து சரியாய்ப் பதினைந்து நாட்கள் ஆகவில்லை. மூன்றாண்டுகளுக்கு முன் வந்துபோன அருணாசலம் அன்று வந்து கைம்பெண் கோலத்துடனிருக்கும் லக்ஷ்மியம்மாளைப் பார்த்தால் அந்த அம்மாள் சகஜமாய்ப்பேசுவதா? ஊருக்காகவானாலும் ஒப்புக்கு ஒப்பாரியிட்டழவேண்டாமா? பதினைந்து நாட்களுக்குமுன் இதே கூடத்தில் குண்டுக்கல்லைப்போல் மாமனார் தாம் வாங்கி வந்த மருந்துச்சாமான்களைப் பிரித்து வைத்துக்கொண்டிருந்தவர் மாரடைப்பினால் திடீரென்று இறந்தார். அப்பொழுது இரண்டு சொட்டுக் கண்ணீர் லக்ஷ்மியம்மாளின் கண்களிலிருந்து தெறித்து விழுந்தது. பிறகு அக்கண்களில் கலக்கமோ ஈரமோ தென்படவேயில்லை. வேதத்திற்கு அது வெகு ஆச்சரியமாயிருந்தது. அதைப்பற்றியே குழம்பிக்கொண்டிருந்த அவள் மனதுக்குள் சாந்தி ஏற்படவில்லை. அவள் எண்ணம் புரையோடிக்கொண்டிருந்தது. இக்காரியத்தைக் கண்டதும் எண்ணம் திணறியது. ஆச்சரியம் விரிந்தது. கதவின்மேல் கல்லாய்ச் சாய்ந்தாள் சிறிதுநேரம். அவளை விழிப்புறச் செய்தது லக்ஷ்மியம்மாளின் குரல்.

“அருணாசலம்! அதைப்பற்றி யோசனை செய்யாதே! மூனு வருஷத்துக்கப்பால் ஊரிலிருந்து வந்து பூட்டியிருந்த வீட்டைத்திறந்து குடியேறிய உன் சிரமம் எவ்வள்வென்று தெரியும். பையன் வந்ததும் நானே வருவேன் போ!”

“என்ன?” என்று ஆச்சரியத்துடன் லக்ஷ்மி அம்மாளின் முகத்தைப் பார்த்தான் அருணாசலம்.

“ஏன்ப்பா! நான் மாத்திரம் இம்மாதிரி விதிக்குப் புதியவளா? பெண்ணாகப் பிறந்ததும் ஏற்றுக்கொள்ளக் காத்திருக்க வேண்டிய கட்டம்தானேப்பா! சிலநாள் தலைமறைந்து உள்ளோடு மக்கிக் கிடந்து பிறகு வெளியில் வந்தால் போய்விடுமா?” என்றாள். அருணாசலம் தன் அறியாமைக்கு வெட்கி வெளியில் சென்றான்.

* * *

கனகசுந்தரம் புகையிலைக் கிடங்கு வைத்திருந்தார். அத்துடன் தாத்தா காலத்து நாட்டு வைத்திய முறையிலும் கைதேர்ந்து, ஆயிரக்கணக்கில் பணம் திரட்டிக்கொண்டிருந்தார். காலச் சுழலில் ஸ்ரீதேவியின் பார்வை இவர்மேலிருந்து அகலவே புகையிலைக்கடை திண்ணைக் கடையானதுமன்றி, கையிருப்பும் கரைந்தது. கனகசுந்தரம் நல்ல நிலையிலிருந்தபோதே அவருக்கு இளையாளாய் வாழ்க்கைப்பட்டாள் லக்ஷ்மியம்மாள். லக்ஷ்மியம்மாள் அவ்வீட்டிற்குள் நுழையும்போது ராஜகோபாலன் ஏழு வயதுச் சிறுவன்.

லக்ஷ்மியம்மாளுக்குத் தற்சமயம் வயது நாற்பத்தைந்து. அவள் சந்தான பாக்கியத்திற்குத் விலக்காகிவிட்டாள். லக்ஷ்மியம்மாளின் போக்கே விசித்திரமானதென்பார்கள் அவளைக் கவனிப்பவர்கள். கனகசுந்தரம் தாம் வசித்த மாளிகை போன்ற வீட்டையும், லக்ஷ்மியம்மாளையும், உள்ளூரிலேயே தம் மகனுக்கு மணமுடித்த நாட்டுப் பெண்ணையும், பிள்ளையையும் விட்டுக், கவலையற்றுக் கண்ணை மூடிவிட்டார். மாமனார் இறப்பதற்கு முதல் நாள் எப்பொழுதும்போல் மாமியாரைப் பார்க்கவந்த வேதத்தை மறுநாள் பிறந்தகம் போகலாமென்று நிறுத்தினாள் லக்ஷ்மியம்மாள். அதே நிலையாய்ப் பதினைந்து நாட்களாய்க் குடித்தனம் செய்துகொண்டிருக்கிறாள் வேதம்.

வேதத்திற்குத் தன் மாமி நோக்கம் விளங்கவில்லை. மாமனார் இறந்த நாள் முதல் வரும் ஆண் பெண்களுடன் கலகலவென்று பேசுவதுமன்றி, தெருப்புறமும் போய் நிற்

பதைப் பார்த்தால் அவளுக்கு ஏதோ மாதிரியிருக்கும். இன்று அவள் அருணுசலத்திடம் சொன்னதைக் கேட்டதும் அவளுக்கு இன்னும் என்னவோ போலிருந்தது. வேலை செய்யவே தோன்றவில்லை.

இருட்டினதும் வெளியிலிருந்து வந்த ராஜகோபாலன் சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்தான். லக்ஷ்மியம்மாள் வெளியில் சென்றுள். செல்லும் மாமியாரைப் பார்த்து, வேதம் கன்னத்தில் கையை ஊன்றி, "கணவன் இறந்த பதினைந்து நாட்களுக்குள் தெருவில் போவதா? அறுத்து ஐந்து நாட்கள் ஆகவில்லை." என்று முணுமுணுத்தபடி கணவனிடம் வந்து, "உங்கம்மா எங்கே போறு? என்று சைகை செய்து கேட்டாள். ராஜகோபாலன் வேதத்தின் சைகையை அறிந்துகொண்டாலும் அறியாதவன்போல் மோட்டு வளையைப் பார்த்துக் கொண்டிருந்தான். லக்ஷ்மியம்மாளின் இந்தச் செய்கை வேதத்தின் பவித்திர எண்ணங்களுக்கும், பழைய சம்பிரதாயத்திற்கும் வேர்க்கல்லியாய்த் தோன்றியது.

"உங்களைத்தான் கேக்கறேன். உங்கம்மா எங்கே போகிருர்களென்பதைப்பற்றி உங்களுக்கு அக்கரையில்லையா?" என்று எடுப்பாய்க் கேட்டாள்.

"என் அக்கரை எதுவரை என்பது எனக்குத் தெரியும். அனுவசியமாய் உனக்குச் சம்பந்தமில்லாத விஷயத்தில் நீ தலையிட்டு, கேள்விகள் கேட்பது மிகவும் தவறென்பதை அறிந்துகொள்" என்றுன் சீறிக்கொண்டு எழுந்து.

அவள் அவனிடம் எதிர்பார்த்தது இந்தச் சீற்றத்தையல்ல. அவனும் தன்னுடன் சேர்ந்து லக்ஷ்மிஅம்மாளின் செய்கைக்காக வருந்துவான். அப்பொழுது இருவருமாய்ச் சேர்ந்து மாமியாரைச்சில நாள் சம்பிரதாயச் சிறையில் வைத்துக் குல கௌரவத்தைக் காப்பாற்றிய மாபெரும் புகழ் தனக்குக் கிடைக்குமென்று எதிர்பார்த்தாள். அவள் கண்களில் ஏமாற்றம் திரையிட்டது.

"இவ்வீட்டில் எவ்வித அதிகாரமும் எனக்கில்லாதபோது நான் ஏன் அனுவசியமாய் இங்கிருக்கவேண்டும்?" என்றுள் சீற்றத்துடன்.

"உனக்கு இவ்வீட்டில் சர்வாதிகாரமும் உண்டு. ஆனுல் என் தாயின்மேல் உனக்கு அதிகாரம் செய்ய உரிமையில்லையென்பதை நன்ருய் அறிந்துகொள்" என்றுஅழுத்தமாய்ச் சொன்னுன். அவள் திகைத்து ஒரு நிமிஷம் நின்றுள். பிறகு இடிந்த குரலில் மெள்ள, "அப்படியானுல் என்னை எங்க வீட்டுக்கு அனுப்பிவிடுங்கள்" என்றுள்.

"சரி" என்று வெகு நிதானமாய்ச் சொல்லி எழுந்து வெளியில் சென்றுன் ராஜ

கடவுளின்
கோவிலுக்கான
பரிசுத்தம்



தெய்வீகத்திற்குப் பரிசுத்த இன்றியமையாதது மிகவும் சுத்தமளிக்கும் சடங்காச்சார ஸ்நானங்களுக்கு சுயமான ஸோப்பை மட்டுமே நாம் உபயோகிக்க வேண்டும். ஸோப்பில் ஏது கலப்புமிருக்கலாம். ஆனுல் கோத்ரெஜ ஸாண்டலில் நன்மை தரும் கலப்பற்ற தாவர எண்ணெய்ச் சத்துக்களே கோத்ரெஜ் சௌந்தரியப் பொருட்களிலெல்லாம் உள்ளன போன்று,

தனிமைப்பட உபயோகப் படுத்தப்பட்டுள்ளன.

வெறுக்கத்தக்க மிருகக் கொழுப்புகள் யாதும அவைகளில் இல்லை. சுய மைசூர் சந்தணத் தைலம யதேஷ்டமாய்ப் பொருந்தப் பெற்ற கோத்ரெஜ் சந்தண சோப்பானது இன்பமான குளிர்மை, இதம், மணம் இவைகளையுடைய நிலையை யளிக்கும். எனவே, சரீரம் கடவுளின் கோவிலாயிருக்க, அதைத் தூய்மைப்படுத்த கோத்ரெஜ் தாவர வஸ்து ஸாண்டல் ஸோப்பல்லாது வேறெதுதான் ஏற்றதாகும்?

கோத்ரெஜ் லிம்டா — கிருமிகளைக் கொல்லவும் சொஸ்தமளிக்கவும் வல்ல வேம்பின் குணங்களுடைய ஸோப்.

Godrej Sandal

கோத்ரெஜ் ஸாண்டல்

சாவி மார்க் (சந்தண)

டாய்லெட் (ஸ்நான) ஸோப்

குறைந்த விலையில் மற்றைய ஸோப்புகளைவிட மிகவும் உயர்தரமான ஸோப்பு

கோத்ரெஜ் ஸோப்ஸ், லிமிடெட்.
மதராஸ்: 164, பிராட்வே; கொச்சின்: 6/36, கல்வாதி.

உங்களுடைய விவசாயப் பிரச்னைகளை

நாங்கள் தீர்த்து வைப்போம்

WE CAN SOLVE YOUR AGRICULTURAL PROBLEMS



USE Fordson MAJOR TRACTORS

எத்தகைய வேலையாயினும், எதற்கும் உதவும் போர்ட்ஸன் மேஜர் அதைச் சாதிக்கும். அதன் பலதிறப்பட்ட சக்தியை நீங்கள் பரிபூரணமாக அடைய நாங்கள் உதவ இயலும். ஏனெனில் எத்தகைய கருவிகள் தேவையாயினும் — விவசாய சாஸ்திரக்ஞர்களால் ஸ்பெஷலாகத் தயாரிக்கப்பட்டவை— எங்கள் மூலம் நீங்கள் தருவித்துக் கொள்ளலாம். உங்களுக்குத் தேவையான கருவிகளைச் சீரிய முறையில் அமைத்துக் கொடுப்பதற்கு நாங்கள் உதவத் தயார்.

ஸிம்ப்ஸன் & கம்பெனி லிமிடெட்

போர்ட்ஸன் மேஜர் டிராக்டர் டீலர்ஸ்

202—203 மவுண்ட் ரோடு சென்னை—2

கிளைகள்: **பெங்களூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி, ஹைதராபாத் (டெக்கான்)**

கோபாலன். அவன் செல்லும் திசையைப் பார்த்துக் கொண்டே தன் கண்களைத் தலைப்பால் துடைத்துக் கொண்டு தன் அறைக்குச் சென்றாள்.

* * *

மறு நாள் மருமகள் பிறந்தகம் செல்ல மூட்டை கட்டுவதைப் பார்த்த லக்ஷ்மியம்மாள் வேதத்தருகில் சென்று, "எங்கு பிரயாணமம்மா?" என வெகு அன்பாய்க் கேட்டாள்.

"எங்க வீட்டுக்கு"

"யாராவது அழைத்துப்போக வந்திருக்கிறார்களா?"

"இல்லை"

இதைக்கேட்டு ஆச்சரியத்துடன் நீர் நிரம்பிய வேதத்தின் கண்களை உற்றுப்பார்த்து நிதானமாய், "இந்த வீட்டிலிருப்பதற்கு உனக்குக் கஷ்டமாயிருக்கிறதா?"

"......" அவளுக்குப் பதில் சொல்லமுடியவில்லை.

அதே சமயம் தெருவில் வண்டி வந்து நிற்க ராஜகோபாலன் உள்ளே வந்தான். கடுகடுப்பாய் மனைவியின் முகத்தைப் பார்த்து, "பிரயாணத்திற்குச் சித்தமாகி விட்டாயா?" என்று கேட்டான்.

குனிந்த தலையை நிமிராமல் நாக்குழறச் சித்தமாகி விட்டதாகச் சொன்னாள். வண்டியில் அவள் பெட்டி, படுக்கையெல்லாம் எடுத்து வைத்தான். வேதம் மாமியாரை நமஸ்கரித்தாள்.

மாமியார் மருமகளின் தலையை வருடியபடி "திடீரென்று பிரயாணப்பட்டதற்குக் காரணமென்னவோ எனக்குத் தெரியவில்லை." என்று அவள் முகவாய்க் கட்டையைத் தூக்கி முகத்தை உற்றுப் பார்த்தாள். ஆனால் அவள் மாத்திரம் சமாதானமொன்றும் சொல்லாமல் வண்டி ஏறினாள்.

லக்ஷ்மியம்மாள் வண்டியின் பின் நின்று கலவரமடைந்த உள்ளத்துடன் "இந்தத் திக்கற்றவளால் ஏதாகிலும் குறைவேற்பட்டிருந்தால் .... அதை உன் மாமனாருடையதாய் அவர்மேல் சுமத்தி யாரிடமும் பேசாதே! அவர் உனக்கும் எனக்கும் அனைவருக்கும் பூஜ்ஜியர்" என்றாள்.

வண்டி நகர்ந்தது. பின்புறம் ஏறிக் கொண்டே ராஜகோபாலன் "இப்பொழுதே திரும்பிவிடுவேன். நான் வரமாட்டேனே என்று நினைத்துச் சமைக்காமல் இருந்துவிடாதே" என்று சொன்னான். வண்டி சென்ற திசையை வாயடைத்தபடி பார்த்து நின்றாள் லக்ஷ்மியம்மாள்.

ஒரு மாதம் ஓடிவிட்டது. ராஜகோபாலன் மனைவியைப் பிறந்த வீட்டில் விட்டுவந்த அன்றே அவன் வியாபார விஷயமாய், கல்கத்தா சென்று அன்று காலைதான் வந்தான். மனைவியை அழைத்து வருவதைப்பற்றி யோசனை செய்யாமல் சுற்றி வந்தான். லக்ஷ்மியம்மாளுக்கு ஒன்றும் தோன்றவில்லை. நாட்கள் கவலையற்று, கவலையுற்றவர்களின் நெஞ்சைக் குத்திப் பிளந்து சென்றன.

ஒரு நாள் லக்ஷ்மியம்மாள் பிள்ளையிடம் பேச்சுடன் பேச்சாய், 'என்னவானாலும் கொஞ்சம் உண்டானப்பட்டவர்களின் பெண்ணிடத்தில் பிடிவாதம் இருக்கும். அதில் ஆச்சரியமொன்றுமில்லை. நீயாகிலும் போய் விசாரித்துக்கொண்டு வரக்கூடாதா?'' என்றாள்.

ராஜகோபாலனுக்குத் தன் தாய் யாரைப் பற்றிச் சொல்லுகிறாளென்று தெரிந்தது. உடைந்த உள்ளத்துடன் தன் தாயைத் தாழ்ந்து பணிந்து, "அவளைப்பற்றி என்னிடம் ஒன்றும் சொல்லாதே அம்மா!" என்றான். லக்ஷ்மி அம்மாள் ஆச்சரியத்துடன் அவன் முகத்தைப் பார்த்து "என்ன?" என்று கண்களை அகல விரித்தாள். அவன் ஒன்றும் சொல்லாமல் இருக்கவே 'இவர்களிடையே என்ன புண்பட்டிருக்கிறதோ தெரியாவிடினும் தன் பிள்ளை பதில் விடுக்காமலிருப்பதினால் லக்ஷ்மிஅம்மாளின் மனம் புண்பட்டு நோவெடுக்கத் தொடங்கியது. மறுபடியும் ராஜகோபாலன் வேலை விஷயமாய் வெளியூர் சென்றுவிட்டான்.

லக்ஷ்மியம்மாள் தனக்கு மிகவும் வேண்டிய ஒரு கிழவர் மூலமாய், சம்பந்திக்குச் சொல்லி அனுப்பினாள். "பையனின் விஷயம் எனக்குப் புரியவில்லை, நாட்டுப் பெண்ணை உடனே இங்கனுப்ப ஏற்பாடு செய்யுங்கள். ஆலசியம் செய்தால் அதனால் ஏற்படும் எவ்வித இடைஞ்சலுக்கும் என்னை உடந்தையாய் நீங்கள் கருதினால் தவறான வழியில் சென்றவர்களாவீர்கள். பையனுக்குக் கடிதமெழுதி அவன் இப்படி நாட்களைக் கடத்துவதற்குக் காரணம் அறியுங்கள்."

இதைக் கேட்ட வீராசாமி வந்த பெரிய மனிதரிடமே லக்ஷ்மியம்மாளுக்குச் சொல்லி அனுப்பினார்.

"எங்கள் குடும்பம் நன்னடத்தையுடன் கூண்டு கட்டியிருக்கும் குடும்பம். வெட்கம்

கெட்டவர்களுடன் சம்பந்தம் செய்ததற்கு மிகவும் வருந்திக்கொண்டிருக்கிறேன். இப்பொழுதே நான் தலை குனிந்துதான் நடக்கிறேன். இன்னும் மருமகனும் பெண்ணை வாழாமல் வைத்துவிட்டானென்ருல் என் தலை தரையைத் தொடுவது நிச்சயம். இம்மட்டிலாவது எனக்கு நல்வார்த்தை சொல்லி அனுப்பியதற்கு என் சகோதரியின் பேச்சை ஏற்றுக்கொண்டேனென்று சொல்லுங்கள்.''

இதைக் கேட்டதும் லக்ஷ்மியம்மாள், எதற்காக வெட்கம் கெட்டவர்களாகவேண்டும். மானிடர்கள் எந்தச் சந்தர்ப்பத்தில் வெட்கம் கெட்டவர்களாக வேண்டி வருகிறதோ அவளுக்கு விளங்கவில்லை. தன் பிரயத்தனத்தால் தங்கள் வம்சத்தின்மேல் பூசப்பட்ட 'அபவாதம்' என்ற சிறிய வண்ணப்பூச்சு மழை நீரினுல் மறைந்துவிட்டதுபோல் நினைத்துச் சுற்றி வந்தாள்.

* * *

வெளியூர் சென்றிருந்த ராஜகோபாலன் வந்த மறுநாளே அவனுக்கு மாமனுரிடமிருந்து வந்த கடிதத்தைத் தாய்க்குக் காட்ட இஷ்டப்படாமல் பத்திரப்படுத்தினுன் தாய்க்குக் காட்டாமலிருக்க அவன் நினைக்கவில்லையெனினும் ஒரு முடிவுக்கு வரும்வரையில் தாயிடம் சொல்ல விரும்பவில்லை.

இலையிலிருந்த குழம்புச்சோற்றைப் பிசைந்துகொண்டே தாயைப்பார்த்து. "நான் சாயங்காலம் போறேன்" என்ருன் ராஜகோபாலன்.

"எங்கே?" என்ருள் பரபரப்புடன்.

"நீ போகச்சொன்ன இடத்திற்கு."

அவள் வாய்விட்டுச் சிரித்தாள். அச்சிரிப்பு எத்தனையோ நாட்களுக்குப்பின், அவன் தந்தை இருக்கும்போது தன் கலியாணம் நிச்சயமான அன்று அந்த நிர்மல நகைப்பை அவன் தாயின் முகத்தில் அவன் கண்டான். அதே மாதிரி ஆனந்தச் சிரிப்பு. ராஜகோபாலன் தாயின் முகத்தைப் பார்த்து "ஏன் சிரிக்கிருய்?" என்று கேட்டான்.

அவளுக்குச் சிரித்ததன் காரணம்தெரியும். சொன்னுல் அதன் பிரதிபலன் எந்த ரூபத்தில் தோன்றுமோ அதுவும் தெரியும். அதனுல் ஆனந்தமாய் அவனைப்பார்த்து, "ஏன்சிரிக்கக் கூடாதா? நான் சொன்னபோதே போயிருந்தால்......" என்று இன்னும் ஏதோ சொல்ல வாயெடுத்தபோது ராஜகோபாலன் மாமனுரின் கடிதத்தை இடது கையால் வீசி, "நானுக இப்பொழுது அங்கே செல்ல அத்தனை ஆண்மையற்றவனல்ல. அவர் வருந்தியழைத்தபின்தான் நாளை அழைத்து வர நல்ல நாளென்று செல்லுகிறேன்."

மாலை மணி ஐந்திருக்கும், வீராசாமி வீட்டின் பின்புறம் தோட்டத்தில் செடிகளைப் பார்த்து பதியம் போடுவதைப் பதியம் போட்டு, கத்தரித்து விடுவதைக் கத்தரித்துக் கொண்டிருந்தார். ராஜகோபாலன் அதிவேகமாய் சைகிலில், வந்திறங்கினுன். கணவனின் வருகையை அறிந்த வேதம் தந்தையிடம் ஓடி, "அப்பா அவர் வந்திருக்கிருர்" என்ருள்.

"எவர்?" என்று தம் வேலையின்மேல் சிரத்தையாய்க் கேட்டார். அதற்குள் அவர் சிறியபெண் எட்டு வயது இந்து, "அப்பா அத்தான் வந்திருக்கார்" என்று கைக்கொட்டிக் குதித்துக்கொண்டு வந்து சொன்னுள். வீராசாமி கையிலிருந்த மண்ணைத் தட்டி எழுந்து, தெருவுக்கு வந்து, மாப்பிள்ளையை உள்ளே அழைத்தார்.

"வீட்டிலிருந்து நேராய் வருகிறீர்களா?"

அவன் தலையசைத்துக்கொண்டே உள்ளே வந்தான். கைகால் அலம்பிக் கொண்டு அமர்ந்து, தன் அருகில் வந்து நின்ற மாமனரைப் பார்த்தான். அவர் தம்முன் சிற்றுண்டி வைக்கப்பட்டிருந்த மேஜையை மாப்பிள்ளையின்முன் தள்ளி, "உங்கம்மா சௌக்கியமாப்பா?" என்று பரிகாசக் குரலில் கேட்டார்.

"சௌக்கியந்தான்" என்பதுபோல் தலையசைத்தான் ராஜகோபாலன். "அடக்கமாய்வீட்டிற்குள் தலைமறைவாய் இருக்கும் வழக்கம் அவர்களுக்கில்லாவிடினும் கணவனிறந்தவள் எப்படியிருக்க வேண்டுமென்பதை நினைவுபடுத்த வேண்டியது உன் கடமையல்லவா?" என்று அவன் முகத்தைக் கூர்ந்து கவனித்தார். அவன் ஒன்றும் பேசவில்லை. அவர் மறுபடியும் பொறுமையாய் "அவர்கள் செய்யும் காரியம் உண்மையாய் நேர்மையைக் கடைப்பிடிப்பவர்கள்கண்களுக்குத்தவறற்ற தாயிருக்கலாம். ஆனுல் எந்தப் பெண்ணும் காட்டாத புதிய வழியைக் காட்டுவதில் வரும் லாபமென்ன?" என்று நிர்மலமாய் ராஜகோபாலனைப் பார்த்துப் புன்முறுவல் பூக்க "என்றும் எவராலும் சுட்டிக்காட்டிப் பேசாத உங்கள் வம்சம் இன்று அதற்கிலக்காகிறது உண்மைதானே" என்பதுபோல் மாப்பிள்ளையின் கண்களுக்குள் பார்த்தார்.

ராஜகோபாலன் பெரிய சந்தேகத் திரை அறுபட்டு விழுந்ததுபோல் மாமனுர் சொல்வதைச் சிரத்தையாய்க் கேட்டான். அவர் வெகு உற்சாகத்துடன் தம் பேச்சுச் சுவரை எழுப்பினுர்.

"என்னவானாலும் அவள் உனக்கு மாற்றாந் தாய். இதை எவரும் இல்லையென்று மறுக்க முடியாது. ஆனால் அவள் சுயநல வாழ்க்கை வரும் காலத்தில் எவர் மண்டையைப் பிளக்கும் என்பது அவளுக்கு நன்றாய்த் தெரியும். அங்கேதானிருக்கிறது பேதம். அதே தான் பெற்ற மகனாயிருந்தால் அவனுக்கிஷ்டமில்லாததை என்றும் செய்யத் துணியாள்" என்று நிறுத்தினார்.

ராஜகோபாலன் மறுபேச்சுப் பேசாமல் மாமனாரின் சொற்களை விழுங்கிக்கொண்டிருந்தான். அவர் மறுபடியும் சொல்லத் தொடங்கினார். "நீங்களிருவரும் பெற்றவர்களைவிட அந்நியோன்னியமாயிருப்பது எனக்கு ஆனந்தமாகவேயிருக்கிறது. ஆனால் அவளுக்கு மாத்திரம் உண்மைத் தாயன்பிருந்தால் உனக்காக-உன் மேன்மைக்காக-சிறிதேனும் தன் சுயநலத்தைத் தியாகம் செய்யமாட்டாள்?" என்றார். வெகு நிதானமாய், அவர் குரலில் வேற்றுமையோ பரபரப்போ தென்படவில்லை. ராஜகோபாலன் எழுந்தான்.

"ஏன் எழுந்தாய்?"

"நாளை மூன்று மணிக்கு நன்றாயிருக்கிறது. உங்கள் பெண்ணைப் புறப்படுவதற்குத் தயாராய் இருக்கச் சொல்லுங்கள்."

அதுவரை தந்தையின் சாமர்த்தியத்திற்கு வியந்தவளாய்க் கதவருகில் நின்றிருந்த வேதத்திற்குக் கணவனின்பேச்சு அசந்தர்ப்பமாய்த் தோன்றவே, இரண்டடி முன் வைத்துத் தந்தையைப் பார்த்து, "அப்பா! என்னை அனுப்ப நீங்கள் யோசிக்க வேண்டாம். அந்தத் தாய் இருக்கும்போது அந்த வீட்டில் நான் குடித்தனம் செய்யமாட்டேன் என்பது அவர் நினைவிலிருந்தால் போதும்" என்று உள்ளே சென்றாள்.

ராஜகோபாலன் சற்றே திடுக்கிட்டு நின்றான். சட்டென்று ஏதோ நினைவிற்கு வந்தவன்போல் வேதம் நிற்கும் அறை வாயிலைப் பார்த்து, "அந்த வீடில்லாவிட்டால் வேறொரு வீடு. நீ இந்த வீட்டில் இருப்பதென்பது மாத்திரம் பொய்" என்று வெளியில் சென்று சைக்கிளில் ஏறத்தொடங்கினான். வேதத்தின் தந்தை சற்று அயர்ந்து நின்றவர், "என்ன பேச்சப்பா! மரியாதை மட்டு அறிந்த எங்களுக்கு நீ எச்சரிக்கை செய்வது ஆச்சரியமாய்த் தானிருக்கு" என்றார்.

அந்தச் சொல் ராஜகோபாலனின் உள்ளத்தில் தைத்தது. மாமனாரை நிமிர்ந்து பார்த்தான்.

"நாளைக்கு வேதத்தை அனுப்புவதில் ஆக்ஷேபணையில்லை. இன்று இரவு நீ இங்கு இருந்து நாளைக் காலை இருவரும் சேர்ந்து போகக்கூடாதா?"

"இல்லை. எத்தனையோ வேலைகளிருக்கின்றன" என்று காற்றாய்ப் பறந்தான்.

* * *

இருண்டுவிட்டது. தெருவிளக்குகள் மௌனமாய்த் தங்கள் ஒளியை வீசிக்கொண்டு கடமைக் கோல்களாய் நின்றிருந்தன. ராஜகோபாலன் அதிக வேகமாய் வந்து சைகிளைத் தன்வீட்டின்முன் நிறுத்தி அவசரமாய் வாயிற்படி ஏறினான். அவன் அவசரத்தை மௌனமாய், தடுத்து நிற்பதுபோல் கதவு மூடப்பட்டிருந்தது. கதவருகில் சென்று பார்த்தான். கனத்த பூட்டுத் தொங்கிக் கொண்டிருந்தது. அதைப் பிடித்திழுத்தான், ஏமாற்றத்துடன் உதட்டைப் பிதுக்கி "இனிலாபமில்லை" என்று முணுமுணுத்தபடி திண்ணையிலமர்ந்து சுவரில் சாய்ந்தான்.

அரைமணி நேரத்தில் லக்ஷ்மியம்மாள் கையில் 'ஹரிக்கேன்' விளக்குடன் கதவைத் திறக்க வந்தவள் திண்ணையின்மேல் யாரோ சாய்ந்திருப்பதைப் பார்த்து "யார்?" என்று கேட்டாள். ராஜகோபாலன் பதில் விடுக்காமலிருக்கவே விளக்கைத் தூக்கிப் பார்த்து ஆச்சரியத்துடன் "நீ மாமியார் விட்டுக்குப் போகல்லே?" என்று கேட்டாள்.

அவன் அந்த அம்மாளை வெறிக்கப் பார்த்தான் அகங்காரத்துடன். அந்தக் குருட்டு வெளிச்சத்தில் அவளுக்குத் தெரியவில்லை.

"கொஞ்சம் உட்கார்ந்திரு. குளித்துவிட்டு வந்து பரிமாறுகிறேன்" என்று நடையைத் தாண்டி பட்டகசாலைக்குச் சென்றவள் "அவாத்து விசாலாக்ஷிக்குப் பெண்குழந்தை பிறந்திருக்கு. பாபம் யாரும் சகாயத்திற்கில்லாமல் அவஸ்தைப்பட்டாள். போய் என்னாலானதைச் செய்து குழந்தையும் தாயும் வேறானதும் வந்தேன்" என்றாள்.

இதைக் கேட்டதும் அவனுக்குக் கோபம் பற்றிக்கொண்டு வந்தது. ஏதேதோ சொல்ல வேண்டும்போல் தோன்றியது. அந்த அம்மாளின் முகத்தைப் பார்த்ததும் அவன் சொல்ல நினைத்ததைச் சொல்ல முடியாமல் "யாருமேயில்லையா? நர்ஸ் கூடவா வரல்லே" என்றான்.

"வராமலென்ன? வந்தாள்" என்றாள் கள்ளங்கபட்றறு.

"ஒருவேளை நீயே அந்த வேலையையும் ஏற்றுக்கொண்டாயோன்னு நினைத்தேன்" என்றான் குத்தலாய்.

பாவம்! அவன் போக்கை அறியாத அவள் நிர்மலமாய்ச் சிரித்துக்கொண்டு "அது மாத்திரம் தவறான காரியமா? சமயம் வந்தால் அதையும் பார்க்க வேண்டியதுதான்" என்றாள்.

"பிள்ளைப் பொறப்புக்கு......பிரசவத்துக்குப் போய்ப் பணம் சம்பாதிக்க நினைத்தாயா?" என்று கேட்டான்.

லக்ஷ்மியம்மாள் முகம் வெளுத்தது. மகனை வெறிக்கப் பார்த்தாள் இயற்கையான அமைதிப் புன்னகை முகத்தில் மிளிர, "ராஜு! உங்கப்பா எனக்குப் பணத்திற்கு உழைக்கக் கத்துக்கொடுக்கல்லையே! அது உனக்குத் தெரியாதா?" என்று பரபர வென்று குளித்துவிட்டு வந்து இலையைப் போட்டாள்.

சாப்பாட்டின் மேல் சிரத்தையில்லாமல் ஏதோ யோசனையிலாழ்ந்திருந்த ராஜகோபாலனைப் பார்த்து "ராஜு! வேதம் சௌக்கியமாய் இருக்கிறாளா? என்ன ஏதோ மாதிரியிருக்கிறாய்?"

"கல்லுக் குண்டாட்டமா இருக்கிறாள்" என்றான். லக்ஷ்மியம்மாளின் முகம் சிறுத்தது. ராஜுவும் சாதத்தைப் பிசைந்து கொண்டே சுவரில் மாட்டியிருந்த விளக்கையே பார்த்துக்கொண்டிருந்தான்.

"உனக்கு உடம்பிற்கு ஒன்றுமில்லையே!" அவன் அருகில் வந்து குனிந்து பார்த்தாள்.

"இல்லை" என்று அழுத்தமாய்ச்சொல்லிப் பரபரவென்று சாப்பிடத் தொடங்கினான். தாய்க்கு மகனிடம் ஏதேதோ கேட்க வேண்டும்போலிருந்தாலும் அவள் மனது கேள்விகள் கேட்கும் நிலையில் இல்லை. தலை குனிந்து தரையைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவன் நினைவிற்கு வந்தவன்போல் தாயைப் பார்த்து, "அம்மா! நீ ஏனம்மா நாள் தவறாமல் எல்லோர் வீட்டிற்கும் போகிறாய்?" லக்ஷ்மியம்மாள் நிமிர்ந்து பார்த்தாள். ராஜு தவறிழைத்தவன்போல் தலையைக் குனிந்தான் தைரியமற்று. அவள் அமைதியாய்ச் சிரித்தது அவனுக்குக் கேட்டது. "கஷ்டத்திலிருப்பவர்களுக்கு நம்மால் இயன்றவகை சகாயம் செய்ய வேண்டுமென்பது உன் தந்தையின் வாக்கமென்பதை மறந்தாயா?"

தன் தந்தையின் கொள்கைகள் ராஜுவுக்குத் தெரியும். அவரே சொந்தமாய் மருந்துகள் செய்து, நோயாளிகளின் நோயைத் தீர்ப்பார். பணம் பெற்றுக் கொள்ளமாட்டார். தன் தந்தை செய்த அதே காரியத்தைப் பெண்பாலான தன் தாய் செய்தால் சமூகத்தில் எத்தனை அவமானம்? இந்த அவமானத்தை அவன் மாமனார் வாயிலாகவே முதன் முதல் கேட்டதிலிருந்து அவன் மனம் எரிந்துகொண்டிருந்தது.

அவன் மெல்லிய குரலில் "தந்தை செய்த அதே காரியத்தை நீ செய்ய வேண்டுமென்று எழுதி வைத்திருக்கிறதா?" என்றான் கடுமையாய். லக்ஷ்மியம்மாளுக்கு அந்தச் சொல் வேதனையை அளித்தது. "பரலோகத்தில் இருக்கும் கணவனை மனைவி என்றாகிலும் சேர வேண்டுமென்று நினைத்தால் அவருக்குப் பிரியமானதைச் செய்யவேண்டியது விதி" என்றாள். அவன் இரண்டாந்தடவை சாதம் போட்டுக் கொள்ளாமல் எழுந்து சென்று தெருத் திண்ணையில் படுத்தான்.

லக்ஷ்மியம்மாளுக்குப் பிள்ளையின் நடவடிக்கை பிடிபடவில்லை. யோசனையுடன் தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தாள்.

"அம்மா!" என்று ராஜுவின் குரல் கேட்டது.

எழுந்து பிள்ளையருகில் வந்து நின்றாள். அவன் எழுந்து படுக்கையிலமர்ந்து, "அம்மா! நான் இந்த வீட்டில் இருக்கமாட்டேன்" என்றான் கரகரத்த குரலில் துக்கம் பீறிக் கொண்டுவர.

உயிர் ஊசலாடும்போது தாகத்துக்குக் கேட்கும் நோயாளியைப்போல் ஓய்ந்த குரலில். "காரணம்......?" என்று கேட்டாள்.

"காரணம்... பிறகு உனக்குத் தெரியும். நாளை நான் வேறு வீடு செல்கிறேன்."

அவள் சற்றே திகைத்துக் கற்சுவராய் நின்றாள். குரல் தழுதழுக்க "இதைச் சொல்லவா என்னை அழைத்தாய்?"

"ஆமாம்" என்று அவளிடமிருந்து எம்மாதிரி பதில் வருமோ என்று பார்த்துக் கொண்டிருந்தபோது அவள் பெருந்தன்மையுடன் சிரித்துக்கொண்டே, 'நல்லதப்பா! நீ எங்கிருப்பினும் சுகமாயிருக்க வேண்டியதொன்றுதான் எனக்கு வேண்டியது" என்று,

நிதானமாய் உள் சென்று கதவைப்போட்டுக் கொண்டாள்.

வார்த்தை வளராமல் தன் தாய் அடக்கமாய்ச் சென்றது அவனுக்குச் சகிக்கவில்லை. "நீ இப்படிச் சொன்னால் எனக்குத் திக்கு யார்?'' என்று உள்ளமுடைந்து அழுவாள் என்று நினைத்தான். அவளோ எதற்காகப் போகிறாய் என்றுகூடக் கேட்கவில்லை.

* * *

விடியற்காலை தெருவைப் பெருக்கும் சத்தத்தைக் கேட்டு விழித்துக்கொண்ட ராஜு "அம்மா" என்றழைத்தான். கையிலிருந்த துடைப்பத்தைக் குறட்டிற்கருகில் நிறுத்திவிட்டு வந்து நின்றாள். அவன் முகம் உற்சாகமற்று வெளிறிக் கிடந்தது. சிறிதுநேரம் எண்ண அலைகளால் அவன் உள்ளம் ஊசலாடிக்கொண்டிருந்தது. திடீரென்று தாயை நோக்கிக் கடுமையாய், ''இந்த வீட்டை நான் பிடுங்கிக் கொள்வேனென்று பயந்துவிட்டாய்போல் தோன்றுகிறது. அதற்காகத்தான் நான் வீட்டைவிட்டகலுவதை நல்லதென்று நினைக்கிறாய். வீட்டின்மேல் எனக்கு ஆசையில்லை. நீ தெருத்தெருவாய்ச் சுற்றி நோயாளிகளை அழைத்து வந்து திருப்தி கொள்ளும் மட்டும் மானிட சேவை செய்" என்று நகைத்தான். அந்த நகைப்பில் தூய்மையில்லை. ஆனால் லக்ஷ்மியம்மாளின் அடிபட்ட மனதிற்கு மற்றொரு அம்பாகத் தோன்றியது அந்தச் சொல். சகிப்புத் தன்மையில் சிறந்த பூதேவிபோல் சலனமற்று நின்றிருந்தாள்.

''என்ன சொல்கிறாயம்மா!'' என்று உரத்துக் கூவினான். அதற்கும் ''உன் இஷ்டம்'' என்று இடிந்த குரலில் நிதானமாய்ச் சொன்னாள்.

''என் இஷ்டமில்லாமல் மற்றவர்களின் இஷ்டாஇஷ்டங்களுடன் எனக்கு வேலையில்லையென்பதறியாயா?'' என்று உள்ளே சென்று ஒரு பெட்டியை எடுத்துக்கொண்டு வெளியில் வந்தான். லக்ஷ்மியம்மாள் ஆச்சரியத்துடன்,

"இப்பவேயா போகிறாய்?"

''போவது எப்பவானால் என்ன?'' என்று தாயை உற்றுப்பார்த்து ''நான் செல்வது உனக்குச் சந்தோஷமாயிருக்கிற தல்லவா?'' என்று கேட்டான்.

அவள் முகம் சட்டென்று மாறியது. கலவரமடைந்த தாயுள்ளத்தின் காம்பீர்யம் தளர்ந்துவிட்டது. கண்களில் நீர் சுழன்று வட்டமிட்டது. அந்த அம்மாளின் கண்களில் இது இரண்டாவதுமுறை நீர் வட்டமிட்டது. ராஜு கண்டான். அவனுக்கே ஆச்சரியமாகிவிட்டது.

லக்ஷ்மியம்மாள் தன் துக்கத்தை அடக்கிக்கொண்டு "எத்தாய்க்காயினும் மகன் வீட்டைவிட்டுப்போவது சந்தோஷமாயிருக்காது ராஜு! என்னை வார்த்தைகளால் வதைப்பதைவிட உன் வருத்தத்திற்குக் காரணம் நானாக இல்லாமலிருப்பது நல்லது. ஒரு அவசரத்தினால் வீட்டைவிட்டு அகலும் நீ, மற்றொரு அவசியத்தைப்பற்றிச்சிந்திக்காமலிருப்பது எனக்கு வருத்தத்தை யளிக்கிறது" என்றாள். அவள் குரல்வளையை யாரோ நொறுக்கியதுபோலிருந்தது.

ராஜுவால் பொறுக்க முடியவில்லை. கையிலிருந்த பெட்டியைக் கீழேவைத்து மரம்போல் நின்று யோசித்தான். சடாரென்று தாயின் காலில் வீழ்ந்து நமஸ்கரித்து எழுந்தான். அவன் கண்களும் ஈரமாயின. குரல் தழுதழுக்க,

"அம்மா! பெண்களை அபலைகளாய், அற்பமாய் நினைத்த இச் சமுகமே உன் சுதந்தரத்தைப் பறிக்கப் பார்ப்பதில் ஆச்சரியமொன்றுமில்லை. உனக்குச் சமூகத்தினரின் பேச்சைத் துரும்பாய் நினைத்துத் தள்ளும் சக்தியிருக்கிறது. என்னிடம் அது இல்லை. உண்மைதான். அதனால் நான் உனக்குத் தொலைவிலிருக்க நிச்சயித்தேன்,'' என்றான். அவன் கண்ணீர் கன்னத்தில் உருளும்போதே அங்கவஸ்திரத்தினால் துடைத்துக்கொண்டு, "நான் எங்கிருந்தாலும் உனக்கோர் பிள்ளை இருக்கிறானென்பதை மறந்துவிடாதே. எல்லோர் கஷ்டங்களிலும் நீ பங்கெடுத்துக் கொண்டாலும் உன் கஷ்டத்தில் உனக்குதவுபவன் அவன் ஒருவன் தான் என்பதை நினைவில் வைத்துக்கொள். உனக்கேதாயினும் அவசியமாயிருந்தால்... ஆபத்து நேர்ந்துவிட்டால் சொல்லியனுப்பு" என்று பெட்டியை எடுத்துக்கொண்டிறங்கினான்.

சென்றுகொண்டிருக்கும் பிள்ளையைப் பார்த்துப் பெருமூச்சுவிட்டபடி" "உன்னைப் போன்ற பிள்ளையைப் படைத்த தாய் வெகுஅதிருஷ்டசாலியப்பா!" என்று சொல்லிக்கொண்டாள்.

* * *

ராஜகோபாலன் சென்ற மறுநாளே லக்ஷ்மியம்மாள் வீட்டுத் திண்ணையில் நல்ல உயர்தரப் புகையிலை, வாழைப்பழத் தாறுகள், மருந்துச்சாமான்கள் முதலியன விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன.

கனகசுந்தரத்தைவிட அவர் மனைவியின் உத்தம குணம் அவ்வூரில் அனைவருக்கும் தெரியுமாதலால் அன்றாடும் வைக்கப்படும் பொருள்கள் பிற்பகலுக்குள் விற்பனையாகி விடும். அவளுக்கே வியப்பா யிருக்கும். கனகசுந்தரத்தின் புகைப்படத்திற்கு முன் நின்று கரங்குவித்து அன்பு வழியும் பார்வையுடன், "நீங்கள் எங்கிருப்பினும் இந்தத் துர்ப்பாக்கியவதியைக் காப்பாற்று வீர்களென்று தெரியும். அதனால்தான் எனக்கு வெளியாதரவு இல்லாவிடினும் அந்தரங்க ஆதரவு இருக்கிறதென்ற தைரி யத்துடன் நிற்கிறேன். பிறர் கஷ்டத்தால் வாழும் துரதிருஷ்டத்தை மாத்திரம் என்றும் அளிக்க வேண்டாம்" என்று உள்ளமுருகி வேண்டுவாள்.

நாட்கள் நடந்துகொண்டுதானிருந்தன. லக்ஷ்மியம்மாளை யறிந்தவர்கள், கடைக்குச் சாமான் வாங்க வருகிறவர்கள் அனைவரும் லக்ஷ்மியம்மாளின் தூய உள்ளத்தில் ராஜு ஏற்படுத்திவிட்டுப் போன காயத்தைத் தொடப்போவார்கள். லக்ஷ்மியம்மாள் தன் சாந்தமான சொற்களால் அவர்களின் அறி வற்ற செய்கையைத் தடுத்து விடுவாள்.

அன்று கடையில் எல்லாச் சாமான்களும் விற்றுப்போய்விட்டன. கடையை மூடிக் கொண்டிருந்தபோது அடுத்தவீட்டுப் பவானி வந்து புகையிலை வேண்டுமென்று கேட்டாள். "ஆகிவிட்டது. சாப்பிட்டுவிட்டுக் கடைக்குப் போகிறேன். விளக்கு வைப்பதற்குள் வந்து விடுவேன். வாங்கி வந்து தருகிறேன்" என் றாள். இருவரும் ஏதோ பேசிக்கொண்டு நடக்கும்போது பவானி ராஜுவைப்பற்றிக் கேட்டதுமன்றி "அதுக்குத்தான் சக்களத்தி குழந்தை என்கிறார்கள். அதே தன் தாயா யிருந்தால் இப்படி விட்டுவிட்டுப் போவானா? சுத்த மூடன்" என்றாள்.

லக்ஷ்மியம்மாளின் முதுகில் யாரோ அடித் ததுபோல் தோன்றியது. "பவானி! என் ராஜு மிகவும் நல்லவன். நீ அவனைத் தூஷிப்பது பாபமாக்கும்" என்று அவளை நிச்சலமாய்ப் பார்த்து, 'என் விருப்பத்தின் மேல் வேறாகச் சென்றவனைத் தூற்றுவது பாபமல்லவா?" என்றாள். பவானி தான் அப்படிக் கேட்ட பிழையினால் முகம் வெளுக்க நின்றாள். அதே சமயம் யாரோ புதியவனொருவன் அங்கு வந்து நின்று "லக்ஷ்மியம்மாள் நீங்கள்தானா?" என்று கேட்டான்.

"ஆம், ஏன்?"

"ராஜ்கோபாலன் நீங்கள் எப்படி யிருக் கிறீர்களென்று பார்த்துவிட்டு, உங்கள் யோக க்ஷேமத்தை விசாரித்துக்கொண்டு வரச்சொன்னார்" என்றான். லக்ஷ்மியம்மா ளின் ஆனந்தத்திற்கோர் எல்லையில்லாமல் போய்விட்டது. பவானியைப் பெருமை யுடன் பார்த்து, அவனை வரவேற்று, "பைய னுக்கு வர ஒழியவில்லையா அப்பா!" என்று அன்பொழுகக் கேட்டாள்.

"அவருக்கு வருவதற்கு ஒழியவில்லை. நேற்றுத்தான் கல்கத்தாவிலிருந்து வந்தார். நான் அவர் குமாஸ்தா. இதை உங்களிடம் கொடுக்கச் சொன்னார்" என்று ஒரு காகிதப் பொட்டலத்தைக் கீழே வைத்தான். அதை அவள் பிரித்துப் பார்ப்பதற்குள், ஐம்பது ரூபாய் நோட்டுகளை எடுத்து ராஜு கொடுக்கச் சொன்னதாகக் கொடுத்தான். அவள் ஒன்றும் சொல்லச் சக்தியற்றவ ளானாள். அவள் கண்களில் ஆனந்தக் கண் ணீர் சுழன்றது. தன் கணவனின் படத்தை உற்று நோக்கினாள். அவள் மனத்திடலில் சந்தேகக் காற்று வீசியது. சட்டென்று குமாஸ்தாவைத் திரும்பிப்பார்த்தாள். அவன் செல்ல ஆயத்தமாய்ச் செருப்பை மாட்டிக் கொண்டிருந்தான். "சற்று நில். தற்சமயம் இவைகள் எனக்கு வேண்டாம். ராஜுவுக்கு என்மேலிருக்கும் அன்பு எனக்குத் தெரியும். அப்படியே எனக்கேதாகிலும் வேண்டியிருந் தால் அவனைவிட யார் இருக்கிறார்கள்? இதைச் சொல்லி அவனிடம் கொடுத்துவிடு" என்று அவன் எடுத்து வந்தவைகளைத் திருப் பினாள். பவானி லக்ஷ்மியம்மாளின் இச் செய்கைக்கு ஆச்சரியமடைந்தாள். குமாஸ்தாவோ பெண்கள் சமூகத்தில் இம் மாதிரி உயர்தர மனப்பான்மை படைத்த பெண்களும் இருக்கிறார்களென்றறிந்து சென் றான்.

வாங்கி வந்த சாமான்களை யெல்லாம் எடுத்து வைத்துவிட்டு, இலைமுன் சாப்பிட உட்கார்ந்தாள் லக்ஷ்மியம்மாள். அவள் முன் தேய்த்து வெள்ளியைப்போல் மின்னும் வெண்கலப் பாத்திரத்தில் சுத்த ஜலமிருந் தது. ராஜு தடதடவென்று உள்ளே வந் தான். "உன் வயிற்றில் இத்தனை விஷம் இருக்கிறதென்று தெரிந்திருந்தால் நீ நல்லவ ளென்று சொல்லியே யிருக்கமாட்டேன் அம்மா!" என்றான் கோபமாய்.

"எதனால்?" என்றாள் வெகு நிதானமாய்.

"நான் அனுப்பியவைகளைத் திருப்பி அனுப் பக் காரணம்?"

"அவசியமாயினும், ஆபத்தாயினும் நேர்ந்தால்தானே சொல்லியனுப்பச் சொன்னாய். அப்பேர்ப்பட்டவைகள் ஏற்படாதபோது உனக்குச் சிரமத்தையளிக்க இஷ்டமில்லை"

அவனுக்கு மண்டையில் அடிபட்டதுபோல் தோன்றியது. "அம்மாதிரி நடந்தால்தான் சொல்லியனுப்புவாயென்று எப்படி நம்புவேன்."

"இந்த ஜீவனுக்கு அம்மாதிரி நேரக் கூடாதென்பதே. உன் தந்தையளித்த அத்யாத் மிகப் பிச்சையால் எனக்கம்மாதிரி வராதென்பது என் நம்பிக்கை!" என்றதும் அவன் மனதில் எரிந்துகொண்டிருந்த கோபாக்கினியின்மேல் நெய்யை ஊற்றினாற் போலிருந்தது.

"என் சகாயமில்லாமல் நீ வாழ நினைத்தால் எனக்குச் சேரும் இந்த வீட்டிலிருப்பதும்......" என்று, இரண்டடி முன் வந்து "இந்த வீட்டை அப்பா உன்பேரில் எழுதவில்லை என்பதைத் தெரிந்துகொள்"

லக்ஷ்மியம்மாள் இலையை விட்டெழுந்து "நீ எப்படி நினைத்தாயோ அப்படி நடக்கிறது. சாப்பிட வா." என்றாள் சாந்தமாய். ராஜுவின் கண்கள் அக்கினிப் பிழம்புகளாய் கோபத்தில் மின்னிக்கொண்டிருந்தன, "நான்...போ...கி...றேன்" என்று தலையை ஆட்டிக் கொண்டு கோபமாய்ச் சென்றான்.

* * *

நான்கு நாட்களுக்குப்பின் லக்ஷ்மியம்மாளின் அழைப்பின்மேல் வீட்டுக்கு வந்தான். வீட்டைப் பார்த்ததும் திடுக்கிட்டான். தாயும் வீட்டிலில்லை. வீட்டில் ஒரு சாமானுமில்லை. அவன் சந்தேகப்பட்டது பலித்துவிட்டது. அவன் கண்கள் கசியத் தொடங்கின. பின் புறம் வந்த தாயை அவன் கவனிக்க முடியாமல் அவன் மனம் அவனைச் சித்திரவதை செய்தது. "வீட்டுச் சாவியை உன்னிடமளித்துச் செல்லத்தான் சொல்லியனுப்பினேன்." என்றாள் தாய் நிர்மலமாய்.

அவன் ஒன்றும் பேசாமல் நடுக்கூடத்தில் மழையில் நனைந்து அமுங்கிய மண் சுவரைப் போல் உணர்வற்று அமர்ந்து அர்த்தமற்ற பார்வையாய்த் தன் தாயைப் பார்த்தபடியிருந்தான். அவளே பேசத் தொடங்கினாள், "வாடகைக்கு வீடு கிடைக்காமல் கஷ்டப்படுவதாய் அறிந்தேன், நாட்டுப் பெண்கூட வெத்து மனுஷி அல்லவாம். கர்ப்பிணியாமே! பிறர் வீட்டிலிருந்துகொண்டு கஷ்டப்படுவதைவிட இந்த வீட்டிலிருப்பது எவ்வளவோ நல்லது." அவன் அதற்கும் பதில் விடுக்கவில்லை. கண்கள் மாத்திரம் நீரை வடித்தன. அவளே பேசத் தொடங்கினாள், "நான் அடுத்ததெரு கோடியாத்து கோமதி வீட்டிலே ரேழிப்புறம் இருக்கும் ஒரு அறையை நான்கு ரூபாய் வாடகைக்கு அமர்த்திக் கொண்டேன். அது ஒன்றும் அதிக வாடகையல்ல......' என்று முடிப்பதற்குள் ராஜு குலுங்கிக் குலுங்கி அழத்தொடங்கினான்.

"ஆ! என்ன?" என்று அவன் தலையை அன்புடன் தடவிக்கொடுத்து, "சிறு குழந்தை போல் இதென்ன? அப்பாவின் நினைவு வந்தால்கூட இவ்வயதில் இம்மாதிரி அழுபவர்களுண்டா? தப்பு, அழக்கூடாது" என்றாள். ராஜு எழுந்து கண்களைத் துடைத்துக் கொண்டு,

"தப்புத்தானம்மா! இனி உன்னை எப்பொழுதும் ஒன்றும் சொல்ல மாட்டேன்" என்று அவள் காலில் வீழ்ந்தான். பரபரப்புடன் அவனை எழுப்பி 'இதில் உன் தவறு என்ன இருக்கிறதப்பா?" என்றாள்.

"நான் செய்தது முழுவதும் தவறுதான் அம்மா! அன்று கோபத்தில் ஏதோ சொல்லிவிட்டேன். இந்த உன் வீட்டில் நான்க்ஷணம் இருப்பேனா? மாட்டேன். இனி வாய் தவறியும் உன்னை ஒன்றும் சொல்லமாட்டேன்" என்று அவனை உள்ளமுருகப்பார்த்தான். அவள் கண்களும் கசிந்தன.

"அப்பா! நீ சொன்னதினால் கோபித்துக் கொள்ளவில்லை, எப்படியானாலும் ஒரே ஊரிலிருந்தால் உன்னையும், நாட்டுப்பெண்ணையும் பார்க்கவாவது சந்தர்ப்பம் கிடைக்குமென்றுதான் ஊருக்குள்ளேயே வீட்டைப் பார்த்தேன். சாமான்களைக் கொண்டுபோய்ப் போட்டபின் எடுத்துவருவது அத்தனை நன்றாயிராது."

"என்னையறியாமல் ஒரு காரியமும் செய்யாத நீ இன்று இத்தனை தைரியமாய் இப்படி செய்ய உன் மனம் எப்படி இடம் கொடுத்தது? நீ எடுத்து வராமல் போனால் நான் போய் எடுத்து வருகிறேன்" என்று தடதடவென்று தெருவில் சென்றான். அவள் தன்னுள் தானே சிரித்துக்கொண்டாள்.

இரவு சாப்பாட்டிற்குப்பின் ராஜு வேதத்திடம் "இந்த வாடகைவீட்டில் அவஸ்தைப் படுவதைவிட அங்கேயே போய்விட்டால் நன்றாயிருக்குமென்று நினைக்கிறேன்."

"உங்கம்மாவோ?"

"நம்மிடமே யிருப்பாள்."

"மறுபடியும் அந்த எண்ணம் எப்பொழுது முதல்?" என்று சீறினுள்.

"எப்பொழுதுமிருக்கும் எண்ணம்தான்." என்று கட்டில் காலைப் பார்த்தபடி, "பெண் பேச்சைக் கேட்டு உபயோகமற்ற காரியம் செய்தால் அதை மாத்திரம் உலகோர் பொறுக்கின்றனரா?" என்று கட்டிலில் படுத்துக்கொண்டான்.

வேதம் ராஜுவைச் சுட்டுவிடுபவள் போல் பார்த்து, "என் தந்தையின் குடும்பம் நல்ல கௌரவமுள்ள குடும்பமென்பதை நான் எப்பொழுதும் மறக்க மாட்டேன். வெட்கமற்றவர்களுடன் சம்பந்தம் செய்து கொண்டதற்கு இப்பவே பாதி செத்துச் சுண்ணும்பானுர். பெண்ணுன...... அதிலும் விதவையான ஒரு ஸ்திரீ வெட்கம் மானமில்லாமல் திரிந்தால் அவளை என் மாமியாரென்று எந்த வாயால் சொல்லுவதோ எனக்கு விளங்கவில்லை" என்று கர்வமாய்ச் சிரித்தாள்.

ராஜு எழுந்து "நீயும் ஒரு பெண் என்ற நினைவு உனக்கிருக்குமாயின் நான் சொல்லுவதை நீ கேட்க வேண்டியது தர்மம் தானே!" என்று கேட்டான்.

"உங்கள் கையில் உயிரை வேண்டுமாயினும் அளிப்பேன். அவளிருக்கும்போது அந்த வீட்டில் கால் வைக்க மாட்டேன்."

அவன் மறுபடியும் படுத்துக்கொண்டான். பெண்கள் பிறந்தகத்திலிருந்து எடுத்துவரும் சீர் செல்வங்களில் காணப்படாத கடினமான இந்தச் சுயநலமென்ற பொருளைக் கூட எடுத்து வருகிறுர்கள். அதைக் காணும்படி செய்ய, தம் பிறந்தகத்தின் பெருமையை ஆயிரம் முறை சொல்லி மாமியார் வீட்டு வள்ளலை அவர்கள் வீட்டு விஷயத்திற்கு முன் துரும்பாகச் சொல்லாவிடினும் அந்த பாவம் தோன்றும்படி பேசுவதற்கு வெகு பெண்கள் வழக்கப்பட்டிருந்தனர். அவர்களில் வேதமும் ஒருத்தி.

காணுச் சுயநலப்பேய்க்கு எத்தனை மானிட ஜீவன்கள் இரையாகி மண்டி மாய்ந்து போகின்றனவோ? கர்வமென்பதற்குக் கர்வ பங்கம் எப்படி சகஜமோ, அப்படியே சுயநலத்திற்கும் தலைவணங்கக்கூடிய குணம் பெண் இனங்களிடம் ஆழ்ந்திருக்கும் போலும்.

* * *

அன்று விடிந்தது முதல் அடுப்பை மூட்ட முடியாமல் கடையில் பேரா சரியா யிருந்தது. மணி பத்து அடித்துவிட்டது. கடையை மூடி ஏதோ இத்தனை கொதிக்க வைத்து வாயில் போட்டுக்கொண்டு வரலாமென்று உள்ளே போனுள். அவள் பின்பே வந்த ராஜகோபாலன் 'அம்மா! அவளைப் பிறந்தகம் அனுப்பிவிட்டேன்" என்ருன்.

லக்ஷ்மியம்மாள் பயத்துடன், "இப்பொழுது அனுப்ப என்ன அவசரம்?"

"அவ அப்பாவுக்கு இரண்டு நாட்களாய் நினைவற்ற ஜுரமாம்."

"என்ன ஜுரம்?" எங்கே கண்டாலும் அம்மை போட்டுக்கொண்டிருந்ததால் அவள் அம்மாதிரி கேட்டாள்.

"என்னவோ?"

"இத்தனை அவிவேகமா யிருந்தால் குடும்பத்தை எப்படிச் சீர்பட நடத்தப்போகிருயோ? அவளும் வெத்து மனுஷியல்ல. இந்தச் சமயத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டுமோ தெரியுமா?"

"......................"

"உடனே புறப்பட்டுப் போய் ஜுரத்தின் தன்மை எப்படி யிருக்கிறதோ பார்த்துக்கொண்டு நாட்டுப்பெண்ணை அழைத்துக்கொண்டு வந்துவிடு. அப்படி அவருக்குப் பணிவிடை செய்ய வேண்டுமென்ருல் நான் செய்கிறேன்."

இதைக் கேட்டதும் ராஜு திகைத்து நின்ருன் சிறிது நேரம். பிறகு மாமனுர் வீட்டுக்குச் சென்ருன்.

வேதத்தின் தந்தைக்கு அம்மை ஜுரம். ராஜு செல்வதற்கு முன்பே உடம்பு முழுவதும் அம்மை நிறைந்து விட்டாள். மாப்பிள்ளையைக் கண்டதும் மாமனுர், "என் குடும்பத்தை நீ தான் இனி காப்பாற்ற வேண்டும். எப்படி பார்த்துக் கொள்ளப்போகிருயோ?" என்று கண்ணீர்வடித்தார். ராஜு கலங்கிய மனத்தினுய் மாமனுர் அறையை விட்டு வெளியில் வந்தான்.

"அம்மா அழைக்கிருள்" என்று வேதம் பரபரப்புடன் அழைத்தாள். கூடத்தில் போய் நின்ருன் சமையலறைக் கதவிற்குப் பின் நின்றுகொண்டு குரல் மாத்திரம் துக்கத்துடன் ஒலிக்க, "வேதமும் பிள்ளைத்தாச்சிப் பெண். நாங்களோ பெண்கள். (வேதத்துக்கு மூன்று தங்கைகள்) அவரைப் பார்க்கும் தைரியம்கூட இல்லை. நீங்கள் எங்கும் செல்லாமல்..........." அதற்குமேல் அவன் அங்கு நின்று கேட்கவில்லை.

இரண்டு நாட்களுக்குப் பின் ராஜுவின் மாமனுர் அதிக சிரமப்பட்டுக் கொண்டிருந்த

போது "நீங்கள் மாத்திரம் இங்கிருந்து கொண்டு ஏன் கஷ்டப்படுகிறீர்கள்? உங்கள் தாயிடம் போங்கள். எப்படிப்போய் எப்படி வருமோ?" என்றாள் வேதம் ராஜுவிடம்.

அவன் தன்னுள் சிரித்துக்கொண்டே "எனக்கந்தப் பயமில்லை" என்னும்போதே மாமியாரின் துக்கம் தோய்ந்த குரல் கேட்டது.

"இந்த வீட்டில் நான் குழந்தைகளுடன் இருக்கமாட்டேன். எனக்குப் பயமாயிருக்கிறது" என்றாள்.

'என்ன செய்ய உத்தேசம்?"

"காட்பாடியிலிருக்கும் எங்கண்ணா வீட்டிற்குப் போனால்......"

"யாரெல்லாம்?"

"நான் குழந்தைகள்"

ராஜுவுக்கு ஆச்சரியமாகிவிட்டது. "இங்கு யார் யார் இருக்கப்போகிறார்கள்?" என்று கேட்டான். அதற்குப் பதில்விட மாமியார் விழித்தாள். வேதம் வந்து கணவனருகில் நின்று "என்னையும் உங்களையும் இங்கு அப்பாவுக்குச் சகாயமாய் வைத்துவிட்டு அவள் போய், குழந்தைகளை விட்டுவிட்டு வராளாம்" என்று தாயின் அசட்டுத்தனத்தை மூடி வைத்துப் பேசினாள். ராஜு அர்த்த புஷ்டியாய் மனைவியைப் பார்த்து ஏளனப் புன்னகை புரிந்து அப்பால் சென்றான்.

தெருவாயிலில் வண்டி நின்றிருந்தது. லக்ஷ்மியம்மாள் சம்பந்தியைப் பார்க்க வந்தாள். அந்த அம்மாள்வாயிற்படி ஏறும்போது குழந்தையை இடுப்பில் தூக்கிக்கொண்டு சம்பந்தியம்மாள் எதிரில் வந்தாள். "எந்த ஊருக்கு" என்று கேட்க லக்ஷ்மியம்மாளுக்கு விருப்பம் இல்லை. "சம்பந்திக்கு எப்படியிருக்கிறது" என்று கேட்டாள். அந்த அம்மாள் பதில் பேசாமல் வாயிற்படியை விட்டிறங்கினாள். தாய் செல்வதை வாயிற்படிக்கருகிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த வேதம் மாமியார் வந்ததும் கணவனிடம் ஓடிப்போய்ச் சொன்னாள். ராஜு பரபரவென்றெழுந்தோடி வந்து "ஏன் வந்தாயம்மா?" என்று கடினமாய்க் கேட்டான். வேதம் மறைந்து நின்று தாய் மகன் இருவர் பேச்சையும் கவனிக்கத் தொடங்கினாள்.

லக்ஷ்மியம்மாள் பொறுமையாய்ப் புன்முறுவல்பூத்த அன்பு ததும்ப "நான் எதற்காக வந்துள்ளேன், என்பதை என்னைவிட நீ நன்கறிவாய். நான் உன்னிடம் சொல்லியனுப்பினதென்ன? நீ செய்ததென்ன?" என்று கேட்டாள்.

"பேதைத்தாயே!" என்று மனதில் சொல்லிக்கொண்டு, "அவருக்கு வெகுஅதிகமாயிருக்கம்மா! அவருக்கு முக்கியமாய் வேண்டியவர்களே விட்டுச்சென்றால் அவர் கதி என்னவது?" என்றான். வேதத்திற்கு இது சரியான சாட்டையடியாய்த் தோன்றியது. தானிருக்கும்வரை இந்தத் தழும்பு மாறாதென்பதையும்அறிந்து வாயை மூடிக்கொண்டிருந்தாள்.

லக்ஷ்மியம்மாள் சம்பந்தி படுத்திருக்கும் அறைக்குள் சென்று பார்த்தாள். அறை நாற்றமடித்துக்கொண்டு, அவர் துணிமணிகள் அழுக்கடைந்து நாறிக்கொண்டிருந்தன. அவரருகில் சென்று 'அண்ணா,' என்றழைத்தாள்.

"யார்?" என்றார். அதற்குள் வேதம் தலை குனிந்து, 'மாமியார்' என்றாள் பெருமையுடன். அவர் பாரமாயிருந்த தம் கண்ணிமைகளை மெள்ளத் திறந்து "லக்ஷ்மியம்மா!" என்றார்.

ராஜாவுக்குப் பற்றிக்கொண்டு வந்தது. கடினக் குரலில் அழுத்தந் திருத்தமாய் "ஆபத்துக் காலத்தில் உதவுபவர்களுக்கு நீங்களளிக்கும் அவமானகரமான பட்டம் எதென்று அம்மாளுக்குத் தெரியாது" என்றான்.

அவர் மாப்பிள்ளையைப் பரிதாபமாய்ப் பார்த்து, "இப்பொழுதா என்னை நோகடிப்பது?" என்றார்.

நன்கு வேலை செய்யத் தெரிந்தவர்களுக்குக் கைநிறைய வேலை கிடைத்தால் கிடைக்கும் ஆனந்தம் லக்ஷ்மியம்மாளுக்குக் கிட்டியது. தன் பிள்ளைக்கு நோயாளியின் அறையைக் கூடச் சுத்தமாய் வைத்துக்கொள்ளத் தெரியாமல் முதல் சிகிஸ்தைகூடச் செய்யாமலிருப்பதற்கு ஆச்சரியப்பட்டாள்.

அருவருக்காமல் அவர் அழுக்குடைகளைக் களைந்துதானே சுத்தமாய்த்துவைத்து உலர்த்தினாள், தன் கணவன் சொல்லிக்கொடுத்த மருந்துகளையெல்லாம் செய்து அம்மையின் பாரம் இறங்கினதும் அந்தப் புண்களுக்குத் தடவி, இரவும் பகலும் உட்கார்ந்து அவருக்கு விசிறிக்கொண்டிருந்தாள். நாட்டுப்பெண்ணை அந்த அறையில் நுழைய விடவில்லை.

லக்ஷ்மியம்மாளின் கஷ்டம் பலித்தது. வேதத்தின் தந்தை நாளுக்கு நாள் தேறிக் கொண்டு வந்தார். லக்ஷ்மியம்மாள் இளைத்து வந்தாள். வேதத்திற்கு இப்

பொழுது தன் மாமியாரின்மேல் பரிபூரண தேவதா விசுவாசம் ஏற்பட்டுவிட்டது. தன் மாமியாரின் தூய்மையான குணத்தை யறியாது அந்த அம்மாளைத் தவறாக நினைத்ததற்கு வருந்தினாள்.

அன்றுடன் தன் மாமியார் வந்து பதினைந்து நாட்களாகிவிட்டன. முதல் நாள் இரவு தன் தந்தை நன்கு குணமாகிவிட்டதாக ராஜு சொன்னதை நினைத்து விடிந்ததும் தந்தையின் அறைக்குள் நுழைந்தாள். தன் தந்தையின் காலருகில் கண்களை மூடிக்கொண்டு தியான தத்பரையாயமர்ந்து வீசிக்கொண்டிருந்த தன் மாமியாரைப் பார்த்தாள்.

"அம்மா!" என்றாள். அது லக்ஷ்மியம்மாளின் காதில் விழவில்லை. மறுபடியும் அழைத்தாள். அவள் திரும்பிப் பார்த்தாள்.

"அப்பாவுக்கு நன்றாய்க் குணமாகி விட்டதாமே!"

"ஆம். நீ ஏன் இங்கு வந்தாய்? உன்னை இங்கு வரவேண்டாமென்றதை மறந்தாயா?" என்றதும் வேதம் சென்று விட்டாள்.

வேதத்தின் தந்தை நன்கு குணமானதை யறிந்த அவள் தாய் குழந்தைகளுடன் வந்து சேர்ந்தாள். வந்த அவளிடம் லக்ஷ்மியம்மாளைத் தவிர வேறு யாரும் பேசாமலிருந்தது மிகவும் கஷ்டமாயிருந்தது.

லக்ஷ்மியம்மாள் தன் வீட்டிற்குச் செல்லத் தயாராய்ச் சம்பந்தியிடம் சொல்லிக்கொள்ள வந்தாள்.

"உன் உபகாரத்தை என்றும் மறவேன் தங்காய்! எனக்கு உயிரளித்தவர்கள் யார் என்று யாராகிலும் என்னைக் கேட்டால் 'பயங்கொள்ளி' யல்லாத என் தங்கை லக்ஷ்மி என்று சொல்லும் தைரியத்தை யளித்தாய். எனக்கதுவே போதும். பெண்கள் அபலைகளென்பது எம்மட்டிலும் உண்மையோ நானறியேன். அபலைத்தனத்தைப் பயங்கொள்ளித்தனமாய் நினைத்த என் மனைவி உன் கால் நகத்திற்கும் இணையாக மாட்டாள், இது உண்மை" என்றார். இந்தக் கடைசிச் சொல்மட்டும் அவர் உள்ளத்துள் கூண்டுகட்டியிருந்த எண்ணக் கட்டிடங்களைத் தகர்த்தெறிந்ததற்கு அடையாளமாய் அழுத்தமாய் வெளிவந்தது.

லக்ஷ்மியம்மாள் பெருந்தன்மையுடன் சிரித்தாள். சம்பந்தி அவள் முகத்தை உற்று நோக்கினார்.

"மானிடர்கள் உள்ளத்தில் மாறுதல் என்பது எப்பொழுது ஏற்படுமோ அதை இப்பொழுது அறிந்தேன். ஆனால் நான் செய்த பணிவிடை மற்றவரை இழித்து நான் புகழ்பெற அல்ல" என்று புதுமுறுவல் பூக்க, "பிழைக்க வேண்டுமென்றிருப்பவர்கள் பயங்கர நோயைக் கண்டு மருளுவதில் தவறில்லை. ஆனால் இறந்த அவருடன் இறந்துபோன என் உடலுக்கெம்மாத்திரமும் பயமில்லை என்னும் அவர் ஆதேசத்தைக் கேட்டபின் தான் நான் இதைக் கடைப்பிடித்தேன்" என்றாள்.

சம்பந்தி வெட்கிப்போனார். லக்ஷ்மியம்மாள் வாயிலை விட்டிறங்கினாள். வேதம் வேகமாய் ஓடிவந்து, "அம்மா! நானும் வறேன்" என்றாள்.

"எங்கு?"

"நம் வீட்டுக்கு"

லக்ஷ்மியம்மாள் வேதத்தை அணைத்துக் கொண்டாள். ராஜு திருப்தியுடன் பார்த்துக்கொண்டு நின்றான்.

"அப்பா! ராஜகோபாலா! உன் தாயின் நிறைந்த மனதுதான் 'பொன் செய்யும் மருந்து' என்பது இப்பொழுதாவது தெரிந்ததற்கு நான் பெருமையை அடைகிறேன்" என்றார்.

கலையை வளர்த்த காதலன்

நஜ்மா

அந்தச் சாந்தமான தோற்றம் பால் நிலவொளியில் பளிங்குபோன்று பகட்டுகிறதே! அது நங்கையின் நகைக்கும் இனிய வதனமா?—இல்லை. எழில் மிக்க பளிங்குகளால் எத்தனையோ கோடிப் பேர் தொழில் சாமர்த்தியத்தைச் சாதித்துக் காண்பித்த கலையேதான் அது. இதய ராணியின் எழிலை நாட்டின் நாலா பக்கங்களினின்றும் சேமித்த நவரத்தினங்களால் அவன் அலங்கரித்துவிட்டான். உண்மையில் காதல் வளரவில்லை; கலை வளர்ந்தது.

கலையை வளர்க்க வந்த கலையரசியை, அழகின் அருட்பெரும் ஜோதியை அழியும் மானிட ஜன்மத்தில் மும்தாஜாக உண்டாக்கினான் சிருஷ்டி கர்த்தா. ஆனால் காதலின் கனிவு பெற்ற மனதினால் கலைச் செல்வத்தை அழியாத காதற் கோயிலாகக் கட்டிவிட்டான் சிருஷ்டி கர்த்தாவின் சிருஷ்டி.

யமுனா தேவி சாந்தமாய், சென்றுகொண்டிருந்தாள். சந்திரன் அவளைக் கண்டு நகைக்கிறான். அவள் நாணத்தால் கோணிச் செல்கிறாள். அவன் அதைக் கண்டு களிக்கிறான். நதியின் ஒருபுறத்தே இரு சமாதிகள் தனி அழகுடன் தோற்றமளித்தன. அங்கு உட்கார்ந்திருந்த கிழவன் ஒருவன் அந்தச் சமாதிகளின் வரலாற்றைப் பின்வருமாறு கூறினான்.

அப்போது ஆடம்பரப் பிரியன் ஷாஜஹானின் காலம். அந்தக் கலைவள்ளல் கலைக்கு முதல் இடம் கொடுத்திருந்தான். பெயர் பெற்றவன் தோடா பெற்றிருப்பான். ஷாஜஹான் கலாரஸிகன் என்பதற்காகக் கடவுளே மும்தாஜை அவனுக்குச் சன்மானமாக அளித்திருந்தார். அவரது காதல் வளர்ச்சியில் கலையும் ஓங்கி வளர்ந்தது.

நடனக்கலை நாடு முழுவதும் நாட்டியமாடிற்று. நங்கையர் நகை முகத்துடன் காணப்பட்டனர். அந்த ராஜ்யம் தெய்வலோகப் பூங்கா போன்று விளங்கிற்று. தினந்தோறும் அரண்மனையில் கலைக்காக அரங்கேற்றம் நடந்துகொண்டே இருக்கும். பரிசுகள் வழங்கப்பட்டன; கலை வளர்ந்தது. மக்கள் மனம் குளிர்ந்தனர்; மகிழ்வுடன் வாழ்ந்தனர்.

சிருஷ்டிகர்த்தா அழகின் இரகசியத்தை மும்தாஜின் முகத்தில் அலங்கரித்து விட்டான். ஆனால் அழகைச் சித்திரிக்கும் சித்திரக் கலையை அவளுக்கு அளிக்கவில்லை: சிந்தனை செய்து பார்த்தான். அழகுடன் அழகை அமைப்பதில் அர்த்தமில்லை என்று அறிந்தான்.

2

ஹுசேன்ஷா. அவன்தான் பெயர்பெற்ற சித்திரக்காரன். சித்திரக்கலையே உருவெடுத்த உத்தமன். சிருஷ்டிகர்த்தா அழகை அலங்கரிக்கும் அலுவலை அவனிடமே மனப்பூர்வமாக அளித்துவிட்டான். ஹுசேன் ஷாவின் சித்திரக்கலை மட்டும் உயிர்பெற்றிருந்தால் ஷாஜஹான் மும்தாஜை மறந்தே இருப்பான்.

ஆசை நாயகி, அழகின் ராணி தன் அழகை ஓவியமாக்க அரசனை அண்டினாள். பல நாட்களாக ஷாஜஹானுக்கும் இதே ஆவல் ஊசலாடிக் கொண்டிருந்தது. மும்தாஜின் சித்திரம் வரைய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அதற்கு ஏற்றவன் ஹுசேன் ஷா என்றும் நிச்சயிக்கப்பட்டது. ஓவியம் வரைவதற்கு உத்தரவும் பிறந்துவிட்டது.

ஒருநாள் ஹுசேன் ஷா நந்தவனத்திலே மாலைப்பொழுதினில் மதி மயங்கி வீற்றிருந்தான். அவன் தன் கலை முழுவதையும் கவனத்திற்குக் கொண்டுவந்து கொண்டிருந்தான். ஓர்புறம் அரசனின் ஆக்ஞை அவனை அல்லோலகல்லோலப் படுத்திற்று. மற்றோர் புறம் அசட்டுத் தைரியம் அமைதியைத் தந்தது. மும்தாஜின் முகத்தைப் பாராமல், ஓர் கரத்தைமட்டும் பார்த்து கற்பனையினால்

சித்திரம் வரைவது இலேசான காரியமா? ஹுசேன் ஷா அதைப் பெரிதாகக் கருதவில்லை. சிந்தனையிலே சில மணி நேரம் கழிந்து விட்டது. பூக்களின் மணத்தால் மனம் மயங்கி இருந்த அவன், இனிய குரல் வந்த திக்கில் தன் கவனத்தைச் செலுத்தினான். அது வசந்த காலத்தில் உல்லாசமாகப் பாடும் கோகிலத்தின் குரலல்ல; காதலனை எதிர்பார்த்து ஏங்கிக்கொண்டிருக்கும் ஓர் பேதை உள்ளத்தின் ஆழத்திலிருந்து வரும் அமுதத் தென்றல். காதல் உணர்ச்சியினால் தீண்டப்பட்ட இதயக் கம்பிகளின் இனிய நாதம்.

சிருஷ்டி ஏன் ஒரு பெண்ணுக்கு இசை அமுதத்தைக் கொடுத்திருக்கிறான்? இதைச் சிந்திக்க அவனால் முடியவில்லை. சிறிது நேரத்தில் அவள் சிந்தனையைச் சிறை கொண்டுவிட்டாளே.

குரல் நெருங்கிக் கொண்டே இருந்தது. மின்சாரக்காந்தம் அவனை இழுக்கிறது—குரல் வந்த திக்கில் எழுந்து சென்றான் மின்னல்போன்ற ஒளியைக் கண்டு திடுக்கிட்டு நின்றான். கானல் நீர் போன்று மின்னி மயக்கும் அவளது மேனியைக்கண்டு மயங்கிவிட்டான். அவளது கூரிய பார்வையின் வீச்சுக்கு அவன் பலியாகிவிட்டான். அவளது பின்னல் சடை சாட்டைபோன்று அவன் மனதைச் சஞ்சலப்படுத்தியது. அவளது உள்ளக்கடலினின்றும் உதிர்ந்தமுத்துக்களின் ஒலி அவனைக் கலங்க வைத்துவிட்டது. மீன் கொத்தியைக் கண்ட வெண் மீன் போன்று அவள் நழுவி மறைந்துவிட்டாள், ஹுசேன் ஷா மயக்கம் தெளிந்து மண்டையில் அறைந்துகொண்டான். அவள் கையிலிருந்து நழுவி விழுந்தரோஜாமலர், கண்டது கனவல்ல என்ற உணர்வைத் தந்தது. ஏன் இப்போது அந்த மலருக்கு அழகு குன்றிவிட்டது. அவள் கையில் இருக்கும்போது மட்டும் —. அவள் உதிர்த்த புன்னகை மலரோ! ஆனால் மணம் மட்டும் மனதை என்னவோ செய்கிறதே!

மின்னல் தோன்றி மறைந்துவிட்டது. அதைப் பிடிக்கச் சக்தியற்று ஹுசேன்ஷா நின்றிருந்தான்.

ஹுசேன்ஷா தினமும் அவள் வரவை எதிர்பார்த்தான். ஆனால்........ ஏமாற்றம்தான் அதிகரித்தது. வாரங்கள் ஓடி மறைந்தன. அரசனின் உத்தரவு ஞாபகத்திற்கு வந்தது. ஓவியமும் சிறிது சிறிதாக உயிர்பெற்று வந்தது.

3

வழக்கம்போல் அன்றும் அரண்மனையிலே அரங்கேற்றம். நாட்டியத்தைக் காண நாட்டின் பல பாகங்களில் இருந்து நவாபுகள் குழுமி இருந்தனர்.

சபையோர், வைத்தவிழிமாற்றாது அந்த மெல்லிய உருவத்தை உற்று நோக்கிக்கொண்டிருந்தனர். சாரங்கிகளின் சப்தமும் சலங்கைகளின் சப்தமும் உள்ளத்தின் ஒலியை ஓர்புறம் ஒதுக்கிவிட்டன. நாட்டியம் ஆரம்பமாயிற்று.

சுபியாதான் அந்த நாட்டிய ராணி. நாட்டியக் கலையின் கரை. மின்னல் வேகத்தில் மேனியைக் குலுக்கி, குழுவினரைக் குதூகலிக்கச் செய்தாள். ஒய்யார நடையில் ஒதுங்கிச்சென்று, சபையோருக்குச் சபலம் தட்டும்படி செய்தாள். வைரக் கண்களின் கடைக்கண் வீச்சினால் அவர்களை எங்கோ அழைத்துச் சென்றுவிட்டாள். காதலர்களின் உள்ளங்களிலே காட்டுத்தீயை மூட்டிவிட்டாள்.

சுபியாவின் கண் கணைகள் ஷாஜஹானின் இதயத்தைத் துளைத்துவிட்டன. ஒரு விநாடி

அவன் தன் உயிர்த்தோழியை மறந்தான். அவன் நாட்டம் சுபியாவை நாடிச்சென்றது. நாட்டியக் கலை உயிர்பெற்று அவன் கண்முன் நிற்கிறது என்று எண்ணிவிட்டான். அவன் ஏற்கனவே தன் உள்ளத்தை அழகிய மும்தாஜிடம் அர்ப்பணம் செய்துவிட்டான். இல்லையேல் சுபியா இன்று ஷாஜஹானின் அழகுத்தெய்வம் என்று புகழ்மாலை சூடி யிருப்பாள். சுபியாமஹால் என்ற காதற் கோயில் தாஜ்மஹால் இருக்கும் இடத்தில் சோபை பெற்று விளங்கிக்கொண்டிருக்கும்.

சுபியாவின் பார்வை அடக்க ஒடுக்கமாக வீற்றிருந்த அந்த வாலிபன்மேல் பட்டது. சிறிது கால்கள் தடுமாறின. நாணத்தால் முகம் சிவந்து முத்துக்கள் போன்ற வியர் வைத் துளிகள் கீழே உதிர்ந்தன. புதைந்து கிடந்த நாட்டியக் கலையை அவள் அள்ளி அள்ளி வீசினாள். தான் அறிந்த நாட்டியக்

கலைத் திறனைக் காதலனுக்குக் காட்டிவிட்டாள். கலைப் பித்தனான அரசனிடம் சன்மானம் பெற அல்ல; தன் காதற் பித்தனைக் களிப்படையச் செய்யத்தான்.

நாட்டியம் முடிவிற்கு வந்தது. காதற் கன்னிகளைக் கதறவிட்டு, சுபியாவின் காலடியில் வீழ்ந்து கிடக்கக் கங்கணம் கட்டிவிட்டனர் காதலர்கள்:

ஷஹின்ஷா ஷாஜஹான் கம்பீரமாக வீற்றிருந்தான். அவனது முகத்திலே இப்போது புன்முறுவல் தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்தது. மும்தாஜின் ஓவியத்தைக் காண அவனது கண்கள் எத்தனையோ நாட்களாக ஏங்கிக் கிடந்தன. இன்று அதைக்காண அக்கண்களிலே ஜொலிப்பு.

ஒருபுறம் சுபியா சன்மானம் பெற உட்கார்ந்திருந்தாள். சபையில் ஒரே குதூகலம். மானிடப் பறவைகள் வசந்தகாலப் புள்ளினங்கள்போல் குசால் அடித்துக்கொண்டிருந்தன. "ஹுசேன்ஷாவின் சித்திரக் கலைத் திறனைக் கண்டு கலைவள்ளல் கஜானாவையே காலி செய்து விடுவார்" என்று அங்கிருந்தோர் கற்பனை செய்தனர்.

ஷாஜஹான் இப்போது நியாயத் தராசினால் நீதி வழங்க வேண்டும். ஒரு தட்டில் சுபியாவின் கலைத்திறன் வைக்கப்பட்டிருக்கிறது. அவளது திறமை இலேசானதல்ல என்று எளிதில் எண்ணிறந்தோர் எண்ணிவிட்டனர். "ஷஹின் ஷா பெண் அழகிற்கு மயங்கி, தர்மத்தைத்தகர்த்தெறியமாட்டார். இதயத் தாமரையின் எழிலைத் தீஞ்சுவைத் ததும்பத் தீட்டிய திறமைக்காக ஹுசேன் ஷாவிற்குத் தம் சன்மானத்தைச் சமர்ப்பிக்க மாட்டார்" என்று சிலர் எண்ணினர். "நியாயத் தராசின் மறு தட்டிலே ஹுசேன் ஷாவின் கலைத்திறன் வைக்கப்படும். அதில் வெற்றி பெறுபவள் சுபியாதான்" என்று பலர் முடிவு செய்தனர்.

ஹுசேன்ஷா சித்திரத்தைத் திறந்து வைத்தான். நவாபுகள் அதன் அழகிலே தங்கள் கண்களைப் பதிய வைத்து விட்டனர். ஷாஜஹானின் முகத்திலே மகத்தான மாறுதல். கண்களினின்றும் தீப்பொறிகள் பறந்தன. உருவிய வாளுடன் அவன் எழுந்தான். நேரே சித்திரத்தை நோக்கி விரைந்தான். சித்திரத்தின் அருகே ஹுசேன்ஷா நின்று கொண்டிருந்தான். சபையோர் கலங்கினர். "சித்திரக்கலை இன்றுடன் சீரழிந்துவிடும்" என்று முடிவு செய்தனர். கோபமே கண்டறியாத அரசனின் கண்கள் கோவைப் பழம் போல் மாறியதைக்கண்டு மனம் நொந்தனர். "ஷஹின்ஷாவின் வாளுக்கு அவன் பலியாவது திண்ணம்' என்று பலர் நிச்சயித்தனர். சுபியா தங்கப்பதுமைபோல் தனியே வீற்றிருந்தாள்.

சித்திரக்காரனின் சிந்தனை சிறகுகள் கட்டிப் பறந்துகொண்டிருந்தது. சித்திரக் கலைக்கு எந்தக் கலையும் ஈடாகாது என்று

அவன் பெருமைகொண்டிருந்தான். பெருமையால் அவன் மனதிலே மமதை புகைந்து கொண்டே இருந்தது. இன்று அவன் சாமானிய ஒரு தாசிப் பெண்ணுக்கு அடிமையாகி விட்டான். கலையைக் கடைந்தெடுத்த பதுமையா அவள்? இசைக்கலை அன்று அவளிடம் கொஞ்சிக் கூத்தாடியதே! இன்று நாட்டியக் கலையில் வல்லவளாக இருக்கிறாளே! அன்று நந்தவனத்தில் கண்ட அதே நங்கை— மீன் போன்று தோன்றி, மின்னலைப் போன்று மறைந்த அவன் உயிரோவியம்தானா சுபியா! எல்லாம் அவனுக்குப் புதிராகவே இருந்தது.

ஷாஜஹான் ஒரு முறை சித்திரத்தை உற்று நோக்கினான். சினம் தணிந்துவிட்டது. அவன் அசையாது அப்படியே நின்றுவிட்டான். உருவிய வாள் உறைக்குள் புகுந்தது. அவனது கலையை ரசிக்கும் திறனைக் கோபம் கொன்று விடவில்லை.

சுபியா நாட்டியக் கலையை அபிநயம் செய்து காண்பித்தாள். ஹுசேன்ஷா தீட்டிய ஓவியம் மூலமாகச் சித்திரக்கலையைக் காண்பித்தான். ஒருவரை ஒருவர் மிஞ்சிவிட்டனர். யாருக்குச் சன்மானம் அளிப்பது? எவ்விதச் சன்மானம் அளிப்பது? இந்தப் பிரச்னை ஷாஜஹானைப் படுத்திவிட்டது, அவன் எத்தனையோ கொலை வழக்குகளை விசாரித்து நீதி வழங்கி இருக்கிறான். ஆனால் இன்று —

"சுபியா" இது ஷாஜஹானின் சாந்தக் குரல். ஷாஜஹான் அளித்த சன்மானத்தைச் சுபியா வாங்கிக்கொண்டாள். அவள் பெற்ற சன்மானம் அவளை எங்கோ அழைத்துச் சென்றுவிட்டது. அழகிய பூங்காவிலே நிலவொளியிலே அவள் நின்றுகொண்டிருந்தாள். யமுனாதேவியின் கூந்தலின் ஒரு புறத்தே செருகி இருக்கும் செந்தாமரை போன்று அதன் கரையிலேயே அந்த அழகிய மாளிகை தனித்து நிற்கிறது. உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அதன் வனப்பிலே சுபியா மயங்கி நிற்கிறாள்.

இதைத்தான் ஹுசேன்ஷா அழகுடன் தீட்டி இருக்கிறான் அரசன் வேண்டிய மும்தாஜின் சிறந்த சித்திரத்தை அவன் தீட்டவில்லை.

ஆக்ஞையை மறந்து, தன் உள்ள உணர்ச்சியை உடைத்தெறிந்தானே ஹுசேன்ஷா என்றுதான் கோபத்தீ அந்தச் சோலையிலே சுடர் விட்டது. காதற்கட்டிடத்தின் காந்தம் கலந்த எழில் அவனைச் சாந்தம் அடையச் செய்தது. அரசன் கலை என்னும் மதுவைத் தேடி அலையும் வண்டுதானே.



"சுபியாவின் கலைத்திறன் ஹுசேன்ஷாவின் கலைத்திறனைவிட உயர்ந்தது என்று தானே அரசன் அவளிடம் அந்தச் சித்திரத்தைக் கொடுத்துவிட்டான்" என்று சபையோர் கற்பனை உலகில் புன்னகை புரிந்தனர். "ஹுசேன்ஷாவை அவமதிக்க, விவேகத்தால் இவ்விதம் ஆலம்பனை செய்தார்" என்று அங்கிருந்தோர் ஆர்ப்பரித்தனர்.

கஜானுவின் சாவியை ஹுசேன்ஷாவிடம் ஒப்புவிக்க அரசனின் ஆணை பிறந்தது. அவனது கலைத்திறனுக்குக் கைமேல் பலன் கிடைத்துவிட்டது. ஷாஜஹான் அவனை ராஜ்யத்தின் ராஜா ஆக்கிவிட்டான்.

ஹுசேன்ஷாவின் முகம் சோர்வுற்றது. "நியாயத்திலிருந்து தவறிவிட்டாய்" என்று அரசனின் மனச்சாக்ஷி அவனை ஆட்டிவைத்துவிட்டது. அரசன் சிந்தனையில் ஆழ்ந்தான்.

"என்ன ஹுசேன்ஷா!" என்றான் அரசன். "எனக்கு நாட்டின் வளமை வேண்டாம். அழிக்கும் ஆற்றலுள்ள ஆதிக்கம் வேண்டாம். நான் வேண்டுவது......" என்று ஹுசேன்ஷா தயங்கினான்.

ஷாஜஹானுக்குப் புரிந்துவிட்டது. புன்னகை பூத்தான். மனச்சாட்சியின் மத்தள ஒலி மங்கி மறைந்தது.

ஷாஜஹான் சித்திரக் கலைக்கு உயிர் ஊட்ட உரம்போன்ற சுபியாவைச் சன்மானமாக அளித்துவிட்டான். சபையோர் மனம் மறுமலர்ச்சி பெற்றது. கனவு கண்டு கற்பனை உலகில் கதறித் திரிந்த காதலர் ஒன்று சேர்ந்தனர். கலையுடன் கலைசேர்ந்து களிப்புற்றது.

ஷாஜஹானிடம் பொன் இருந்தது. அதைக் கலைக்காகக் காலிசெய்யப் போதிய மனம் இருந்தது. ஷாஜஹான் தன் காதலி, மும்தாஜிற்காக யமுனைநதி தீரத்திலே காதற் கட்டிடத்தைக் கட்டிவிட்டான். ஆண்டியான ஹுசேன்ஷா அழகைச் சித்திரிக்கும் மாயையால் கலைச் செல்வத்தைக்காலிசெய்து தன் உயிரோவியம் சுபியாவிற்குக் காதற் கட்டிடமாகத் தீட்டிக்கொடுத்தான்.

ஹுசேன்ஷா தீட்டிய அந்த அழகிய காதல் மாளிகைதான் இன்று தாஜ்மஹாலாக விளங்குகிறது.

இதோ இவைகள்தான் அந்தக் கலைகளின் கண்களாகத் திகழும் இரு சமாதிகள். இடது புறம் இருப்பது ஹுசேன்ஷாவின் சமாதி. அவன் அருகில் இருப்பது அவன் அடைந்த சன்மானம் சுபியா.

நின்றுபோன மாதவிடாய்

குமாரி (TABLETS) மாத்திரையின் உபயோகத்தினால் நின்றுபோனது நீங்கும். வருங்காலத்திலும் கஷ்டங்கள் நேரிடா. கெடுதலின்றி விரைவில் நலம் கிட்டும். இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் ஆயிரக்கணக்கானவர்கள் உபயோகிக்கின்றார்கள்

சாதாரண கேஸ்களுக்கு	...	...	ரூ. 3
நீண்டநாளைய கேஸ்களுக்கு	...	...	ரூ. 5
மிக ஆபத்தான கேஸ்களுக்கு	...	...	ரூ. 8
கர்ப்பத்தடை (6 மாத உபயோகத்திற்கு)		...	ரூ. 4

(வி. பி. அணா 12 கூட)

தயாரிப்பவர்கள்:-

MRS. P. DEVEE, F.D.S. (C.M.)
Tollygunge CALCUTTA.

கீழ்க்கண்டவர்களிடமும் கிடைக்கும்:—

ஹாரி & சன், 93, சைனாபஜார் ரோடு மதராஸ்.
ராகவன் & கம்பெனி, ஸ்ரீ நரசிம்ஹராஜா ரோடு பங்களூர் ஸிடி.
நாதம் & கம்பெனி மட்டஞ்சேரி, கொச்சி.
ஷா கம்பெனி. மங்களூர். (S. K.)
L. M. முகர்ஜி & சன்ஸ் லிமிடெட், 167, தராம்தோலா தெரு, கல்கத்தா.
சிவானந்த சித்தர் மெடிகல் ஹால், 92, கடல்தெரு கொழும்பு, &
768, லோவர் தெரு, பாத்துல்லா (ஸிலோன்)

தியாக ராமன்

வே. ரங்கராஜன்

"எல்லாம் மனசுதான் சார் காரணம்!" என்றார், தானுவய்யர். பிறகு இஸ்பேட் ஜாக்கியைப் பட்டென்று ஓங்கியடித்து, எல்லோரும் பிரமிக்கும்படி தம்மிடமிருந்த ஒரே துருப்பை வீசி விட்டுவிட்டார்!

"பலே, தானுவய்யர்! இப்போ நீர் இந்த மகாப் பெரிய உண்மையைச் சொன்னீரே, இதற்கு உமக்கு நோபல் பரிசு கொடுக்க வேணுமென்று எனக்கு ஆசையா யிருக்கு! மனசு இருந்து என்னங்காணும் பிரயோஜனம்? என்னைப்போன்ற வெறும் பயல்களுக்கு மனசு இருந்தும் ஒண்ணுதான், இல்லாவிட்டாலும் ஒண்ணுதான்!" என்றார், மனவாள நாயுடு.

"ஹியர்! ஹியர்! நல்லாச் சொன்னீரய்யா நாயுடு! மனசாவது மண்ணாங்கட்டியாவது?" என்று ஒரு போடு போட்டார், ஹனுமந்த ராவ்.

"மனசு ஒண்ணும் மண்ணாங் கட்டியல்ல ஹனுமந்தராவ்! உமக்குத் தெரியாது. 'ராவணன் மனசு'ன்னு கேள்விப்பட்டதுண்டா? இதுவரை ராமாயண கதாகால க்ஷேபம் செய்தவர்களில் ராவணன் 'ஸைகாலஜி'யை அழகா எடுத்துச் சொன்னவர் ஆற்காடு ராம பாகவதர் ஒருவர்தான். அவருடைய கதா கால க்ஷேபத்தை மட்டும் நம்ம மனவாள நாயுடு கேட்டிருந்தால்......என்ன ஹனுமந்தராவ், நீர் கேட்டிருக்கிறீரா ஓய்?" என்றார் கிட்டு என்கிற கிருஷ்ணய்யர்.

'கேட்டிருக்கிறேன். ஆகா! அவர் வாயிலே வெளியாகிற ராமாயண கதையே அலாதி ஓய்! அவர் குண சித்திரங்களை வர்ணிக்கும் போது,—அடடா! ஆமாம், ஏண்டா கிட்டு! அவர் இப்போது இருக்காரா, காலமாய் விட்டாரா?"

"ஆற்காடு ராம பாகவதர் தானே! பைத்தியம் பிடிச்சு, நிர்வாணமா அலைஞ்சு, கடைசியிலே மிலிட்டரி லாரிக்கு இரையாய் விட்டார். அதனால்தான் ஓய், எல்லாம் மனசுதான் காரணமென்று தானுவய்யர் சொன்னார்!"

* * *

ஹனுமந்தராவுக்குப் பழங்கால நினைவுகள் எல்லாம் எழுந்தன. ஒருநாள் தஞ்சாவூரில் ஆற்காடு ராம பாகவதரின் ராமாயண கால க்ஷேபத்தைக் கேட்டுப் பரவசமாய் நேரம் போனது தெரியாமல் இரவு ஒரு மணிவரை விழித்திருந்தார். பிறகு அயர்ந்து தூங்கி, சென்னைக்குப் போக வேண்டிய ரயிலைக் கோட்டை விட்டதும் அதனால் உண்டான தொழில் நஷ்டமும் ஞாபகத்திற்கு வந்தன. 'ஆகா! என்ன சுகமான காலக்ஷேபம்!' என்று முணுமுணுத்துக் கொண்டார்.

* * *

தென்னாற்காடு ஜில்லா, சிதம்பரம் தாலூகாவைச் சேர்ந்த சிவபுரி ராம பாகவதரை ஆஸ்திக உலகிற்குத் தந்து பெருமை கொண்டது. ஏற்கனவே தன்னுடைய பிரம்மபத்திரத்தினால் பெருமை மிக்க சிவபுரி ராம பாகவதரினால் அதிகப் பிரபலமடைந்தது என்றுகூடச் சொல்லலாம்.

குழந்தை பிறந்த பதினெட்டாம் நாள் தன் சின்னஞ் சிறு கண்களை மொட்டு மொட்டென்று விழித்து வீட்டின் கூடத்தில் மாட்டியிருந்த சிவபெருமானின் படத்தைப் பார்த்ததாம். பிறகு பட்டாபிஷேகதாரியாய் திருக்கோலம் கொண்டிருந்த ராமபிரானது படத்தைப் பார்த்ததாம். அத்தோடு நிற்காமல் கன்று குணிலாய் எறிந்த கழலோன் வெண்ணெய் உண்ணும் படத்தையும் பார்த்து வைத்ததாம்! இதை யெல்லாம் பக்கத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த பாட்டி, தன் குழந்தை வாயால் கொல்லெனச் சிரித்துவிட்டாளாம்! சிரித்ததோடு நிற்காமல் குழந்தையை வாரி எடுத்து உச்சி மோந்து சிவராமகிருஷ்ணன் என்று திருநாமம் சூட்டினாளாம்!

ராம பாகவதர் தம் இளமைப் பருவத்திலிருந்தே ராமாயண புத்தகத்தை அபிமானித்து வந்தாராம். அவருடைய பாட்டிக்கு ராம கதை என்றால் உயிர். பையனைப் பக்கத்திலே அழைத்து உட்காரவைத்து ராம கதையைப் படித்துக் காண்பிப்பாளாம். பையன் பஹு வினயமாகக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டுக் கடைசியில் பாட்டியின் மடிசஞ்சியுள் கை விட்டுக் காலணா எடுத்துக்கொண்டு சிட்டாய்ப் பறந்துவிடுவானாம்! அத்துடன் மாரிக்காலத்தில் சிவபுரி தெப்பக் குளத்தில் தண்ணீர்

வந்துவிட்டால் பையனுக்கு ராமாயண புத்தகத்தின் மேல் அளவிட முடியாத ஆர்வம் பிறந்துவிடுமாம். பாட்டி கண்ணயரும் நேரம் பார்த்து, ஹனுமான் கடல் தாவு படலத்தில் நான்கைந்து பக்கங்களைக் கிழித்துக் கப்பல் செய்து தெப்பக் குளத்தில் விட்டு வேடிக்கை பார்ப்பானாம்!

2

அதெல்லாம் அவருடைய குழந்தைப் பருவ சம்பவங்கள். இவைகளைப் போலவே பையன் சிவராமகிருஷ்ணன் பள்ளிக்கூடத்தில் படித்த காலத்திலும் சில நடந்தன. அவை எல்லாம் நம் கதைக்கு நெருங்கிய சம்பந்தம் உள்ளவை என்று சொல்லலாம். இருந்தாலும் அவருடைய சுய சரிதையை எழுதப் போவதாகப் பயமுறுத்திக் கொண்டிருக்கும் ராம பாகவதரின் சிஷ்யர் செய்துவிட்டுப் போகட்டும்!

சிவபுரி மண்ணில் பிறந்த சிவராமகிருஷ்ணன் படிப்பில் சோடையாக இல்லை. மளமளவென்று படித்து, பி. ஏ. ஆனார். அத்துடன் அவருடைய பிதுரார்ஜித சொத்துக்களும் பராதீனமாயின. அந்த நிலையில் தர்க்காஸ்து ஏலத்திற்குச்சிவபுரி வந்திருந்த தாசில்தாரைக் கண்டு தம் மகனைப்பற்றிப் பிரஸ்தாபித்தார், சிவராமகிருஷ்ணனின் தந்தை. தாசில்தார் புகையிலை போடும் பழக்கமுள்ளவர் என்பதை முன்கூட்டியே அறிந்து முதல் தர புகையிலைக் கட்டு ஒன்றை அவருக்குக் கொடுத்துவிட்டுத்தான் பேச்சைத் துவக்கினார்!

ராம பாகவதரின் கதை 50 வருஷங்களுக்கு முந்தியது. பி. ஏ. க்கள் மலிந்துள்ள இந்தக் காலமல்ல. ஆகவே பேச்சு உடனடியாகப் பலனளித்தது என்று சொன்னால் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. எடுத்த எடுப்பில் சிவராமகிருஷ்ணனுக்குத் தாசில்தாரின் காம்ப் குமாஸ்தா உத்தியோகம் கிடைத்தது!

"அடராமா! என்ன ஓய்? இறங்குமய்யா! ஆட்டத்தில் ஒரு கண்ணும் கதையில் ஒரு கண்ணும் இருக்கட்டும்!" என்று கிட்டுவய்யரின் முதுகில் ஒரு ஷொட்டுக் கொடுத்தார் மனவாள நாயுடு. ஒரு கிளாவர் ராணியைக்

MEHTA'S SPECIALITIES

Well-known for their efficacy and Medicinal values

1 *SUNDARI ELIXIR*
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 *PHOSPHORUS OIL*
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 *MASTANA PILLS*
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 *DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA*
A great Blood Purifier & digestive & Potential Tonic.

Stocked by all important Chemists & Druggists of South India

K. S. MEHTA & CO.

250, China Bazaar, MADRAS.

கழித்து விட்டுவிட்டுக் கிட்டுவய்யர் தம் கதையைத் தொடர்ந்தார்.

"......அந்தக் காலத்திலே தாசில்தாரின் காம்ப் குமாஸ்தா என்ருல் அலாதியான கௌரவம். அவர்தான் தாசில்தாரின் வலது கை. கோவில் பூசாரிக்கு இருக்கும் எல்லாச் செல்வாக்கும் காம்ப் குமாஸ்தாவுக்கு உண்டு.

தாசில்தார் கேம்ப் போய்வந்தது போக மற்ற நாட்களில் சிவராமனுக்கு அதிக ஓய்வு இருந்தது. தாலூகா ஆபீசில் இருந்த மற்றக் குமாஸ்தாக்களைப்போல் கட்டுக்களைச் சுமந்து வந்து வீட்டில் வேலை செய்யக்கூடிய அளவு ஆபீஸ் வேலைகள் இல்லை. இதன்காரணமாக, குழந்தைப் பருவத்து விட்டகுறை தொட்டகுறை அவரைப் பற்றியது. பாட்டி இறந்த பிறகும் அவள் ஞாபகத்தை உண்டுபண்ணிக் கொண்டிருந்த குடும்ப ராமாயண புத்தகத்தை வைத்துக்கொண்டு காலக்ஷேபம் செய்தார்—பொழுது போக்கினர்.

காலப் போக்கில் உத்தியோக உயர்வுகள் கிடைத்தன. சிவபுரி பிர்க்காவின் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் ஆனர். ஓய்வு அதிகம் கிடைத்தது. ராமாயணமும் ருசித்தது; அதில் மூழ்கிப்போனர்.

ஆரம்பத்தில் தம்மிடம் காரியமாக வந்த மணியக்காரர்களை உட்காரவைத்து ராம கதையின் அருமை பெருமைகளை எடுத்துச் சொன்னர். சில பாடல்களையும் அதன் நயங்களையும் கேட்பவர் வியக்கும்படி எடுத்துச் சொன்னர். நாளடைவில் இதுவே பழக்கமாகிவிட்டது. கிராமக் கணக்குப் பிள்ளைகள் அவருக்குப் பாகவதர் பட்டம் கட்டிவிட்டனர். ரெவின்யூ இன்ஸ்பெக்டர் என்ற பெயர் போய், பாகவதர் என்ருல் யாரும் தெரிந்து கொள்ளக்கூடிய அளவு வியாபித்துவிட்டது!

3

ராமபாகவதர் தாசில்தார் ஆனர். இளம் தொந்தியும் சற்றுப்பருத்துப் பூஷண உருவம் பெற்றது. இந்தக் கால இடையீட்டில் ராமாயணம முழுவதையும் படித்து, உத்தரகாண்டத்தின் புதிர்களில் சிக்கிக்கொண்டு 'ஆராய்ச்சி'யில் ஈடுபட்டுவிட்டார்! ராம கதை முழுவதையும் படித்து நிரப்பிக்கொண்ட அவர் உள்ளம் கொந்தளித்தது; எல்லோருக்கும் சொல்லவேண்டுமென்ற ஆர்வம் எழுந்தது.

முதன் முதலாக ஸ்ரீராம நவமி உற்சவத்தைத் தமது கிரகத்திலே விசேஷமாகக் கொண்டாடி, அறிமுகமானவர்களை எல்லாம் வருவித்துக் கதாகாலக்ஷேபத்தை அரங்கேற்றம் செய்தார். அது என்னவோ தெரியவில்லை — அவருடைய வாழ்வினைப் பயனுக்கத்தான் இருக்கவேண்டும்! கேட்கக் கேட்க இனிமையாய் அமைந்தது காலக்ஷேபம்.

இப்படி ஆரம்பமான பிறகு எல்லோரும், சிலர் முகஸ்துதியாகவும், சிலர் காரியார்த்தமாகவும், ராமபாகவதரை உற்சாகப்படுத்தி விடவே ராமாயண கதா கால க்ஷேபம் தினசரி நிகழ்ச்சியாகிவிட்டது. பகற்பொழுதில் தாசில்தாராகவும் இரவு வேளைகளில் ராமபாகவதராகவும் இருந்தார். பட்டாபிஷேகம் வரை கதா காலக்ஷேபம் அமோகமான வெற்றியுடன் நடந்தது!— அதாவது முதல் நாள் வந்தவர்கள் யாரும் இடையிலே நிற்கவில்லை; கடைசிவரை தொடர்ந்து வந்தார்கள். இடையிடையே புதியவர்களும் கதை கேட்க வந்து, கடைசி வரை தவருமல் கேட்டனர்!

* * *

"சட்! என்ன ஆட்டமய்யா, இது!" என்று கைச்சீட்டைப்பட்டென்று கவிழ்த்துக் கீழே போட்டார் ஹனுமந்தராவ். பிறகு, "என்ன ஓய்! எதிர்க் கட்சி பெரிய சீட்டுப் போட்டிருக்கும்போது துருப்பைக் கேட்டு வெட்டாமல் கழித்து விடுகிறீரே! ஒன்று சீட்டாட்டத்தை முடித்துவிட்டுக் கதை சொல்லும்; அல்லது கதை சொல்லுவதை நிறுத்திவிட்டுச் சீட்டு ஆடும். ராமபாகவதரைப்போல் தாசில்தார் வேலையையும் பார்த்துக்கொண்டு கதாகாலக்ஷேபமும் நடத்தப் பார்க்காதீர்! முதலில் ஒரு சிட்டிகை பொடி கொடும்!" என்று சிடுசிடுத்தார்.

பிரமபஸ்ம பரிவார்த்தனை ஆனபின் நிமிர்ந்து உட்கார்ந்தார் கிட்டு. பிறகு இரு கைவரிசை ஆட்டம் மௌனமாக நடந்தது, "சரி, ஓய்! கிட்டு கதையை மேலே சொல்லும்!" என்று தூண்டிவிட்டார், மனவாள நாயுடு.

4

"நாளடைவில் ராம பாகவதருக்கு ராமன் மீது அளவிடமுடியாத பக்தி உண்டாகிவிட்டது. தாம் படித்து ரஸித்ததைப் பிறருக்குச் சொல்லி மகிழவேண்டும் என்ற ஆசை போய், ராம கதையைச் சொல்லாத நாவென்ன நாவே, ராம சரிதை படிக்காத கண்ணென்ன கண்ணே! என்று எண்ணவும் சொல்லவும் தொடங்கினர். உத்தியோகம் முதல் காரியமாகவும் காலக்ஷேபம் இரண்டாம் பக்ஷமாகவும் இருந்

தது மாறி, காலக்ஷேபத்திற்கு முதல் இடம் கொடுத்தார். உத்தியோகமும் அதைச் சூழ்ந்த படாடோபங்களும் வெறும் அர்த்த மற்ற நாடகமேடைக் காட்சியென அவர் மனம் எண்ணியது. ஆகவே உத்தியோக காரியங்களில் சிரத்தை குறைந்தது. கெடு பிடி அதிகமில்லை. தாசில்தார் பேட்டி எல் லோருக்கும் மிக எளிதாகிவிட்டது. அவர்கள் கோரிவந்த காரியங்கள் யாவும் வெகு சுலப மாக நிறைவேறின.

இவைகளெல்லாம் தாலூகா ஆபீஸ் குமாஸ்தாக்களுக்கும் கர்ணம் மணியம் இவர்களுக்கும் தொல்லையைக் கொடுத்தன; அவர்கள் மாமூலில் மண்ணைப்போட்டன. ஆகவே அவர்கள் தாசில்தார் சிவராம பாக வதருக்கு எதிராகச் சூழ்ச்சிகள் செய்யத் தொடங்கினர். மிகச் சுலபமாக அவரைப் பல சிக்கல்களில் மாட்டிவிட்டனர்.

சிக்கல்களில் சிக்கிய ராமபாகவதர் கவலைப் படவில்லை. "என்ன நடக்கப்போகிறது? தன் பக்தனுக்காக ராமன் பாதுஷாவின் முன் பணம் செலுத்தவில்லையா? சிவபெருமான் அடிபடவில்லையா? நரியைப் பரியாக்க வில்லையா? ராமன் கதையைச் சொல்லிக் கொண்டிருக்கும் எனக்கு மலைபோன்ற இடை யூறு வந்தாலும் பனிபோல் நீங்கிவிடாதா?" என எண்ணி, தைரியமாக இருந்தார்.

ஆனால் அவர் நினைத்தபடி அவை பனி போல் நீங்கவில்லை; எடுபடாத முள் விஷத் தையுண்டாக்கி, புரையோடச் செய்துவிடு வதுபோல் ஆய்விட்டன. ஜமாபந்தி காலத் தில் அவை ஜில்லா கலெக்டரின் பார் வைக்கு வந்து, ராம பகாவதரின் தாசில்தார் வேலைக்கே ஹானி விளைவிக்க விருந்தன. அந்தச் சமயத்தில்கூட ராம பாகவதர் மனம் கலங்கவில்லை. அதுவரை சம்பாதித்ததில் கொஞ்சம் கை மீதியாக இருந்தார். பகவான் அவருக்குப் புத்திர சந்தானமே கொடுக்க வில்லை. ஆகவே, 'இருப்பதை வைத்துக் கொண்டு, இன்னும் கொஞ்சநாள் ராம கதையைச் சொல்லிக்கொண்டு வாழ்வைக் கடத்தி விடலாம்!' என்ற எண்ணத்தோடு அலட்சியமாக இருந்துவிட்டார். கலெக்டர் துரையைப் பார்க்கப் போகவில்லை; முகாந் தரம் கூறும்படி வந்த தாக்கீதுக்கும் பதில் எழுதவில்லை. இதனுலெல்லாம் கலெக்டர் துரைக்கு அசாத்திய கோபம் வந்துவிட்டது. ராம பாகவதரை, 'சஸ்பெண்ட்' செய்து விட்டார்.

'அதுவும் ராமன் செயல்' என எண்ணி ராம பாகவதர் சும்மாஇருந்தது கலெக்டரின் சினத்தைப் பன்மடங்காக்கியது. சஸ்பென் ஷன் கெடு முடிந்ததும் டிஸ்மிஸ் செய்து விட்டார்!

5

'நான் முழுதும் அவனுக்கே தொண்டு செய்யாமல் ராஜாங்க ஊழியமும் செய்வது ராமனுக்குப் பிடிக்கவில்லை. நல்லதாயிற்று!' என்று சொல்லி ஒரு வீணை, ஒரு ஜதை குறடு, ஒரு ஜதை தாளம் — இவைகளை வாங்கினர் ராமபாகவதர்.

தாசில்தார் வேலை போனதைப்பற்றிப் பலர் பலவிதமாகப் பேசிக்கொண்டனர். ஆனால் அவர் கதா காலக்ஷேபத்திற்குத் தவருமல் வரு பவர்கள்மட்டும் ராம பாகவதரின்மீது முன் னிலும் பன்மடங்கு மரியாதை செலுத்தி ஞர்கள். மறந்தும்கூடக் கண்களை மூடாமல் கடைசிவரை கதைகேட்டார்கள். இப்போது விடுதலைபெற்ற கிளியைப்போல் சஞ்சலமற் றுக் கதை சொன்னர் ராம பாகவதர். இப் போது தான் அவர் சிந்தனை ஒரே வழியில் லயித்தது. கம்பனது கவி நயத்தையும் ராம னது குண நலத்தையும் அவர் மனம் ஆழ்ந்து உணர்ந்து திளைத்து வெளியே சொல்லிற்று. ஆகவே கதை கேட்போரும் பரவசமடைந் தனர்.

சிதம்பரம் வட்டத்திலேயே அதுவரை நடந்துகொண்டிருந்த அவரது காலக்ஷேபம் இப்போது ஆற்காடு முழுதும் பரவ ஆரம்பித் தது. சிவராம பாகவதர் தம் கதாகால க்ஷேபத்திற்குப் பணம் எதுவும் பெற்றுக் கொள்வதில்லை. ஆகவே அவருடைய கால க்ஷேபத்திற்கு அதிக கிராக்கி ஏற்பட்டது. கடிதங்கள் மூலமாகவும் ஆள் மூலமாகவும் அவருக்கு அழைப்புக்கள் எண்ணிலாவாயின. அவரையும் அவர் கதாகாலக்ஷேபத்தையும் பற்றிச் சதா புகழப்படும் செய்திகளே அவர் செவிகளில் விழுந்தன.

ஆகவே எடுபிடி பத்ததிகளுடன் வெளியூர் களில் காலக்ஷேபம் செய்யப் புறப்பட்டுவிட் டார் ராமபாகவதர். சென்ற இடங்களி லெல்லாம் மேலும் உற்சாகத்தை ஊட்டும் காலக்ஷேபங்களாகவே அமைந்தன. கால க்ஷேபம் கேட்க வரும் கூட்டத்தினர் அதிக மாக ஆக ராமபாகவதரின் ஆர்வம் பன்மடங் காகியது. அவருடைய ஆத்மாவே ராம கதை யில் ஒன்றி, காலக்ஷேபத்தை ஜீவனுள்ளதா கச் செய்ததா? அவருடைய ஆங்கில அறி வும் சம்ஸ்கிருத ஞானமும் துணை நின்று கால க்ஷேபத்தைச் சோபிக்கச் செய்தன. சாதா ரண ஜனங்களைமட்டுமேயன்றிப் படித்தவர் களையும் இழுத்துப்போட்டுத் தவருமல் கேட் கும்படி செய்தன.

198060

இப்படி அயோத்தி ராமனுக்கு ஆற்காட்டின் ஒவ்வொரு ஊரிலும் முடிசூட்டிப் பட்டாபிஷேகம் செய்து வைத்தார் சிவராம பாகவதர்! அத்துடன் அவரையும் அவருடைய கதாகாலக்ஷேபத்தையும் அந்தந்த ஊர் ஜனங்கள் என்றும் மறந்துவிடாதபடி தம்முடைய துவஜஸ்தம்பத்தையும் நாட்டினார்!

சிவராம பாகவதர் பணம் வாங்கும் பழக்கம் இல்லாத போதிலும் காலக்ஷேபத்திற்கு ஏற்பாடு செய்த பிரமுகர் ராமபாகவதரைச் சும்மாவிடுவதில்லை. பால், பழம், உணவு, தங்க வசதி-இவைகள் அளித்தார்கள். போக வர ரயில் செலவை ஏற்றுக்கொண்டார்கள்; தங்கள் ஊருக்கு வந்துபோன ஞாபகார்த்தமாக வெள்ளியாலான ஏதேனும் ஒரு பொருளைக் காணிக்கையாக அளித்தனர். ஒரு ஊர்க்காரர் வெள்ளியாலான தாம்பூலப் பேழை அளித்தார். ஒரு பட்டணப் பிரமுகர் வெள்ளிக் கூஜா அளித்தார். ஒரு கிராமப் பண்ணையார் வெள்ளிக் குத்துவிளக்கு அளித்தார்!......

—"ஓய் ஹனுமந்த ராவ்! நீர் உள்ளூரச் சிரிப்பது தெரிகிறது. இதெல்லாம் இப்போது நடந்ததல்ல, ஞாபகத்திலிருக்கட்டும்! ஐம்பது வருஷங்களுக்கு முன் நடந்ததைச் சொல்கிறேன்! இடபொழுதுதான் காலம் கெட்டுக்கிடக்கிறதே!"—

— ஆற்காடு ராமபாகவதரின் பெயர் செட்டிநாடு வரை எட்டியது. இங்கிருந்து அங்கேபோன யாரோ ஒருவர் தம்முடன் தொடர்பு கொண்ட தனவணிகரிடம் பாகவதரின் கதா காலக்ஷேபத்தைப்பற்றி வானளாவப் புகழ்ந்துவிட்டார். அதைக்கேட்ட தனவணிகர் அவருடைய கதா காலக்ஷேபத்திற்கு ஏற்பாடு செய்யும்படி அவரையே அனுப்பி வைத்தார். ராமநாதபுரம் சென்று ராம கதை சொல்ல, சிவராம பாகவதர் ஒப்புக்கொண்டார்.

அந்தத் தனவணிகரின் மாளிகையிலே காலக்ஷேபம் ஆரம்பமாயிற்று. அவருடைய அன்பான உபசரிப்பில் உள்ளம் பூத்துப் பரவசமான பாகவதர் ராமகதையைத் தேன்மாரியாகப் பொழிந்தார், வெண்ணெய்நல்லூர் வள்ளல் அளித்த அமுதும் கன்னலும் பாலும் அருந்தி, கம்பன் கவிதை வெள்ளம் பொழிந்ததைப்போலே!

கதை நடந்தது; பட்டாபிஷேகமும் முடிந்தது. தாமே முன்வரிசையில் உட்கார்ந்து கதை முழுதும் கேட்ட தனவணிகர், ராமபாகவதரின்மீது அபார அன்புகொண்டுவிட்டார். அதன் அடையாளமாக நூறு பவுனில் ஒரு தங்க ராமவிக்கிரகம் செய்வித்துச் சிவராம பாகவதருக்கு அளித்து மகிழ்ந்தார்.! ...

—"என்ன மனவாள நாயுடு! அப்படி பிரமித்துப்பார்க்கிறீரே! அது பவுன் பதினைந்து ரூபாய் விற்ற காலம் என்பது ஞாபகமிருக்கட்டும். ஒரு பெரும் தன வணிகருக்கு ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் பெரிய பணமல்ல! ..."—

6

......"பக்தை மீராவுக்குக் கிடைத்த கிருஷ்ண விக்ரகத்தைப் போல் சிவராம பாகவதருக்குத் தங்க ராம விக்கிரகம் பக்திச்சாதனமாகவே ஆய்விட்டது. சிலைகள் செய்வதில் அனுபவம் அடைந்த பொற்கொல்லன் செய்த அந்த ராமசிலையில் பாகவதர் மனக்கண் முன் கண்ட ராமனின் தேஜஸ் முழுதும் இருந்தது. ராமனை மாசற்ற தங்கம் என்று வர்ணித்த பாகவதர் தங்கத்திலேயே விக்கிரகம் வைத்து அதன் முன்நின்று காலக்ஷேபம் செய்வதைப் பிரம்மானந்தம் தரும் காரியமாகக் கருதினார். அவர் செல்லும் இடங்களுக்கெல்லாம் தங்க ராமனை எடுத்துச்சென்று பிரதிஷ்டை செய்து பூஜை முதலியன செய்தபிறகு கதாகாலக்ஷேபம் தொடங்கினார். நாளடைவில் அதுவே பழக்கமாய்விட்டது. தங்கராமனுடன் அவர் ஆத்மீகத் தொடர்பு கொண்டுவிட்டார். அதன்மீது ஒரு மாசு பட்டாலும் அவர் கண்ணில் பட்டதைப்போல் எண்ணினார்.

இப்படியெல்லாம் இருந்ததால்தானோ என்னவோ திடீரென்று ஒரு நாள் தங்க ராமனை அபேஸ் பண்ணிக்கொண்டு போய் விட்டான், அவருடன் வீணை சுருதி கூட்டிக் கொண்டு பக்கப்பாட்டு பாடும் பையன்!

ராமபாகவதர் அடைந்த துக்கத்தை நான் சொன்னால் நம்பமாட்டீர்கள். மாணிக்கத்தை இழந்த நாகத்தைப்போல் அலமந்தார் சிவராம பாகவதர். அதன் எதிரொலியாகத் தான் அவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. கடைசியில் கோரமான சாவும் சம்பவித்தது ......"

—"எதற்குச் சொல்ல வந்தேனென்றால் மனிதனின் மனம் பொல்லாதது. எவ்வளவு உன்னத லக்ஷிய உலகில், மெய்ப்பொருள் காணும் வழியில் செல்லும் மனிதன் அறிவிலும் ஒரு களங்கம், ஒரு அற்ப சபலமுண்டாக்கி, அவனைத் தன்வசப்படுத்தி, தரைமட்டமாக்கி விடுகிறது இந்த மனம்! இந்த மனம் மட்டும் மனிதனுக்கு இல்லாமல் இருந்தால் ......!"

—"நாம் சீட்டாடுவதில் காலம் கழிப்போம்? போதுமய்யா, தானுவய்யர்! நேரமாய்விட்டது, கடையைக் கட்டும்!" என்று சொல்லிக்கொண்டு எழுந்தார், மனவாள நாயுடு. மற்றவர்களும் எழுந்து கொட்டாவி விட்டனர்.

ஷிஷு பித்யா பன்

டாக்டர். வே. ராகவன்

"ஏன் ஸார், ஓங்க பெண்ணோ?"

"ஆமாம். இல்லே......"

"என்ன ஸார், ஆமாங்கறேள், இல்லேங்கறேள்!"

"என் கொழந்தேதான், ஆனாப் பொண்ணில்லே, புள்ளே!"

"கடசிப் பயலோ?"

"மூத்தவன்."

"என்ன! எங்கே படிக்கறான்?"

"சொல்லேண்டா, மாமா கேக்கறா"

ஷிஷு பித்யா பன்'

"என்னது!!"

"ஆமாம் ஸார், Shishu Bidya Ban."

"இதென்ன பன் ஸார் இது? ஏதோ கொழந்தைகளை பயமுறுத்தறத்துக்குச் சொல்றது போலனா இருக்கு!"

* * *

ஷிசு குழந்தை படிப்பதாகச் சொன்ன 'ஷிஷு பித்யா பன், என்ற புதிரை அவிழ்த்து விடலாம். இதை ஒழுங்கான உச்சரிப்புடன் சொன்னால் இதன் பொருள் தானாகவே விளங்கும். 'சிசு வித்யா வனம்' என்பதே இதன் சரியான பெயர். சிசுக்களின் அதாவது குழந்தைகளின் பள்ளிக்கூடம்; தோட்டத்தில் விளையாட்டோடு விளையாட்டாய்ப் படிப்பைப் புதுமுறையில்கற்றுக் கொடுப்பதால் 'வித்யா வனம்' என்று பெயர். இதை ஏற்படுத்தியவர் ஒரு வ(ப)ங்காள மாது. 'ச—ஷ' 'வ—ப' வித்யாஸமே கிடையாத மாகாணம். ஸம்ஸ்க்ருதத்தை அதன் பேருக்கு ஒப்ப ஒழுங்காய் உச்சரிக்கும் நமக்கு அவர்கள் பேச்சின் கொச்சை ஹாஸ்யமாயிருக்கும். ஆனால் நமக்கே வரவர படிப்பு மட்டம் கீழே போய்க்கொண்டேயிருப்பதால், வார்த்தைகளை விசாரித்து, நாவிற்கு அழகாய், ஸரஸ்வதீயாயிற்றே, பங்கம் செய்யலாகாது, என்ற பக்தியும் கவனமும் போய், தோன்றியபடியெல்லாம் உச்சரிக்கிறோம்; அதிலும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தால், கலாக்ஷேத்ரத்தையும் காலக்ஷேத்ரமாய்ச் செய்துவிடுவதில் நமக்கு அச்சமுமில்லை, அருவருப்புமில்லை. ஆகவே ஏற்படுத்தியவர் ஷிஷு பித்யா பன்' என்று பெயர் வைத்து, 'போர்ட்' போட்டதும், 'பஸ் ஸ்டாப்' இடமாக அதன் ஸ்தானம் இருந்ததால், பஸ் டிக்கட்டிலும், மக்களின் வாயிலும் அதே பெயர் வழங்கி வந்தது. அதன் உண்மையான உருவையோ பொருளையோ விசாரித்தவர் அரிது.

கலைத்துறையிலும் கல்வித் துறையிலும் யாராவது வங்காளிகள் வந்தால், அவர்களைப்பற்றி நாம் விசாரித்தால் அநேகமாய் எல்லோருமே கவி ரவீந்திரநாத் டாகூருக்கு உறவினர் என்று சொல்லிக்கொள்வார்கள். நம் 'ஷிஷு பித்யா பன்'னை ஸ்தாபித்து நடத்திவரும் மாதும் தன்னை அதுபோலவே விளம்பரம் செய்துகொண்டு சென்னையிலும் ஆதரவாளரின் மனதுகளிலும் வேரூன்றினாள். அன்னையின் பெயர் ப்ரபாஸ்தேவி, அதாவது காந்தியுள்ள தேவி; உச்சரிப்போ, ப்ரவாஸ் தேவி, ஊரைவிட்டு வெளியேபோன தேவி! தோட்டமுள்ள பங்களா ஒன்றை வாடகைக்கு ஏற்பாடு செய்துகொண்டு, தன் பள்ளிக்கூடத்தை ஆரம்பித்தாள்; ஆட்டம், பாட்டு, விளையாட்டு கதைகள் நடுநடுவே அது கொஞ்சம் இது கொஞ்சம் என்று படிப்பு. இப்படிப் புதுமுறையில் நடத்தப்படும் இப்பள்ளிக்கூடம் இரண்டு மூன்று வருஷங்களில் சிலரின் மனதைக் கவர்ச்சி செய்தது; குழந்தைகள் அதிகமாகச் சேர ஆரம்பித்தனர்: இதில் குழந்தைகளைச் சேர்ப்பதும், பல நண்பரிடம் தம் குழந்தைகள் ஷிஷு பித்யா பன்,னில் படிக்கின்றனர் என்று சொல்லிக்கொள்வதும் நாளடைவில் ஒரு 'பாஷன்' (fashion) ஆகவே ஆய்விட்டது. ப்ரவாஸ் தேவி கொஞ்சம் கொஞ்சமாய், சம்பளம் கிம்பளம் என்று அதிகமாகக் குழந்தைகளிடம் வாங்க ஆரம்பித்தாள்; பள்ளியில் குழந்தைகளைச் சேர்க்க விரும்பும் பெற்றோர் 'ஷிஷு பித்யா பன்' சங்கம் என்பதற்கு ரூபாய் 5 முதல் 100 வரை கொடுத்து

அங்கத்தினர் ஆகலாம், ஆனால் விசேஷம், ஆக வேண்டும்; புத்தகம், நோட்டுப்புத்தகம், ஸ்லேட் குச்சி, பென்ஸில் முதலியவற்றின் 'ஸ்டேஷனரி பீஸ்'—வெளியே ஒரு அணா குறைத்து விற்பவற்றை இங்கே கூடக் கொடுத்து எடுத்துக்கொள்ள வேண்டும்; சுடுதண்ணீர் பீஸ், ஸுகாதார பீஸ், இப்படி சில்லறைப் பீஸ்களுடன் முக்கியமான படிப்புச் சம்பளமும் மற்றப் பள்ளிக்கூடங்களிலிருப்பதைவிட அதிகம். அருகிலிருக்கிறதே என்று தம் குழந்தைகளை அனுப்பும் பொது மக்களுக்கு இவை கொஞ்சம் கட்டிவராத விஷயமே: தேவி பணம் பிடுங்கி என்று பெயர் வாங்கிவிட்டாள்.

மேற்சொன்ன செலவுகள் மாமூல் மாதச் செலவுகள். சில விசேஷ ஸமய ஸந்தர்ப்பங்கள் உண்டு. அவற்றில் மூன்று மாதத்திற்கு ஒருதரம் விடுமுறை நாட்களுக்கு முன் பொருட்காட்சி, ஆட்டம், பாட்டு, நாடகம், பெற்றோர் தினம் முதலிய கொண்டாட்டங்கள்: பெற்றோர் தினம் என்றால் பெற்றோர்கள், அதிலும் முக்கியமாய், தாய்மார்கள் கஷ்டப்படும் தினம் என்று பொருள்; குழந்தைகளைப் பள்ளிக்கூடத்தில் கிளப்பி விட்டால், அவர்கள் வீட்டிற்கு வந்து, அட்டஹாஸம் செய்து, அழுது உயிரை வாங்கிவிடுவர்; பெற்றோர் தினத்தன்று ஒரு இனிப்புத் தின்பண்டமும், ஒரு காரத் தின்பண்டமும் ஒவ்வொரு தாயும் செய்து கொண்டுபோக வேண்டும். இக்கொண்டாட்டங்களில் முக்கியமானது தேவியின் பிறந்த நாள்; பெற்றோர்களுக்கு நல் வரவு: தேத்தண்ணீரோ, கூல் டிரிங்கோ (Cool Drink) கிடைக்கும்; தங்களுக்கு இஷ்டமான காணிக்கைகளையும் 'ஷிஷு பித்யா பன்' நிதிக்கு நன்கொடைகளையும் விருந்தினர் கொடுக்கலாம், கொடுத்தால் விசேஷம், கொடுத்தாக வேண்டும்.

* * *

"ஒரு ஆட்டத்துலே ஒரு சின்ன 'சான்ஸ் (chance) கொடுத்துப் பாருங்களேன்?"

"இல்லயே, எல்லாப் பார்ட்டுகளும் (parts) கொடுத்தாயிடுத்தே."

"எக்ஸ்டராவா (extra) ஏதாவது போட்டுப்பாருங்கோ"

ஆயுர்வேத வித்வான் 'B.V. பண்டிட்' அவர்களின்
சத்வைத்யசாலை. நஞ்சன்கூடு.
"நஞ்சன்கூடு பல்பொடி"
I.D.L. ரெ6, மெடிகேடட் [பல் உபாதைகளுக்கு]
குழந்தைகளுக்கு
காஸ்மஸ் - கஸ்தூரி மாத்திரை
கர்ஜன் - கோரோஜனை மாத்திரை
பாலக்ஸ் - பேதியாக மாத்திரை
ஜ்வரேக் [எவ்வித ஜ்வரங்களுக்கும்]
ஜிஞ்சிப் [அஜீர்ண பித்த சமனி]
கூலெக்ஸ் [உஷ்ண சமன ஸ்நான தைலம்]
வியாதி விபரம் ஸ்டாம்புடன் எழுதவும்.
ஸான்டலக்ஸ் நறுமண சரும ரக்ஷிணி முகப்பரு, புண், சொறி குணமடைய.
காஷ்மீர்-குஸும் கூந்தல் செழிப்புக்கு நீங்களே தைலம் செய்ய உதவுகிறது.
மைசூர் "பிரேமலீலா" உயர்தர ஊதுபத்திகள்.
'அகர் ஸ்பெஷல், ஜவாது, ஜெயலக்ஷ்மி'
யுனைடெட் கன்ஸர்ன். 54, பந்தர் தெரு, மதறாஸ்.
டிப்போக்கள்: மதுரை, கோவை, கும்பகோணம், பம்பாய்.

"எப்படிப் போடறது? அதுவுமில்லாமே, ஓங்க பையன் நிதானமே இல்லே, கெட்டிக்காரன்தான், நெனவு கவனம் இதெல்லாம் இல்லாமே இருக்கான். விடாம ஒண்ணை நெட்ருப்பண்ணி ஒப்பிக்க மாட்டான், சொல்லிக் கொடுத்ததை அப்படியே செஞ்சுண்டு வரமாட்டான். ரொம்ப 'அன்ஸ்டெடி' (unsteady).''

"நீங்க இவ்வளவு தூரம் அவனை கவனித்து ஆராய்ந்து வைத்திருக்கேளா?''

"அவனைமட்டுமா? எல்லாப் பிள்ளைகளையும் ஆரத்தீர ரிஸர்ச் (research) பண்ணி மனோநிலையின் ஸூக்ஷ்மங்களை (psychological subtleties) எல்லாம் பாத்து, அவரவர்களுடைய இயல்பு, ருசி, நோக்கம், பற்று முதலியவற்றைக் கண்டுபிடித்து அதன்படி குழந்தைகளுக்குப் பயிற்சி செய்வதே 'ஷிஷு பித்யா பன்' னின் முறை, நோக்கம், தனிச்சிறப்பு.''

"இவ்வளவு மனோநிலையாராய்ச்சியில் ஈடுபட்டவர்களுக்குக் குழந்தைகளின் மெல்லிய மனது தெரியவில்லையே! ஒரு ஆட்டத்தில் கூடத் தன்னைச் சேர்க்கவில்லையென்று இக்குழந்தை ஏங்கி ஏங்கி, தான் ஏதோ உபயோகமற்றவன் என்ற எண்ணம் தோன்றி மனது முறிந்துபோய், முகத்திலேயே ஒரு கவலை பாய்ந்துபோய் பலருக்கிடையே தான் குறைபட்டவன் என்று தன்மதிப்பில்லாமல் வீணாய்ப் போய்விடுவானே! இதை உணரவில்லையே நீங்கள்?''

"நான் நன்கறிவேன், நீங்கள் இக்கொண்டாட்டங்களுக்கு வருவதில்லை. வரப்போகும் வருஷாந்தரக் கொண்டாட்டத்திற்கு வந்து பாரும்'' என்று ப்ரவாஸ்தேவிமொத்தமாய்ப் பதிலளித்துவிட்டு, 'ஒவ்வொரு பெற்றோருக்கும் இப்படி நான் ஸாவகாசமாய் ஸமாதானம் சொல்லிக்கொண்டிருப்பதென்றால், பள்ளிக்கூடத்தையே நடத்த முடியாது!'' என்று சொல்லிவிட்டுச் சட்டென்று உள்ளே போய்விட்டாள்.

* * *

பள்ளிக்கூடத்தில் சேர்ந்து நான்கு வருஷங்களாகியும், தான்ஒருதரம்கூடக்கொண்டாட்டங்களில் ஆடல், பாடல், நாடகம் முதலியவற்றில் கலந்துகொள்ளவில்லையே என்ற துயரும் ஏக்கமும் அதிகரித்துக் குழந்தை சந்த்ரமோஹனுக்குப் பசியும் இல்லை, படிப்பிலும் பற்றுக் குறைந்தது, வேறு விவகாரங்களிலும் ருசியற்றுப் போனான்; உடம்பு வைத்தியரிடம் காண்பிக்கும் நிலைக்கு வந்துகொண்டிருந்தது. கொண்டாட்டத் தினத்தன்று மாலை நான் 'வா ஓங்க பள்ளிக்கூடத்திற்குப் போவோம், நாடகத்தைப் பார்த்துவிட்டு வருவோம்' என்று கூப்பிட்டேன்; 'வரவில்லை' என்றுவிட்டான். நான்மட்டும் சென்றேன். அவளுடைய அழைப்பிற்கு இணங்கி, வராதவன் நான் வந்திருப்பதைப் பார்த்தும், ப்ரவாஸ் தேவி எனக்கு நல்வரவு சொல்லவில்லை; ஆனால் அவள் பரபரப்புடன் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும், அவள் அழைத்து உட்காரவைக்கும் ஒவ்வொருவரையும் நான் கவனித்து வந்தேன். நாடகம் ஆரம்பித்தது! இரண்டொருவரைத் தவிர மற்றச் சிறுவர், சிறுமிகள் பெரும்பாலும் நடிக்கத் தெரியாமல் 'மொந்த்' என்று நின்று கொண்டிருந்தவர்களே; ஆனாலும் ப்ரவாஸ்தேவி கைகளைத் தானே தட்டி, ஒவ்வொரு குழந்தையும் தோன்றும்போது, அதன் பெற்றோரிடம் வந்தாவது, அவரை நோக்கியாவது 'உங்கள் குழந்தை' என்று நகைத்து, அவர்களுடைய பாராட்டையும் பெற்று, அவர்களும் இவளுமாக மகிழ்ந்தனர். எனக்குத் தாங்கவே இல்லை; ப்ரவாஸ்தேவியின் பிடிவாதத்திற்கு மூலமாயிருப்பது ஒரு பெரும் அநீதி என்று நன்றாய்ப்புலப்பட்டது. 'கொடுக்கலாம், கொடுத்தால் விசேஷம், கொடுக்க வேண்டும்' என்று என்காதிற்குள் ஒரு சப்தம் எதிரொலித்தது!

விரைந்து வீட்டிற்கு வந்தேன். 'சந்த்ரமோஹன்' என்றேன். பதிலில்லை. 'தூங்கிவிட்டான்' என்றாள் என் மனைவி. சாப்பிட்டானா, பால் சாப்பிட்டானா? என்று கேட்டேன். 'ஒன்றும் சாப்பிடவில்லையே' என்று வருந்திய குரலில் தெரிவித்தாள்.

* * *

புது வருஷம்; சந்த்ரமோஹனை வேறொரு பள்ளிக்கூடத்தில் சேர்த்தேன். அவனுக்கு வாய்ப்பாட்டில் அதிக ருசியிருப்பதை நான் கவனித்து வந்திருந்தேன். தக்க வாத்தியார் ஒருவரை ஏற்படுத்தி பாட்டுச் சொல்லிக் கொடுத்தேன். நாளுக்கு நாள் உடம்பு தேறி வந்தது. ஹைஸ்கூலில் படிக்கும்போதே அகாடமிப் போட்டியில் பரிசு வாங்கினான். பின் காலேஜ் டே (College Day) யில் அவன் பாடியதைக்கேட்டு பெண் மாணவிகள் சொக்கிப் போனார்கள். வேலையொன்றிற்கும் போக மனமில்லாத என் புதல்வன் வித்வான் சந்த்ரமோஹன், பி. ஏ. ஆனான்.

* * *

ஒரு நாள் நான் ஆபீஸில் வீற்றிருந்தேன். திடீரென ஒரு ப்ரமுகர் உள்ளே நுழைந்தார்.

"என்ன விசேஷம்?"

"தெரியுமோல்யோ?"

"ஓங்களைத் தெரியாமலா? வந்த காரியம் என்னமோ?"

"இல்லே, இந்த வாரப் பத்திரிகைகளையெல்லாம் பாத்திருப்பேளே?"

'எல்லாத்தையும் பார்க்க முடியுமா? இப்பஇருக்கற பத்திரிகைகளைவாங்கறதுன்னு மாதச் சம்பளமும் போராது. ஒரே கலரைக் கொட்டி, ஏதாவது அட்டைப் படத்தைப் போட்டு, வெத்தலப் பாக்குக் கடையிலே எல்லாம் ஒரேயடியாய் வௌவால்போல் தொங்கவிட்டிருக்கு. சிலது பரிதாபமா தொங்கிண்டே இருக்கு."

"அதிருக்கட்டும் ஸார், இதைப் பாருங்க."

வந்தவரின் கையிலிருந்த பத்திரிகை ஒன்றை வாங்கிப் பார்த்தேன். சில நிமிஷங்களுக்குப்பின் வந்தவர் "இந்த வாரம்' ஷிஷு பித்யா பன்' னு பள்ளிக்கூடமிருக்கே, அதன் வெள்ளிவிழா. அந்தப்பள்ளிக்கூடக்காட்சிகள் அட்டைப் படத்தில். அதன் ஸ்தாபகர் வித்யாத்யாகினி' ப்ரவாஸ்தேவியின் உருவம்; உள்ளே நான் அவர்களையும் அவர்களுடைய கலையுணர்ச்சியையும், கல்வி நோக்கங்களையும் பற்றிய கட்டுரைகள் எழுதியிருக்கிறேன்."

"ஸரி, இந்தப் பத்திரிகைக்கு எங்கள் கம்பெனி விளம்பரம் வேணும் என்கிறீர்களா?"

"இல்லை, ஸார், உங்களுக்கு விளம்பரம் கொடுக்க நான் வந்திருக்கிறேன்."

'எனக்கு விளம்பரமா?,,

"ஆமாம், உங்களுக்கும், உங்கள் பையனுக்கும்."

"சந்த்ரமோஹனுக்கா?'

"ஆமாம்,'

"சந்த்ரமோஹனுக்கு நீங்கள்செய்யக்கூடிய விளம்பரம் ஒன்றுமில்லையே"

"அப்படியில்லை. எவருக்கும் விளம்பரம் தேவையில்லை என்று சொல்ல முடியாது. இக்காலத்தில் விளம்பரமே உயிர். அது போகட்டும். நான் வந்த காரியம் முழுதும் சொல்ல வேண்டாமா?"

"அதைச் சொல்வதுதான் முறை."

"முறையே சொல்லத்தான் இவ்வளவு பீடிகை. இந்த 'ஷிஷு பித்யா பன்' நிதிக்காக ஒரு உதவிக் கச்சேரி தங்கள் பிள்ளையைக் கொடுக்கச் சொல்லவேணடும். ம்ருதங்கம் கணீர் ராவ், பிடில் வில்லுப்பிள்ளையும் சந்த்ரமோஹன் ஒப்புக்கொண்டால் தாங்கள் வர ஆக்ஷேபணை இல்லை என்று சொல்லிவிட்டார்கள். தாங்களும் ஒப்புக்கொண்டால் வரும் வாரப் பத்திரிகையில் சந்த்ரமோஹனின் வாழ்க்கை, சித்திரங்கள் முதலியவைகளுடன் தனிப்பிரதிகள் கொண்டுவரலாம் என்று நினைக்கிறேன்."

"எல்லாம் நன்றாகத்தானிருக்கும். நான் சொல்வதற்கென்ன இருக்கிறது. ப்ரவாஸ் தேவி கல்வித் தொண்டில் தலை சிறந்தவள் என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். வித்யாத்யாகினி என்று போட்டிருக்கிறீர்களே, இது சும்மா போட்டதோ, இல்லே அவளுக்குக் கொடுக்கப்பட்ட பட்டமோ?",

"வரும் வெள்ளி விழாவில் ஒரு வெள்ளித் தட்டில் இந்தப் பட்டத்தை வரைந்து அவர்களுக்குப் பொதுமக்கள் சார்பாக வழங்குவதாக ஏற்பாடு."

"பொது மக்கள் சார்பாக! யார் வழங்கப்போகிறார்? அதுக்கு யாராவது ஒரு பெரிய மனுஷாளைத் தீர்மானம் செய்து வைத்திருப்பேளே?"

"பொதுமக்கள் சார்பாக, பொதுமக்கள் ப்ரதிநிதிகளான கனம் மந்திரிகளுள் ஒருவரே வழங்கப் போகிறார். கல்வி மந்திரி கனம் அடிப்படை (Basic) அவர்களையே கூப்பிடுவதாக உத்தேசம். தங்கள் பையன் கச்சேரியும் அன்று மாலை இருந்தால், அதில் வரும் வசூலையும் நிதியாக, பட்டத்துடன் தேவிக்கு ஸமர்ப்பணம் செய்யலாம். நிதி வசூலுக்காக 1000. 500, 250, 100, 50, என்று ஐந்து வகுப்பு டிக்கட்டுகளும் அச்சாகி, வெகு விரிவாய் வசூல் செய்யவும் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன."

"ஸரிதான், மாப்பிள்ளையில்லாத கல்யாணப் பேச்சாயிருக்கு நீங்கள் பேசுவது. சந்த்ரமோஹனுக்கு வயது வந்துவிட்டது. நான் அவனை ஒன்றும் நிர்ப்பந்திப்பதில்லை. உதவிக் கச்சேரிகளும் ஏராளமாய்ச் செய்தே வருகிறான், ஆனாலும் உடம்பையும் கொஞ்சம் கவனித்துக் கொள்ள வேண்டுமல்லவா? மேலும் தேதி ஸௌகரியப்படவேண்டும். எல்லாவற்றிற்கும் அவனையே கேட்டுக் கொள்ளலாமே."

"அப்படியா? கேட்கிறோம்; நீங்களும் சொல்ல வேண்டும். இந்த நிதியைக்கொண்டு 'ப்ரவாஸ் பன்' (ப்ரபாஸ வனம்') என்று தேவியின் பேரில் ஒரு பெரும் தோட்டமே வாங்கி விடுவதாகவும் உத்தேசம். எல்லாம் நீங்கள் மனது வைத்தால் ஆகும்"

"ஆகட்டும், போய் கேளும்."

* * *

In BUSINESS

— the *time* factor



ஸெகண்டஸ்

நியூ காலிபர் ரெக்டாங்குலர்.

9 காரட் தங்கம், சாதா டயல் ரூ. 145
18 காரட் தங்கம், சாதா டயல் ரூ. 195

இந்தியாவுக்கென்றே 75 வருஷங்களாக உயர்ந்த ரக வாட்ச் செய்து வரும் எங்கள் புகழ் ஒவ்வொரு வெஸ்ட் எண்ட் வாட்சுக்கும் உத்தரவாதமாக நிற்கிறது.

வியாபாரத்தில்

காலத்துக்கு உள்ள மதிப்பு

ஆபீசுகளிலும் சரி, தொழிற் சாலைகளிலும் சரி, நெசவாலையிலும் சரி, ஏன் தொழில் வாழ்க்கை வியாபார வாழ்க்கை எல்லாவற்றிலுமே - காலம் ஒரு முக்கியஸ்தானம் வகிக்கிறது. வேலைக்கு வரும் நேரம், ஒரு வேலையைச் செய்து முடிக்கச் செலவாகும் நேரம், பொருள்களைப் பட்டுவாடா செய்ய வேண்டிய நேரம்—எல்லாம் ஒழுங்குப்படி காலந் தவருமல் நடைபெற வேண்டும். முதலாளியானாலும் சரி, தொழிலாளியானாலும் சரி, எல்லோருக்கும் வாட்ச் அவசியமே. நம்பகமான வாட்ச் வேண்டுமென்றால் 'வெஸ்ட் எண்ட்' தான் அந்த வாட்ச். எல்லோருக்கும் பிடிக்கும் ரகங்களாகவும், ஏழை பணக்காரர் எல்லோரும் வாங்கக் கூடியதாகவும் பல வாட்சுகள் சீக்கிரமே எங்கள் கைவசம் இருக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

வெஸ்ட் எண்ட் வாட்ச் கோ.,
பம்பாய் :: :: :: கல்கத்தா

WEST END WATCH Co.

BOMBAY **CALCUTTA**

சென்னைக்கு ஏதோ காரியமாய், புலியூர் சிங்கமய்யங்கார் என்ற பழம் ஸங்கீதவித்வான் வந்திருந்தார். பழைய வித்வான்களில் உயிருடனிருக்கும் இரண்டு மூன்று பேர்களில் அவர் ஒருவர். அவரிடம் கொஞ்சம் பாட்டுக் கேட்க விரும்பி, சில ஸங்கீத ஸகாக்களுடன் சந்த்ரமோஹன் இரவில் அதிக நாழி கழித்து விட்டு, காலையில் கொஞ்சம் தூங்கிக்கொண்டிருந்தான். அவன் தாய் யாரோ ஒரு ஸ்திரீ வந்து அவனைக் காண்பதற்காகக் காத்துக் கொண்டிருக்கிருள் என்று அவனை எழுப்பினுள். இந்தத் தகவல் காதில் விழுந்தும் தகப்பனுர், விஷயம் கொஞ்சம் புரிந்து கொண்டவராய், தம் அறையை விட்டு வெளியே வாராமல், 'அவனையே எழுப்பி அவளைப் பார்க்கச்சொல்'' என்று சொல்லி விட்டார். சந்த்ரமோஹன் கொஞ்சநேரத்திற்கெல்லாம் முன்னறைக்கு வந்தான். வந்திருக்கும் ஸ்த்ரீ எழுந்து கும்பிட்டாள்.

''சந்த்ரமோஹன், என் பள்ளிக்கூடத்தின் வெள்ளி விழா வந்திருக்கிறது.''

''ஓ அப்படியா? வெள்ளியிருந்தால்தான் விழா.'' வந்த ஸ்திரீ அசட்டுச் சிரிப்பு சிரித்துக்கொண்டு ''ஆமாம்; அதற்குத் தங்கள் உதவி வேண்டாமா?'' என்ருள்.

''நான் என்ன உதவ இருக்கிறது? கொடைகளுக்கு (donation) அப்பாவைக் கேட்க வேண்டும்.''

''நான் வேண்டுவது நீர் கொடுக்கக்கூடும் கொடைகளுக்கெல்லாம் பெரிய கொடை. ஒரு உதவிக் கச்சேரி செய்யவேண்டும்''

''உங்கள் பள்ளிக்கூடம் எது?''

''ஷிஷு பித்யா பன்''

''ஓ! அப்பாவும் அம்மாவும் அதைப்பற்றி ஏதோ சொல்லிக்கொண்டே இருப்பார்கள். அப்பா, அம்மா!............'

வந்திருக்கும் ஸ்திரீ எழுந்து, கைகூப்பி சந்த்ரமோஹனின் பெற்றேரை வணங்கினுள். சந்த்ரமோஹனின் தந்தையைச் சற்று உற்று நோக்கினவளாய் யோசிக்கலானுள்.

''என்ன யோஜிக்கிருப்பல இருக்கு? ப்ரவாஸ் தேவிதானே? என்னைப்பார்த்தாப் பல இருக்கோ?''

''ஆமாம்.''

''நீங்க பாக்கவந்திருக்கும் சந்த்ரமோஹன் மட்டும் ஓங்க 'பன்' னின் பழைய மாணுக்கன் என்பது நினைவு இல்லியோ? அதே சந்த்ரமோஹன்தான்.''

''அப்படியா! 'ஓல்ட் ஸ்டூடெண்டா (old-student)! நான் போட்ட விதைதான் இப்படி வளர்ந்து புகழாய்ப் பூத்திருக்கிறது!''

''நீங்க போட்ட விதை! என்ன விதை போட்டேள்? நீங்கள் கையாண்ட வித்தை ஒன்றே............ கொடுக்கலாம், கொடுத்தால் விசேஷம், கொடுக்க வேண்டும்......'' இதற்குள் சந்த்ரமோஹன் இதைக் கேட்டதும் ''ஏனப்பா, அடிக்கடி நீ இந்த மந்திரத்தை ஜபிக்கிருயே, இதை வெகு நாளாய் என்னவென்று கேட்க வேண்டுமென்று எனக்கு ஆசை; இப்போது சொல்லு,'' என்ருன்.

''இந்த ப்ரவாஸ் தேவியைக்கேள். 'ப்ரவாஸ்தேவி! எனக்கும் உமக்கும் நடந்த வாக்குவாதம் நினைவிருக்கிறதா? 'டிரான்ஸ்பர் ஸர்டிபிகேட் (transfer certificate) கொடுக்கமாட்டேன் என்று சண்டை பிடித்ததாவது ஞாபகமிருக்கலாம். நான் பேபருக்குக் கடிதம் எழுதி, எதிர் ப்ரசாரம் செய்து 'ஷிஷு பித்யா பன்' னுடன் உங்களை வங்காளத்திற்கே திரும்ப அனுப்பிவிடுகிறேன் என்று சண்டையிட்டது இன்று போலிருக்கு எனக்கு.''

'ஆமாம். இப்போது ஏதோ நினைவுக்கு வருகிறது......மன்னிக்கவேண்டும்.''

''தேவி, இப்போது கொடுப்பவர் யார், கேட்பவர் யார்? கதையிலும் கலையிலும் நேரே உபதேசிப்பது எப்படி ஏருதோ, அதைப்போல் வாழ்க்கையிலும் நேரே உபதேசிப்பது ஏருது. அனுபவத்தில்தான் அறிவு ஏற்படவேண்டும். அதிலும் அனுகூலமான அனுபவத்தால் அறிந்துகொள்பவர் சிலரே; பெரும்பாலோர் ப்ரதிகூல அனுபவத்தால் தான் தெரிந்து கொள்கிருர்கள்; பட்டாத்தான் படுபர். ஆனுல் நீங்கள், கேட்க வந்திருப்பதற்கு இணங்காமல் உங்களைத் தண்டிப்பதாய் உத்தேசமில்லை.''

''நன்றி நன்றி.''

''வித்தை பக்ஷபாதமில்லாமல் எல்லா மாணவருக்கும் ஸமமாய் வழங்கப்படவேண்டும் கொடுப்பவர், கொடுக்காதவர், கொடுக்க முடியாதவர் என்று பேதம் செய்வது ஸரஸ்வதிக்கு த்ரோஹம்.''

''உண்மை, உண்மை

''அந்த ஸமபுத்திபுடன் கலைமகளை நீங்கள் உம் பள்ளிக்கூடத்தில் தொழுது வரவேண்டும். தன் பெருமைக்கும், தன் பெயருக்கும் பாடுபடாமல், எடுத்த தொண்டிற்கே உழைக்க வேண்டும். படாடோபமும், விளம்பரமுமே நோக்கமாக, அதற்கான ஆட்களையே நாடிக் கொண்டிருக்கக்கூடாது; கடைசி வேண்டுகோள்: இனி 'ஷிஷு பித்யா பன்' என்ற போர்டை எடுத்து விட்டு, இவ் வுதவிக் கச்சேரியைக் கொண்டு வாங்கப்போகும் இடத்திற்கு 'சிசு வித்யா வனம்' என்று பெயர் போடவேண்டும்.

எனது லண்டன் பிரயாணம்

M. S. V. தாதம்.

பம்பாயிலிருந்து போர்ன்மத்

நான் இங்கிலாந்து போக விரும்புவதாகச் சொன்ன சமயம் வீட்டில் ஒவ்வொருவரும் ஒவ்வொருவித ஆக்ஷேபனை கூறினார்கள். "அங்கே உனக்குச் சரியான சாப்பாடு இந்தச் சமயத்தில் கிடைக்காதே!" "இந்தக்குளிர் காலத்தில் போகிறேன் என்கிறாயே!" "இன்னும் ஆறு மாதம் கழித்துச் செல்வதாக இருந்தால் எனக்கு ஒருவித ஆக்ஷேபனையும் இல்லை" என்று காரணங்களைக்கூறி, சிலர் ஆக்ஷேபித்தார்கள். "நீ எதற்காகப்போகிறது?" என்று காரணமே எதுவும் சொல்லாமல் சிலர் ஆக்ஷேபித்தனர். இவர்களுடைய ஆக்ஷேபனைகளை நான் வென்ற பின், ஏற்கனவே அங்கே போய்விட்டு வந்திருப்பவர்கள் எனக்குப் புத்திமதி சொல்ல ஆரம்பித்தார்கள். "நன்றாக உடுப்பு உடுத்திக்கொள், அதுதான் அங்கே ரொம்பவும் முக்கியம்." என்றார் ஒருவர். இவர் சண்டைக்கு முன்பு இங்கிலாந்திற்குப் போய்விட்டு வந்தவர். ஆகையால் இந்த வருஷங்களில் அங்கே எவ்வளவு மாறுபாடு ஏற்பட்டு இருக்கிறது, எவ்வளவு பெரிய பணக்காரர்களும் ஒட்டுப் போட்டுத் தைத்த ஆடை உடுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்று அவர் உணரவில்லை. ஆனால் மிகச் சமீபத்தில் சென்றுவிட்டு வந்த மற்றொருவர் "விமானம் வழியாக நீ போகிறதால், உன் சாமான்களை ஓரளவுக்கு மேல் எடுக்க மாட்டார்கள். அதிகப் பணம் கேட்பார்கள். இருந்தும் பாதகமில்லை என்று நிறையப் பணம் கொடுத்து நல்ல ஆடைகளைக் கொண்டுபோ. நீ திரும்பி வரும் போது அங்கே இருப்பவர்கள் உன் காலில் விழுந்து கெஞ்சி நாலு பங்கு விலை கொடுத்து அவைகளை வாங்கிக்கொண்டு விடுவார்கள்." என்றார். இதன் உண்மையைப் பிற்பாடு நான் நேரில் கண்டேன். நான் திரும்பி வரும் சமயம் என்னுடைய சூட் ஒன்றிற்கு 25 பவுன் கொடுப்பதாக ஒருவர் கூறினார். நான் 45 ரூபாய் கொடுத்துச் சென்னையில் வாங்கின தோல் பெட்டி ஒன்றிற்கு 10 பவுன் (ரூபாய் 130/-) கொடுப்பதாக மற்றொரு இங்கிலீஷ்காரர் கூறினார். ஆனால் இந்த மாதிரி இங்கே வாங்கியதை அங்கே விற்கும் வியாபாரம் எதுவும் நான் செய்யவில்லை. "நன்றாகச் சாப்பிடு, எல்லாருடனும் பழகு, எல்லா இடங்களுக்கும் போ, யார் எங்கே கூப்பிட்டாலும் போய் பார்த்துவிட்டுவா" என்பது போன்றவை வேறு சில புத்திமதிகள். ஒருவர் தமது தோல் பெட்டியை இரவல் கொடுத்தார்: மற்றொருவர் தமது டிரஸ்ஸிங் கவுன் கொடுத்தார். பலர் அறிமுகக் கடிதங்கள் வாங்கிக்கொடுத்தனர். இவ்விதக் கடிதங்கள் மிகவும் குவிந்துவிட்டன. இங்கிலாந்தில் எனக்கு இவ்வித அறிமுகக் கடிதங்களில் குறிப்பிட்டிருப்பவர்களை நேரில் சென்று பார்க்கும் வேலைக்கு மாத்திரம் ஒருமாத காலம் தேவையாக இருந்தது. புத்திமதிகள், சாமான்கள், கடிதங்கள் எல்லாவற்றையும் வாங்கிக்கொண்டு நான் புறப்பட்டேன். கடைசி நிமிஷத்தில் அம்மா ஒரு சிறிய பகவத்கீதை புஸ்தகத்தை என் பெட்டி இடுக்கில் செருகிவைத்தாள். நான் பம்பாய் போய்ச்சேர்ந்த பிறகு அப்பா மந்திர பஸ்பம் ஒன்றைத் தபாலில் அனுப்பி, "இதை எப்போதும்உன்னுடன் வைத்துக்கொண்டு இரு" என்று எழுதியிருந்தார்.

நானும் என்னுடன் வரும் நண்பனும் தாமஸ் குக் அண்டு ஸன்ஸ் மூலமாக எங்கள் பாஸ்போர்ட்டிற்கும் ஏற்பாடு செய்திருந்தோம். பம்பாய் போய்ச்சேர்ந்ததும், பாஸ்போர்ட்டில் எகிப்து கான்ஸலின் அனுமதிப்பதிவு செய்யப்பட்டிருக்கவேண்டுமென்று அறியலானோம். "அதை நீங்களேபோய்ப் பெற்றுக்கொண்டு வருவது உசிதம்" என்று தாமஸ் குக் அண்டு ஸன்ஸ் கம்பெனியில் சொன்னார்கள். நாங்கள் எகிப்து கான்ஸல் ஆபீசுக்குச் சென்ற சமயம் அங்கே "நீங்கள் விமானம் வழியாக போகப்போகிறதாகச்சொல்லுகிறீர்கள். அதற்கு அத்தாட்சியாக விமானத்தில் உங்களுக்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று தெரிவித்த யுத்த போர்டின் தந்தியைக் காண்பியுங்கள்" என்றனர். அந்தத் தந்தியை என் நண்பன் ஊரிலிருந்து கொண்டுவர மறந்துவிட்டான். எகிப்து கான்ஸல் ஆபீசில் இந்த விடையைப் பெற்று என்ன செய்வது என்று தெரியாமல் நாங்கள் வெளிவந்ததும் என் நண்பன் பெரிதாகக் கோபித்து, "இவர்களுக்கு ஏன் இந்த அவநம்பிக்கை. ரூ 2000 கொடுத்து விமான டிக்கட் வாங்கியிருக்கிறோமே. இந்த ரசீதைப்பார்த்தால் போதாதா?" "விமானத்தில் போக இடம் கிடைக்காவிட்டால் எந்த முட்டாளாவது டிக்கட் வாங்குவானா," என்று இரைந்தான்.

பிறகு நாங்கள் வேறொரு நண்பரைத் தேடிப்பிடித்து அவர் மூலமாக ஏர் பிரையாரிடீஸ் போர்ட் ஆபீஸின் மூலமாய் யுத்த போர்ட் ஆபீசிலிருந்து எங்களுக்கு அனுப்பப்பட்ட தந்தியின் நகல் ஒன்றை வாங்கிக் கொண்டோம். மறுதினம் இதைக் கொண்டுபோய் காண்பித்த பின் எகிப்து கான்சலின் அனுமதி எங்கள் பாஸ்போர்ட்டில் பதிவு செய்யப்பட்டது.

பம்பாயிலிருந்து கராச்சிக்கு டாடா கம்பெனியாரின் விமானத்தில் சென்றோம். எல்லா ஊர்களிலும் சாதாரணமாக விமானம் புறப்படும் இடம் ஊருக்கு வெளியில் 10 மைல் தூரத்தில் இருப்பது வழக்கம். விமானக் கம்பெனிக்காரர்கள் ஊருக்குள் ஒரு ஆபீஸ் வைத்துக்கொண்டிருப்பார்கள். யாத்திரிகர்களை இந்த ஆபீஸில் திரட்டி தங்களுடைய மோட்டார் கோச்சில் அழைத்துச் சென்று விமானம் புறப்படும் இடத்தில் கொண்டு போய் விடுவார்கள். அதேவிதம் விமானத்திலிருந்து இறங்குபவர்களையும் ஊருக்குள் தங்கள் ஆபீஸில் கொண்டு போய் விடுவார்கள். ஊர் மத்தியில் ஹோட்டல், ரயில்வேஸ்டேஷன் முதலியவைக்கு அருகில் இவர்களுடைய ஆபீஸ் இருக்கும். பம்பாயில் நான் தாதரில் ஓர் உறவினர் வீட்டில் தங்கியிருந்தேன். டாடா விமான சர்வீஸ் ஆபீஸிற்கு நான் வரவில்லை என்றும் மோட்டார் கோச்சு தாதர் வழியாகப் போகும்போது அதில் நான் ஏறிக்கொள்வதாகவும் சொல்லியிருந்தேன். வெள்ளிக்கிழமை காலை 7-30 மணிக்கு பம்பாயில் விமானம் புறப்படும் இடம் போய்ச் சேர்ந்தோம். எங்களையும், எல்லாச் சமான்களையும் நிறுத்த பின் விமானத்தில் அமர்ந்தோம். அது புறப்பட்ட வெகு சீக்கிரத்தில் நிலத்தைத் தாண்டி கடலின்மீது பிரயாணம் செய்யலானோம். சுமார் 11-30 மணிக்குக் கராச்சியை அடைந்தோம்.

கராச்சியில் இரண்டொரு பத்திரிகை நிருபர்கள் நாங்கள் இங்கிலாந்து போகும் விஷயமாக எங்களைத் தூண்டிக் கேட்டனர். நாங்கள் போகும் விஷயத்தைப் பற்றிய விவரங்களை அதற்குள் வெளியிடுவது உசிதமல்ல என்று அவர்களிடம் சொல்லி எங்கள் யாத்திரையை இரகசியமாகவே வைத்துக் கொள்ளுமாறு சொன்னோம்.

கராச்சியிலிருந்து ஞாயிற்றுக்கிழமை இரவு 11-30க்கு எங்கள் விமானம் புறப்படுமென்று அறிந்தோம். அன்று மாலை எங்களுக்கு விமான ஆபீஸிலிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் கீழ்க்கண்டவாறு இருந்தது:

1. நீங்கள் தற்சமயம் கராச்சியில் கார்ல்டன் ஹோட்டலில் 16ஆம் நம்பர் அறையில் இருக்கிறீர்கள்.

2. உங்கள் விமானம் இன்று இரவு 11-30 மணிக்குப் புறப்பட்டுச் செல்லும்.

3. உங்கள் சாமான்கள் உங்கள் அறைக்கு வெளியில் 9 மணிக்குள் தயாராக இருக்க வேண்டும்.

4. 10 மணிக்கு வண்டி வந்து உங்களை அழைத்துச் செல்லும்.

அவ்விதமே வண்டியும் வந்து எங்களை அழைத்துச் சென்றது. விமானம் புறப்படுமுன் எங்கள் எல்லோருக்கும் டீ கொடுத்தார்கள். நாங்கள் 18 பேர்கள் யாத்திரிகர்கள் இருந்தோம். பௌர்ணமி சமயமாகையால் மிக நல்ல நிலவொளி இருந்தது. சற்றுக் குளிராகவும் இருந்தது. விமானம் புறப்பட்டதும் அரபிக் கடல் மீது செல்லலானோம். காட்சி மிகவும் ரம்மியமாக இருந்தது. ஆனால் வெகு சீக்கிரத்தில் நான் தூங்கிவிட்டேன். விடியற்காலை 4-30 மணி சுமாருக்கு எங்களை எழுப்பி அவரவர்கள் அவரவர் ஆசனத்துடன் சேர்த்துப் பிணைக்கும் பெல்ட்டைப் பூட்டிக்கொள்ளுமாறு சொன்னார்கள். விமானம் கீழே இறங்குவதாக இருந்தமையால் இது சாய்ந்து இறங்கும் சமயம் நாங்கள் உருண்டு விழாமல் இருக்க இந்த வழி.

நாங்கள் கீழே இறங்கினதும் ஒரு பெரிய நோட்டீஸ் பலகை கண்களில் பட்டது. அதனில்,

1. நீங்கள் இப்போது இருக்கும் இடம் ஷார்ஜா என்ற ஊர். பாரசீகக் குடாக் கடலில் ட்ரூசியல் ஓமன் நாட்டின் சமுத்திரக் கரையில் இருப்பது.

2. இந்த ஊர் மணியானது க்ரீன்விச் காலத்தைவிட $4\frac{1}{2}$ மணி முன்பானது.

3. இங்கே புழங்கப்படும் நாணயம்—ரூபாய்கள்" என்று கண்டிருந்தது. அங்கே எங்களுக்கு டீயும் பிஸ்கோத்தும் கொடுத்தார்கள். விமானம் எண்ணெய் ஊற்றிக்கொண்ட பின், நாங்கள் அங்கே இறங்கி, சுமார் ஒரு மணி நேரத்திற்குள் மறுபடி புறப்பட்டோம். போகும் வழியெல்லாம் பாலைவனம். வெறும்

இண்டோ கமர்ஷியல் பாங்க்

லிமிடெட்

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் :-	சென்ட்ரல் ஆபீஸ் :-
மாயவரம்	மதராஸ்

அதிகாரம் பெற்ற மூலதனம்	ரூ. 25,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ. 21,25,000
செலுத்தப்பட்ட மூலதனம் ...	ரூ. 18,75,000
ரிஸர்வ் பண்டு	ரூ. 10,00,000

பிராஞ்சுகளும், ஸப் ஆபீஸ்களும் தென்னிந்தியாவிலுள்ள முக்கியமான பட்டணங்களில் இருக்கின்றன

சகலவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும்

S. N. N. சங்கரலிங்க அய்யர்
மேனேஜிங் டைரக்டர்

பொட்டல் மணல். பாஸ்ரா நகரம் ஒன்றும் அதன் அருகில் ஓடும் டைகிரிஸ் நதியுமே கண்களுக்குக் குளிர்ச்சியாக தென்பட்டன.

அந்த ஊர் மணிப்படி காலை மணி 8-45க்கு பாக்தாத் நகரத்தை அடைந்தோம். க்ரீன்வீச் மணிக்கு இது மூன்று மணி நேரம் முன்பானது, பாக்தாத் நகரத்தில் விமானம் இறங்கும் இடத்திலிருந்து சுமார் இரண்டு மைல் தூரத்தில் இம்பீரியல் பாலஸ் என்ற அழகிய ஹோட்டல் இருக்கிறது. டைகிரிஸ் நதிக்கரையில் ஒரு ரம்யமான தோட்டத்தின் ஓரத்தில் இது கட்டப்பட்டிருக்கிறது. நாங்கள் அங்கே அழைத்துச் செல்லப்பட்டோம். ஒரு பெண்மணி எங்களை வரவேற்று அழைத்துச் சென்றாள். விமானக் கம்பெனியார்கள் தங்கள் விமானத்தில் யாத்திரை செய்பவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும் வசதிகளில் ஒன்று இவ்விதம் வரவேற்கும் பெண்மணிகள். விமானம் தங்கும் ஒவ்வொரு இடத்திலும் ஒரு பெண்மணி யாத்திரிகர்களை வரவேற்று அவர்களுடைய தேவைகளையும் சௌக்கியங்களையும் கவனித்து அவர்களை வழி அனுப்புமாறு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறாள். யுத்த சமயத்தில் எல்லா ஊர்களிலும் இவ்விதம் பெண்கள் கிடைப்பது கஷ்டமாக இருந்தது. நான் இங்கிலாந்து போகும் சமயம் பாக்தாத் நகரம் ஒன்றில் மாத்திரமே இவளைப் பார்த்தேன். பிற்பாடு ஐரோப்பாவில் விமானம் மூலம் பிரயாணம் செய்கையில் எல்லா ஊர்களிலும் இவ்வித வரவேற்கும் பெண்கள் இருந்தனர்.

பாக்தாத் நகரத்திலும் ரூபாய் நாணயத்தைப் பெரியகடைகளில் அங்கீகரிக்கிறார்கள். எல்லா வகைப் பண்டங்களையும் பாக்தாத் நகரத்தில் கண்டேன். விலை மாத்திரம் இந்தியாவைவிடச் சற்று அதிகமாக இருப்பதாக எனக்குப்பட்டது.

காலைப் போஜனத்தை அங்கே அருந்திவிட்டு, 10 மணிக்கு நாங்கள் மறுபடி புறப்பட்டோம். அதேவிமானத்தில்தான் ஏறிக்கொண்டோம். ஆனால் அதை ஓட்டுபவர்கள் வேறு மனிதர்களாக இருந்தனர். சுமார் 6-30 மணி நேரம் நாங்கள் நூற்றுக்கணக்கான மைல்கள் தூரம் நீண்ட பாலைவனங்களைக் கடந்தோம். பச்சென்று கண்ணில் பட எதுவும் கிடையாது. இருந்தும் விமானத்திற்குள் குளிராகவே இருந்தபடியால் நாங்கள் கோட்டிற்குமேல் பெரிய கோட் ஒன்றைத் தரித்துக்கொண்டிருந்தோம்.

இந்தியாவின் மணிப்படி மாலை 6 மணிக்கும், அந்த ஊர் மணிப்படி பிற்பகல் 3 மணிக்குமாக நாங்கள் கெய்ரோ நகரத்தை அடைந்தோம். அதற்குச் சற்று முன்பாகச் சூயஸ் ஜலசந்தியைத் தாண்டிப் பறந்தோம். 6000 அடி உயரத்தில் நாங்கள் இருந்தமையால் அங்கிருந்து பார்க்கையில் அந்தக் குறுகிய ஜலசந்தி ஒரு வாய்க்கால் போல் தென்பட்டது. சாதாரணமாக இங்கிலாந்துபோகும்விமானத்தைக் கிறிஸ்தவர்களின் புண்ணிய க்ஷேத்திரமாகிய ஜெரூசலோமிற்குமேல் பறக்கவிட்டு அதையாத்திரிகர்கள் தரிசிக்கச் சந்தர்ப்பம் அளிப்பது விமானக்காரர்களின் வழக்கம். ஆனால் அன்று ஜெரூசலத்திற்குமேல் மிக மேகங்கள் மூடிக்கொண்டு மழையாக இருந்தமையால் சற்று மேற்புறமாக ஒதுங்கிச் செல்லும்படி நேர்ந்தது. விமானம் ஓட்டுபவர் தாம் அவ்விதம் செய்ய நேர்ந்தது பற்றித் தமது வருத்தத்தைத் தெரிவித்து, புண்ணியக்ஷேத்திர தரிசனத்தைவிட யாத்திரிகர்களின் பத்திரமே முக்கியமாகத் தாம் கருதுவதாகச் சொன்னார். மேகம் அன்று அதிக கனமாக மூடியிருந்தமையால் சில சமயம் நாங்கள் உயரத்திலிருந்து கீழே சிறிது இறங்கியும், ஏறியும் பறக்கும்படி நேர்ந்தது. இவ்விதம்பறக்கையில் காற்று திரண்டிருக்கும் இடத்தில் விமானம் மோதுவதால் எங்களைக் குலுக்கிவிடும். இவ்விதம் மோதுவது கெய்ரோவின் சமீபத்தில் மிக அதிகமாக இருந்தது.

கெய்ரோவில் எகிப்து அரசாங்க அதிகாரிகள் எங்கள் பாஸ்போர்ட், அம்மை குத்தின அத்தாக்ஷி, சாமான்கள் எல்லாவற்றையும் பரிசோதித்தார்கள். அவ்விதம் சோதிப்பது மிகத் தாமதமான முறையில் நடத்தப்பட்டதால் அநாவசியமாக ஒரு மணி நேரகாலம் வீணாகிவிட்டது. கெய்ரோபோன்ற ஒருமுக்கிய ஸ்தலத்தில் கிழக்கும் மேற்கும் போகும் யாத்திரிகர்கள் ஒவ்வொரு தினமும் மணிக்கு மணிவந்து இறங்கும் இடத்தில் இவ்விதப்

பரிசோதனை தாமதமாக நடப்பதுவருந்தத் தக்க விஷயம். இதனால் யாத்ரிகர்களுக்கு மிக்க கஷ்டம் ஏற்படுகிறது.

விமானக் கம்பெனியின் மோட்டார் கோச்சு எங்களை ஹெலியே போலிஸ் ஹவுஸ் என்ற ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றது. அது மொஹலாயர் தோரணையில் கட்டப்பட்ட பங்களா. மற்றொரு இந்தியருக்கும் என் நண்பருக்கும் எனக்குமாக ஒரு பெரிய அறை கொடுத்திருந்தார்கள். அந்தக் கட்டிடத்தில் இருந்த நீண்ட குகை போன்ற வழிகளும் பெரிய பெரிய அறைகளும் ஒவ்வொரு மூலைகளிலும் இருக்கும் பிரமாண்ட நிலைக் கண்ணாடிகள் பிம்பங்களை இரட்டிப்பாய், பிரதிபலிப்பதும், அரபிய வேலையாட்கள் சிலைபோன்ற வதனங்களுடன் இங்கும் அங்கும் போவதும், எங்கள் அறைக்குப் பக்கத்து அறையிலிருந்த இங்கிலீஷ்காரர் ஒருவர் தமது பெட்டிக்குப் புது வர்ணம் கொடுத்துக் கொண்டிருந்தவர் எங்களை விறைத்து விறைத்துப் பார்த்தும் எனக்கு என்னவோபோல் மிகவும் கஷ்டமாக இருந்தது. சுறுக்காகச் க்ஷவரம் செய்துக்கொண்டு ஸ்நானம் செய்துவிட்டு ஊர் பார்ப்பதற்காகப் புறப்பட்டேன். மார்கெட்டுகளும், கடைத்தெருவுகளும் கல்கத்தா, பம்பாய் நகரங்களைவிட இன்னும் அதிகக் கும்பலாக இருந்தன. சகல சாமான்களும் அங்கே கிடைக்கின்றன. சில பண்டங்கள் முக்கியமாகத் தோலில் செய்யப்பட்டவை. இந்தியாவைவிட மலிவாக இருக்கின்றன. அந்த ஊர் நாணயம் பியாஸ்ட்ரிஸ் என்றும் மிலீம் என்றும் சொல்லப்படுபவை. 100 பியாஸ்ட்ரா சுமார் ஒரு பவுனுக்குச்சரியாக இருக்கும்.

ஹோட்டலுக்கு எட்டு மணிக்குத் திரும்பி வந்து இரவு போஜனம் அருந்தினேன். அன்னம் வேண்டுமென்று நான் கேட்டதற்கு ஒரு தட்டுச் சாதத்தை ஒரு வேலையாள் கொண்டுவந்து கொடுத்தான். அதில் ஒவ்வொரு அரிசியும் ஒரு சோளப் பொரி அளவு பெரிதாக இருந்ததால் அதைப்பார்த்தசமயம் அது அரிசிச்சோறு என்று என்னால் நம்பமுடியவில்லை. தவறுதலாக வேறு ஏதோ கொண்டுவந்து கொடுத்து விட்டான் என்றே முதலில் எண்ணினேன். நீல நதிக்கரையில் வளரும் எகிப்து அரிசி அவ்விதம்தான் இருக்கும் என்று பிறகு அறிந்தேன். விடியற்காலை எழுந்து ஆடை உடுத்தி, காலை போஜனம் அருந்திவிட்டு, சுமார் எட்டு மணிக்கு விமானம் புறப்படும் இடம் போய்ச் சேர்ந்தோம். அங்கே மறுபடி, பாஸ்போர்ட் பரிசோதனைக்காக அதிக தாமதம் ஏற்பட்டது. அனேக விமானங்கள் அங்கே இருப்பதைக் கண்டேன். உலகத்தின் பெரிய விமான ஸ்டேஷன்களில் இதுவும் ஒன்று என்று நினைக்கின்றேன். ஒவ்வொரு 5 நிமிஷமும் ஒரு விமானம் புறப்பட்டுச் சென்றது. நாங்கள் முதல் தினம் இறங்கின விமானத்திலேயே மறுபடியும் ஏறி, 9-மணிக்குப் புறப்பட்டோம். நீலநதிக்கரையின் வழியாகச் சிறிது தூரம் செல்லுகையில் அந்த நதியின் எண்ணற்ற வாய்க்கால்களும் நீர்ப்பாசனங்களும் தெளிவாகத் தென்பட்டன.

தூரத்தில் காணப்படும் பாலைவனங்களுக்கும் இந் நதி வரும் பிரதேசத்தைச் சுற்றி இருக்கும் பசுமைக்கும் வித்தியாசம் அதிகம் இருக்கிறது மேற்குப்புறத்தில் பிரமிட்டுகள் தென்பட்டன. ஆனால் நாங்கள் அதன்மேல் பறக்கவில்லை. வடமேற்காகத் திரும்பி மறுபடி நூற்றுக்கணக்கான மைல்கள் பாலைவனங்களைக் கடந்தோம். இந்த வனத்தில் தாரில் போடப்பட்ட நீண்ட பாதை தென்பட்டது. சமீபத்தில் நடந்த யுத்தத்தில் நேச நாடுகளின் துருப்புக்கள் செல்வதற்காக ஏற்பட்டவை போலும் இவை. வட ஆப்ரிக்காவில் எல்ஆடம் என்ற இடத்தில் இருக்கும் இராணுவ விமானச் சாலையில் இறங்கி, பகல் சிற்றுண்டியை உண்டோம். பாலைவனத்தின் நடுவில் இருக்கும் இராணுவ ஸ்தலம் அது. அங்கே காண்பதற்கு விசேஷம் எதுவுமில்லை. சிற்றுண்டி அருந்தியதும் நாங்கள் மறுபடியும் புறப்பட்டோம். மத்தியதரைக் கடற்கரையோடு சிறிது தூரம் பறந்து, பின் அக்கடலைத்தாண்டி, சுமார் மாலை 4-30 மணிக்கு மால்டாத்தீவை அடைந்தோம். நாங்கள் அதை அடைவதற்குச் சற்று முன்பாக ஒரு பெரிய புயலும் மழையும் ஆரம்பித்தன. சுமார் 10, 15 நிமிஷங்கள் எங்கள் விமானம் அப்புய

வில் அகப்பட்டு மிக ஆபத்துக்கிடமான நிலையில் இருந்தது.

இந்த யுத்தத்தில் மிகவும் அடிப்பட்ட இடம் மால்டாத் தீவு. நாங்கள் ஒரு வாடகை மோட்டார் ஏற்படுத்திக் கொண்டு வெடிகுண்டால் சேதமான சில இடங்களைப் பார்த்துவிட்டு வந்தோம். மால்டா மிகவும் அழகிய தீவு. அங்கு இருப்பவர்கள் பிரஞ்சுப் பாஷையைப் பேசுகின்றனர். நாங்கள் அன்று இரவுபடுத்துக் கொள்வதற்கு இராணுவக் குடிசையில் இடம் அளித்தார்கள். ஒரு அரை வட்டமான குடிசையில் 12 பேர்கள் விகிதம் படுத்தோம். இதுதான் இராணுவச் சாலைகளைப் பற்றின எனது முதல் அனுபவம். சாப்பாடு முடிந்ததுமே நான் படுக்கச்சென்றேன். இரவு 1-30 மணிக்கு எழுந்து முகம் கழுவிக்கொண்டு மோட்டாரில் ஏறி, விமானம் புறப்படும் இடம் சென்றோம். அங்கிருந்து 3-45 மணிக்குப் புறப்பட்டோம்.

விமானத்தில் அதிகமும் குளிராக இருந்தது. குளிருக்கென்று அவர்கள் கொடுத்திருக்கும் கனத்த கோட்டையும், கால் மூடிகளையும் கைவிரல் அங்கியையும் தரித்துக்கொண்டு நான் சிறிது நேரம் தூங்கினேன். வெளியில் நிர்மலமான நிலவொளி இருந்தது. விடியற்காலை மத்ய தரைக்கடலில் கிழக்குப்புறம் அருணோதயக் காட்சியைக் கண்டேன். அந்த விடியற்கால யாத்திரை அதிகமும் மனோகரமாக இருந்தது. அந்த இனிமையை வர்ணிக்க இயலாது. சூர்யோதயம் சமயம் ஸார்டினியாவையும் அதன்விமானச்சாலையையும் அதன் உப்பளங்களையும் கடந்து சென்றோம். காலை 8¾ மணிக்குப் பிரான்ஸ் தேசத்தில் மார்ஸெயில்ஸ் நகரத்திற்கு அருகிலுள்ள இஸ்திரஸ் என்ற இடத்தில் இறங்கினோம். விமானத்தை விட்டு வெளிவந்ததும் மிகவும் குளிராக இருந்தது. அவ்வளவு குளிர் பிற்பாடு நான் ஐரோப்பாவில் இருந்த சமயம் எங்கும் அனுபவிக்கவில்லை. காலை சாப்பாட்டிற்கு மாமிசக்கலப்பில்லாத உணவு வேண்டும் என்று ஹோட்டலில் கேட்டேன். ஆனால் அங்கு இருந்த பிரஞ்சு வேலைக்காரிக்கு நான் சொன்னது புரியவே இல்லை. ஆகையால் வெறும் ரொட்டியும் வெண்ணெயும் டீயும் மாத்திரம் அருந்திவிட்டுப் புறப்பட்டேன்.

9–30 மணிக்குப் புறப்பட்டுப் பிரான்ஸ் தேசத்தின் மேலாகப் பறந்தோம். அத்தேசத்தில் தென் புறத்திலிருக்கும் திராக்ஷைத் தோட்டங்களும், தென்கிழக்குப் புறத்தில் ஆல்ப்ஸ் மலைகளும் கண்களில் பட்டன. பிறகு வடக்கே திரும்பி இங்கிலீஷ் கால்வாயைக் கடந்தோம். அப்போது மணி சுமார் பகல் 1–45 இருக்கும். என்னுடன் வந்த சில இங்கிலீஷ் யாத்திரிகர்கள், முக்கியமாய் இரண்டு பெண்மணிகள் இங்கிலாந்தின் டோவர் பிரதேசத்தில் வெள்ளைச் சுண்ணாம்புக் குன்றுகளைப் பார்த்ததும் சந்தோஷத்தில் எழுந்து குதித்தார்கள். வெகுநாள்கழித்துத் தமது சொந்தத்தேசம் வருகிறவர்கள் அவர்கள்.

கராச்சி	...	ஷார்ஜா	...	637 மைல்	...	4-45 மணி நேரம்
ஷார்ஜா	...	பாக்தாத்	...	761 ,,	...	6-00 ,,
பாக்தாத்	...	கெய்ரோ	...	710 ,,	...	5-35 ,,
கெய்ரோ	...	எல்ஆதம்	...	395 ,,	...	3-10 ,,
எல்ஆதம்	...	மால்டா	...	555 ,,	...	4-30 ,,
மால்டா	...	இஸ்திரஸ்	...	646 ,,	...	5-00 ,,
இஸ்திரஸ்	...	போர்ன்மத்	...	530 ,,	...	4-25 ,,
				4,234		33-25

கே. சுந்தரம்மாள்

14

பாமா சந்தர் சந்தித்த ஐந்தாவது தினம் மாலை ஐந்தரை மணி. மாஹிஷ்மதி வனமெங்கும் தங்க முலாம் பூசினான் தாமரையின் காதலன். நந்தவனத்தின் கிழக்கு வாசலில் எதிரெதிராக இரண்டு மோட்டார்கார்கள் ஒரே சமயத்தில் வந்து நின்றன. பாமாவும் ரவிவர்மனும் ஒரு வண்டியிலிருந்து இறங்கினார்கள். மற்ற வண்டியிலிருந்து கலாவதியும் பாலச்சந்திரனும் இறங்கினார்கள். முறையே நால்வரும் 'நமஸ்காரம்' என்று கை குவித்தார்கள். 'இருவரும் எவ்வளவு நிர்ணயமானவர்கள். வெவ்வேறு திக்கிலிருந்து புறப்பட்டும் ஒரே சமயத்தில் இவ்விடம் வந்து சேர்ந்தது, என்ன கணக்கு' என்றது பாமா சந்திரன் இருவர் மனமும்.

கொஞ்ச தூரம் நால்வரும் நடந்து சென்றதும் "நாங்கள் பளிங்கு மண்டபத்தில் எழுதிக்கொண்டிருக்கிறோம். நீங்கள் இருவரும் சற்று நேரம் உலாவி விட்டு வாருங்கள்" என்றாள் கலாவதி பாமா சந்தர் இருவரையும் நோக்கி.

கலா ரவிவர்மன் தலை மறையும் வரை நின்று கொண்டிருந்த பாமாவும் சந்தரும் தலைமறைந்ததும்,

"வாருங்கள்; கொடிவீட்டிற்கு ஒரு ரகசியம் சொல்லுகிறேன். அன்று நீங்கள்............ எனக்குக் கவலையாக இருந்தது." என்றாள் பாமா.

"நானும் உனக்கு ஒரு ரகசியம் சொல்லப் போகிறேன். ஆனால் அன்று எனக்கு ஒன்றும் நேரவில்லை. உன்னைப்பற்றித்தான் கவலையாக இருந்தது. கலாவதி கவலைப்பட வேண்டாம் என்று விஷயத்தைச் சொன்னாள். வா! அங்கேபோய் அன்று நடந்த விஷயங்களைப்பேசுவோம்" என்று அவள் கையைப் பற்றி நடந்தான்.

கலா ரவிவர்மனைப்பற்றிய விஷயத்தை இருவரும் ரகசியமென்று சொன்னபொழுது, ஒரே விஷயத்தை இருவரும் சொன்னதற்காக அவர்களின் சிரிப்பொலி வனமெங்கும் எதிரொலித்தது.

எதிரெதிராக மேஜையின் முன் உட்கார்ந்து எழுதிக்கொண்டிருந்தார்கள் கலாவும் ரவிவர்மனும். சற்று நேரம் சென்றதும் பேனாவை வைத்துவிட்டு, கையை நீட்டிச் சோம்பல் முறித்துக் கொண்டே,

"கலா, இன்று எழுதினது போதும். இரவு பார்த்துக்கொள்ளலாம். என் மனம் இதில் செல்லவில்லை. வா, சற்று உலவி விட்டு வரலாம்"

"முடியாது; எழுத்து வேலை முடிந்தபின்பு தான் வரமுடியும்" என்றாள் குனிந்த தலை நிமிராமலே.

"சுகந்தமான தென்றல் காற்று. மாலை நேரம். நல்ல காற்று மேலேபட சற்று நேரம் சந்தோஷமாக உலவாமல் என்ன எழுத்துவேலை? அப்படியொன்றும் முக்கிய விஷயமல்ல. நீ வரப்போகிறாயா இல்லையா?"

"இல்லை" என்றாள் அமைதியாக.

"இப்பொழுதிருக்கும் மன நிலைமையில் இந்தக் காகிதங்கள் பூராவையும் சுக்குச்சுக்காகக்கிழித்துப்போட்டுவிடுவேன். மரியாதையாக எழுந்து வா?" என்றான்.

"அப்படிக் கிழித்துப் போட்டால் மஹாராஜாவிற்குப் போன் செய்துவிடுவேன் அம்புலன்சு கொண்டு வரும்படியாக." என்றாள் புன்சிரிப்புடன்.

"அம்மா! பரதேவதா! உன் வாயினால் அப்படிச் சொல்லிவிட்டால் நான் தப்புவது எது? மஹாராஜாவின் செல்லப்பெண் வாயி

னால் வந்த சொற்கள் மஹாராஜாவிற்கு வேத வாக்கு ஆகிவிடும். அப்படி ஒன்றும் செய்துவிடாதே: தயவு செய்து எழுந்து வா" என்றான்,

"தயவுசெய்து மன்னித்துக்கொள்ளுங்கள். இன்றுடன் இவ்வேலை முடிந்துவிட வேண்டும்."

"நான் உன்னை எழுதவிடமாட்டேன்" என்று பேனாவுடன் சேர்த்து அவள் கையை இறுகப் பிடித்தான்.

"இந்த விஷயத்தில்கூடச் சுதந்திரம் கிடையாதா? இன்று என் மனம் உலவ விரும்பவில்லை" என்று முடிக்குமுன், பாமாவும் சந்தரும் இரண்டு செண்டுகளுடன் அவ்விடம் வந்தார்கள். சட்டென அவள் கையை விட்டு விட்டு "ஆஹா! செண்டு வெகுநேர்த்தி" என்று அதை முகர்ந்துவிட்டு சந்தரின் கையைப்பற்றியவாறு மண்டபத்திலிருந்து வெளியே சென்றான்.

தான் உட்கார்ந்திருக்கும் சோபாவிலேயே பாமாவையும் உட்காரவைத்து, அவள் தோளில் கைபோட்டு அணைத்தவண்ணம், "யுவராஜா உன்னை வெட்டி ஆற்றில் எறிந்துவிடவில்லை யென்று ருசுப்படுத்தினாயா? சந்தருக்கு" என்றாள் கலா.

சிரித்தாள் பதில் சொல்ல முடியாத நிலைமையில்.

"பாமா! இது என்ன விபரீத புத்தி? யுவராஜா எந்த விதத்தில் குறைவாகத் தோன்றுகிறார் உனக்கு. யாவரும் ஒப்பும் விஷயத்தில் முரண்பாடு ஏன்? மஹாராணியாரின் மனம் எவ்வித கஷ்டத்தை அடையும்?"

"கலாவதி! நீயே இப்படிப் பேசினால் நான் என்ன பதில் சொல்லுவது?"

"நீயே என்றால், நான் அதிமேதாவி என்பது உன் எண்ணம் போலும்."

"சந்தேகமென்ன? உலகமே உன் மேதையைக் கொண்டாடுகின்றது."

"அது போகட்டும். இதனால் நீ அதிக கஷ்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிவரும்."

"ஏற்றுக் கொள்ளுகிறேன்."

"யுவராஜா உன்னை நிர்ப்பந்தம் செய்தால்."

"அதுதான் இல்லை. அவர் மனம் வேறொரு பெண்மணியினிடம் அடைக்கலம் புகுந்துவிட்டதாக அவரே சொன்னார்."

'யார் அப்பெண் என்று சொல்லவில்லையா?"

தன் இரண்டு கைகளையும் அவள் கழுத்தில் மாட்டியவண்ணம், "நாட்டிய சக்கரவர்த்தினியே அவர் இருதய பீடத்தில் வசிக்கும் ஆற்றல் படைத்தவள். கலாவதி தேவியாரைத் தவிர வேறுயாரும் இருக்க முடியாது என்று நானே உணர்ந்து கொண்டேன், அவரும் ஒத்துக்கொண்டார்."

"பலே! பாமா! யௌவனத்தின் சக்தியானது பெண்மையின் சக்தியை அதியற்புதமாகச் செய்துவிடுகிறது. நான்கு வருஷத்திற்குமுன், ஸ்கூலில் பெண்களாகச் சேர்ந்து

நடித்த நாடகத்தின் பொழுது, காதலைப் பற்றி லீலாவதி சொல்லும் சமயம், 'என்னடி, காதல் காதல் என்று என்னவெல்லாமோ சொல்லுகிறீர்களே. அது என்ன பூச்சாண்டியா, பேயா, தேவதையா, மனிதனை விழுங்கி விடுமா?' என்று பரிகாசம் செய்த பாமா காதலைப் பற்றி வியாக்கியானம் செய்தாள் என்றால் அந்தக் காலத்தின் மகிமையை என்னவென்று சொல்லுவது? அது

போகட்டும். 'பாமா!, விநாச காலே விபரீத புத்தி' என்றபடி நமது மனம் இப்படிச் செல்வது தன்மைக்கல்ல. வாழ்க்கையில் கடமையே முக்கியம். அதனால் கடமையை உத்தேசித்து எவ்வித தியாகத்தையும் செய்யப் பின்வாங்கக்கூடாது. உன்னை வளர்த்தெடுத்த மஹாராணியும் மஹாராஜாவும் மனம் குளிர வேண்டுமானால் நீ யுவராஜாவின் மனதை உன் பால் திருப்பவும், உன் மனதை அவர் பால் திருப்பவும் பிரயத்தனம் செய்ய வேண்டும்."

"கலாவதி! அதெப்படிச் சாத்தியமாகும்? நமது புத்தியை இவ்விதமாகச் செய்த விதியின் சக்தியானது என்ன செய்கிறது என்பதைப் பார்ப்பது?" என்று முடிக்குமுன்,

"விதி இப்படிச் செய்யுமானால் அதற்கு மாப்புக் கொடுப்பீர்களா?" என்று கேட்ட வண்ணம் பின்புறமாக வந்த ரவிவர்மன், இருவரையும் அணைப்பதுபோல் இருபக்கமும் இருகைகளை அவர்கள் மீது படா வண்ணம் வைத்தபடி புன்சிரிப்புடன் நின்றான்.

பாமா திடுக்கிட்டு நிமிர்ந்து அவனை நோக்கி விட்டுத் தலையைக் குனிந்துகொண்டாள்.

"அரசனுடைய உடைவாள் இரண்டாக ஓர் உறையில் வைக்க முடியாது, சுவாமி! உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும். யுவராஜ்! மன்னிக்கவேண்டும். காதல் கத்தரிக்காய் என்பதெல்லாம் கனவு என்று உதறிவிட்டு, தியாகம், அதுவே சிறந்த மார்க்கமென்று பாமா சமேதராக மணவறையில் அமருங்கள். நான் ஆனந்த நடனம் செய்கின்றேன், அப்பொழுது எங்கும் அமைதி நிலவும். பாமா! நீ ஏன் வருத்தப்படுகிருய்? தியாகர் அதை நினைத்துப் பார். ஒருவித அமைதி ஏற்படும்" என்ருள் புன்சிரிப்புடன் நிமிர்ந்து அவனைப் பார்த்தபடியே கலா.

"கலாவதி! யாவர் மனதும் ஒரே தன்மையாக இருக்குமாயின் சம்பாஷணையே தேவையாயிருக்காது. உன் மன்ம் தியாகத்தை விரும்பலாம். என் மனம் சுதந்திரத்தை விரும்பலாம். இவர் மனம் சமயம்போல் யாவற்றையும் விரும்பலாம். அதனுல் ஒருவர் கொள்கையை மற்றவர் பின்பற்றுவது என்பது சாத்தியமான விஷயமல்ல. என்ன நேர்ந்தாலும் என் உறுதி மாருது. வாழ்வின் சுதந்திரத்தை ஒருகாலும் நான் இழக்கச் சம்மதியேன்" என்ருள் பாமா.

"ஆஹா! அற்புதமான வாக்கியங்கள். பாமா! உன் சுதந்திரம் காப்பாற்றப்படும், கவலையை விடு" என்று சொல்லிவிட்டு, கையை எடுத்து ஓர் அடி தள்ளி நின்றுகொண்டு, "இவையெல்லாம் எப்படியாவது நடக்கட்டும். நடனகலாதேவியாரே, சற்று உலவி விட்டு வரலாமா?" என்ருன்.

"இன்று நேரமாய் விட்டது. இன்னொரு சமயம், வேறு வேலை வைத்துக்கொள்ளாமல் உலவமட்டும் வரலாம். இப்பொழுது புறப்பட வேண்டியதுதான்" என்ருள்.

"ஆஹா உங்கள் சித்தம்" என்ருன் புன்சிரிப்புடன். ஆனுல் அவன் குரலும், கண் பார்வையும் கலாவின் மனதில் ஓர் அதிர்ச்சியைக் கொடுத்தது, என்ருலும் வெளிக்குக் காட்டாமல், சிரித்தவாறு எழுந்தான்.

படியிறங்கி பத்தடி தள்ளி முன்னதாகவே பாலச்சந்திரன் நின்று கொண்டிருந்தான். பாமா முன்னதாக அவனிடம் சென்ருள். அடுத்தாக்க் கலாவதி சென்ருள். பின்னுல் வந்த ரவிவர்மன் தன்பக்கம் வருமாறு கலாவின் பின்னலைப் பிடித்து இழுத்தான் சட்டெனத் திரும்பி வெடுக்கெனப் பின்னலைப் பிடுங்கிக் கொண்டு "உஸ், பேசாமல் வாருங்கள்" என்று நடந்தாள்.

இருவரும் வண்டியில் உட்கார்ந்ததும், நமஸ்காரம் "சென்று வரட்டுமா!" என்று கை குவித்தாள் கலா. பதில் கடுமையாக அவளைப் பார்த்தான். மனம் கலக்கமுற்றுத் தெளியுமுன் வண்டி புறப்பட்டுவிட்டது.

வீட்டிற்கு வந்த பின்பும், ரவிவர்மனின் கடுமையான பார்வையில் கலங்கிய கலாவதியின் மனம் நிம்மதியடையவில்லை. ஒருவிதமாகச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு தனது அறைக்கு வந்தாள். புஸ்தக மஹாலுக்குள் நுழைந்து, எழுத உட்கார்ந்தாள். அரை மணி நேரம் சென்றது. பிறகு எழுத ஓடவில்லை. மறுபடி ரவிவர்மன் படம் இருப்பதும், இருவரும் சந்திப்பதுமான அறைக்கு வந்தாள். படத்தின் முன் நின்று உற்றுக் கவனித்தாள். 'அம்மா, என்ன கம்பீரமான பார்வை. இதற்கும் சாயங்காலப் பார்வைக்கும் எவ்வளவு வித்தியாசம்? எவ்வித லக்ஷியத்தைக் கடைபிடித்தாலென்ன? ஆண் மக்களின் சபல சித்தம் மாத்திரம் மாருது போலும். இன்று ஒரு நாள் அவர் இஷ்டப்படி நடக்கவில்லை. அதனுல் எவ்வளவு தாபம்! கோபம்! இன்று நானும் அவ்விதம் நடந்து கொண்டிருக்கவேண்டாம். விளையாட்டாக நடந்தது வினையாக முடிந்துவிடுமோ? என்னையுமறியாமல் இன்று அவரை எதிர்த்து விளையாடும்படி செய்துவிட்டது. விளையாட்டுக் கோபமாக இருந்தால் நம்மைச் சந்திக்க வருவார். ஒரு சமயம் வராதிருந்துவிட்டால்? அவசரத்தில் சந்திக்கும் நாளைக் குறிப்பிடவில்லை. சுக்கிரவாரம் நான்கு நாள் இருக்கிறது. அவசியம் வர வேண்டும். ஏன், வராதிருந்துவிட்டால்? அம்மா! நான் எப்படிச் சகிப்பேன். சுக்கிரவாரம் மட்டும் வந்துவிட்டால் அவரை எவ்விதமும் சமாதானம் செய்துவிடுவேன். ஆனுல் அதுவரை இந்த மனவேதனையை எப்படிச் சகிப்பது. நாளையே சந்தரிடம் மாஹிஷ்மதிவனம் வரும்படி சொல்லியனுப்புவோம். வராதிருக்கமாட்டார்." என்றெல்லாம் சிந்தனை ஓடிற்று. சற்று நேரம் அங்கு மிங்குமுலாவினுள். மனம் சரியாகவில்லை. கடைசியாக வீணையை வைத்துக்கொண்டு உட்கார்ந்தாள்.

தந்தியை மீட்டினதுமே, மன நிலைமை முகாரி ராகத்தை எழுப்பிற்று. விரல்கள் தந்தியின்மீது வருடி, சோக கீதங்களையே எழுப்பின. சுமார் அரை மணி நேரம் இவ்விதம் பாடின பின்பு, 'எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணி" என்று பாடிக்கொண்டிருக்கும்பொழுது காலடிச் சத்தம் கேட்கவே திரும்பினுள். சுரங்கவாயில் வழியாக ரவிவர்மன் வந்து கொண்டிருந்தான்.

வீணையைக் கீழே வைத்துவிட்டு, அவன் தன் மீது எந்தவிதமான சொல்லம்புகளை எய்யப்போகிருனே என்ற பயத்துடனேயே அவன் பக்கம் சென்ருள். அவன் முகம் சலனமற்றிருந்தது. கோபம் என்ருே, சந்தோஷம் என்ருே அறியமுடியவில்லை. இருந்தாலும் தைரியமாக முன்சென்று அவன் பாதத்தில் தலைவைத்து நமஸ்கரித்து, "என்னை மன்னித்து விடுங்கள்" என்ருள்.

குனிந்து தூக்கி நிறுத்தி "எதற்காக மன்னிப்பு? சாயங்காலம் இந்த யோசனை இருந்தால் இந்த மன்னிப்பு எதற்கு?" என்று அவள் இரு தோள்களையும் பற்றியவாறு கேட்டான்.

"நான் வேண்டுமென்று செய்யவில்லை. விளையாட்டாக நடந்தேன். தாங்களும் விளையாட்டாகவே எண்ணுவீர்கள் என்று நினைத்தேன். ஆனல் கடைசியில் பார்த்த பார்வை எத்தனை ஜன்மமெடுத்தாலும் மறக்கமுடியாது. வந்ததுமுதல் மனவேதனை சகிக்க முடியவில்லை. மறுபடி உங்களை எப்பொழுது சந்திப்பது என்றே தவித்தேன். பவானி மாதா எனக்கு அருள் செய்து தங்களை வரும்படி செய்தாள்" என்ருள்.

பக்கத்திலிருந்த நீண்ட சோபாவில் அவளை உட்கார வைத்து, அவள் மடிமீது தலைவைத்துப்படுத்துக்கொண்டு, "கலா, உன் இதயம் தாபமடைந்தால், என் இதயத்தந்தியை மீட்டிவிடுகிறது. சோகத்தில் மிதந்த உனது கீதம் என்னைப் பரவசப் படுத்திவிட்டது. உன்னிடம் கோபமாகவே வந்தேன். வந்து உன்னுடன் பேசாது உன்னை வதைத்துப் பராமுகமாகவே செல்ல வேண்டுமென்று நினைத்தேன். ஆனல் உன் முகமண்டலத்தை நினைக்கும் பொழுதே கோபங்கொள்ளும் சக்தியே அற்றுவிடுகிறது. இங்கு வந்து உன்னைப் பார்த்ததும் என் மனம் என் வசத்திலில்லை. விளையாட்டு என்ருலும் என் மனதின் தன்மையைக் கொஞ்சம் சிந்திக்க வேண்டாமா? சாயங்காலம் அப்படிச் செய்தது சரியா?" என்று செல்லமாகக் கன்னத்தைக் கிள்ளினன்.

அவன் இரண்டு கைகளையும் தன் இரண்டு கைகளுக்குள் இறுகப் பிடித்துக்கொண்டு "அடக்கம் நன்மை தரும் என்று நீங்கள் தானே சொல்லுவீர்கள். இடம் காலம் சரியாக இல்லை நீங்கள் ......"

"ஏன் நிறுத்துகிருய்? சமயம் தெரியாமல் நடந்துகொண்டீர்கள் என்று முடித்துவிடு. சமயம் சரியானதுதான். நாம் சற்றுப் பிரிந்து சென்ருல் அவர்களும் சற்றே சந்தோஷமாக இருந்திருப்பார்கள்"

"எல்லாம் காலம் வரும்பொழுது நடந்து கொள்ளலாம். இப்பொழுதெல்லாம் அதிகச் சந்திப்பிற்கு இடமளிக்கக்கூடாது. ஆசையை அடக்க அடக்க அதிக இன்பத்தைக் காணலாம் என்பதுதானே தங்கள் உபதேசம்.

"ஒரு விஷயம் என் மனதில் தோன்றுவதைச் சொல்லுகிறேன். குற்றமாகக் கண்டால் மன்னித்துவிடுங்கள்."

"அச்சமில்லாமல் சொல்."

"ஒப்பற்ற லக்ஷியத்தைக் கொண்டவர், சமஸ்தானத்தை ஆளப்போகும் மஹாராஜா, அரிய பெரிய காரியங்களைச் சாதிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டவர், கேவலம் ஒரு தாசிப்பெண்ணின் முத்தத்தை நினைத்துக் கொண்டு பாதி மீட்டிங்கில் ஓடி வருவது என்ருல் அதற்கு யார் பொறுப்பாளி?" என்ருள்.

"வண்டையொத்த இக்கருவிழிகள்" என்று சிரித்த வண்ணம் அவள் கண்களைச் சுட்டிக்காட்டினன்.

"இல்லை, ஆண் இனத்திற்குச் சபலம் இயற்கை. அடக்கும் சக்தியும் குறைவு. அதனுல் மனேபலம் பொறுப்பாளி."

"சரி. அப்படியே இருக்கட்டும். மீட்டிங் என்று உனக்கு யார் சொன்னது?"

"யார் சொல்லுவார்கள்? சாயங்கால கோபத்தால் ஒன்றும் நினைவில்லை போலும். இரவு ஒன்பதரையிலிருந்து பத்தரைவரை இருபத்தைந்து பேர்கள் அடங்கிய ஓர் அவசர மீட்டிங், கதர் திட்டத்தைப்பற்றி ஆலோசனை செய்துவிட்டு, நாளைச் சட்டசபையில் நிறைவேற்றப்படும் என்று சொன்னது யார்? இப்பொழுது மணி பத்தேகால். பாதி மீட்டிங்கில் வந்ததுபற்றிச் சந்தேகமென்ன? இவ் விஷயத்தால் உங்கள் மனம் பலவீனம்தான். எங்கள் மனதிலுள்ள லஜ்ஜையினுல் இப்பலவீனம் வெளிப்படுவதில்லை. எங்கள் அடக்கத்தினுல் உங்களையும் முன்னேக்கிச் செல்லும்படி செய்வது இயற்கையின் தத்துவமாகிறது. இப்பழக்கமே எங்கள் மனதில் நிரந்தர அடிமை மனப்பான்மையை நிலைக்கச் செய்துவிடுகிறது. உங்கள் அபிப்பிராயம்?"

"கலாவதி தேவியாரின் மூளையில்சாமான்ய விஷயம் தோன்றுமா? சாயங்கால முதல் மனம் நிம்மதியில்லை. உன்மீதுள்ள கோபம் முகத்தில்கூட விழிக்க வேண்டாம் என்று நினைத்தேன். ஆனல், உன் மதிமுகம்! அதில் என்ன சக்தியிருக்கிறதோ? மீட்டிங் நடக்கும் பொழுது எங்கும் உன் மதிமுகமே தோன்றலாயிற்று. மனம் ஒரு மாதிரியாகச் சஞ்சலம்

கமலா கோட்னிஸ்
தனது அழகிய மேனியை
லக்ஸ்
டாய்லட்
சோப்பினால்
பாதுகாத்துக்கொள்கிறார்
LUX
LUX TOILET SOAP
சுந்தரவதனி கமலா சொல்வதாவது: "என் மேனி அழகை லக்ஸ் டாய்லட் சோப்பினாலேயே காப்பாற்றிக்கொள்கிறேன். சுத்தமானதும் சௌமியமானதுமான இச்சோப்பின் சுறுசுறுப்பான நுரை சருமத்தை சுத்தம் செய்வதுடன், அப்பழுக்கற்றதாகவும் சோபையுடையதாகவும் வைத்துக் கொள்கிறது. மேனி அழகை முக்கியமாகக் கருதும் ஒவ்வொரு மங்கையும் தவறாமல் லக்ஸ் டாய்லட் சோப் உபயோகிப்பதை ஒரு பழக்கமாகக்கொள்ளவேண்டும்."
லக்ஸ் டாய்லட் சோப்
சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்!
LTS. 176-23 TM

கொண்டது. முக்கியமான விஷயம் முடிவடைந்து விட்டபடியினால், அப்பாவிடம் தலைவலி என்று சொல்லிவிட்டு வந்தேன். என் பலவீனத்தை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனாலும் நியாயமான வழியில்தான் பலவீனத்திற்கு இடமளிப்பேனே தவிர மற்றப்படி என் உறுதியைத் தளரவிடமாட்டேனென்பதை உன்மனம் அறியும்.''

“அது சரி. மணி பத்தேகால்தானே ஆகிறது. சுரங்கவழி எப்படி வந்தீர்கள்?”

“அதுவிஷயம் உன்னிடம் சொல்ல மறந்துவிட்டேன். என் அறையின் மூலையில் நான் குழந்தையாக இருக்கும்பொழுதிலிருந்து ஒரு ஸ்டாண்ட் சுவரில் பதித்தாற்போலிருந்து வருகிறது. பத்து நாள் முன்பு நரசிம்மன் அதன்கீழ் எதையோ எடுக்கப்போய் தலையில் இடித்துக்கொண்டான். அந்த வேகத்தில் ஸ்டாண்ட் நகர்ந்தது. நான் சென்று அதை நேராக வைக்கும் சமயம் சுவரில் கொஞ்சம் பெயர்ந்த இடத்தில், இவ்விடமிருப்பது போன்ற சிறிய குமிழ் தென்பட்டது. என் மனதில் ஒரு சந்தேகம் தோன்றவே கதவைத் தாளிட்டுவிட்டு, குமிழைத் திருகினேன். ஆச்சர்யம், ஒரு வாயிற்படி சிறிதாகத் தென்பட்டது. டார்ச்சின் உதவியுடன் நானும் நரசிம்மனும் அதற்குள் நுழைந்தோம். படிக்கட்டுகளில் இறங்கி, சமதரையில் கொஞ்சதூரம் நடந்தோம். அது முடிந்த இடத்தில் கதவு தென்பட்டது. விசையை அழுத்தினேன். கதவு திறந்ததும் இவ்விடமிருந்து போகும் சுரங்க வழியில் பாதியில் அவ்வாசலிருந்தது. ஆனால் இதுமாதிரி சுத்தமாக இல்லை. மிக மிகப் பழங்காலத்தில் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. முன் கோவில் பின்பக்கம் கொண்டுவிடுவதாக இருந்திருக்க வேண்டும். நானும் நரசிம்மனுமாக, ஒருவருக்கும் தெரியாமல் மின்சார விளக்குப் போட்டிருக்கிறோம். அதனால் எந்தச் சமயமும் நான் இவ்விடம் வரமுடியும்?'' என்றான்.

“மிகவும் சந்தோஷம். நான் தனியாக உங்கள் பள்ளியறைக்கு வரப்போவதில்லை. அதைப்பற்றிய கவலை எனக்கு எதற்கு? அது போகட்டும். கதர் திட்டம்பற்றி என்ன முடிவு செய்தீர்கள்? என்ன பேச்சு நடந்தது?”

“திவான், முழுவதும்அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமென்றார். மஹாராஜா அது சாத்தியமாகாது என்று சொன்னார். நான் கதரும் கட்டவேண்டும் கட்டாயப் படுத்தவும் கூடாதென்றேன். கடைசியில் ஏதோ விவாதம் முடிந்தது. அப்பாவும் நானும் தனியாக யோசித்து நாளை முடிவு செய்யலாம் என்று தீர்மானமாயிற்று. நான் எனது ராணியினிடம் யோசனைக்கு வந்துவிட்டேன். அவ்வளவுதான்”

“மில்லை மூடிவிட்டால் கதர் அபிவிருத்தியடையுமென்றும் ஏழை மக்களுக்கு உணவு கிடைக்குமென்றும் உங்கள் திவான் சாகிப் நம்புகிறாரா? யுத்த அரக்கனால் வதைக்கப்பட்ட ஜனங்கள் ரேஷனில் அரை வயிற்றுக் கஞ்சியும் பாதி உடம்பை மூடும் ஆடையையும் அடைந்து வாடுகிறார்கள். முழு நிர்வாண நிலைமையை அடைய வழிகாட்டுகிறாரா? ஆதிகாலம்போல் இப்பொழுது நடப்பது சாத்தியமாகுமா? அதற்கும் இதற்கும் எவ்வளவு வித்யாசம்? பழையன கழிதலும் புதியன புகுதலும் இயற்கையன்றோ? யந்திர சாதனத்தினால் நன்மையில்லையென்று சொல்ல முடியுமா? அதனால் எத்தனை ஏழைமக்கள் பிழைக்கிறார்கள்? மில் துணியும் உற்பத்தியாக வேண்டும், கதரும் உற்பத்தியாக வேண்டும். காலம் இருக்கும் நிலைமையில் வயிறார உண்ணப் பொருள் தேடுவதில் நேரம் செலுத்த வேண்டியிருக்கிறது. அவன் நூல் நூற்க உட்கார்ந்தால் அவன் குடும்பத்தின் பட்டினி குறையப் பணம் கிடைக்குமா? ஒரு நாளுமில்லை. ஒழிவு நேரங்களில் நூற்பது முழுத் தேவைக்கும் ஒரு மனிதனுக்கு வராது. அதனால் மில் அதன் வேலையைச் செய்ய வேண்டுவதுதான். கதரும் அதன் வேலையைச் செய்ய வேண்டியதுதான். ஓர் சட்டம் ஏற்படுத்தலாம். ‘ஒருவருக்கு ஒரு வருஷத்தில் தேவையான துணியில் நாலில் ஒரு பங்கு கதராக இருக்கவேண்டும்; அவன் உடுத்தினாலும் சரி, உடுத்தாவிட்டாலும் சரி, அவன் கணக்கில் அது இருக்கவேண்டும்’ என்றால் கதர் அபிவிருத்தியாகாமல் போய் விடுமா?''

''ஒருவனிடம் ‘உன் பங்கிற்கு உனது நலத்திற்காக ஒரு படி இலந்தைக்கனியும் அரைப் படி வேப்பம்பழமும் கொடுக்கப்படும். இரண்டிற்கும் நீ விலை கொடுத்து விடு. கனியை என்ன வேண்டுமானாலும் செய்’ என்றால் நிச்சயம் வேப்பங்கனியைச் சாப்பிடாமல், விலை கொடுத்து விடுவான். அப்போது வேப்பங்கனியினால் மனிதன் உடலிற்கு நன்மை ஏற்படுகிறது என்பதையும், அதை யாரும் மனப்பூர்வமாய் உண்ணவேண்டுமென்ற நன்மையும் எவ்விதம் அபிவிருத்தியாகும். அதேபோல்தான் நீ சொல்லும் திட்டம்.''

“அதற்காக நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வருமானமுடைய ஒருவன், அவன் குடும்ப சம்ரக்ஷணை செய்து கொண்டு அதிக விலை கொடுத்துக் கதர் வாங்க முடியுமா? ஒரு நாளைக்குள் ஒரு ரூபாய் வரும்படியுள்ள நூல் நூற்க முடியுமா?”

"சட்டம்? அதற்குக்கட்டுப்பட்டு, கொஞ்ச காலம் கஷ்டப்படுவான், பிறகு அது சர்வ சாதாரணமாக ஆகி, நூல் நூற்கவும் கதர் வாங்கவும் பழக்கமேற்பட்டுவிடும். அப்படியல்லாது, யந்திர சாதனத்தில், சுலபமாகக் கிடைக்கும் மார்க்கம் இருந்தால், கதர் என்ற பெயரே ஒருவருக்கும் பிடிக்காது போய் விடும். உலகத்தை மேற்பார்வையாகப் பார்க்காமல், அங்கங்கே சென்று இடைவெளி விடாமல் நோக்கினால் எத்தனை ஜீவன்கள் வேலையின்றி, உணவின்றி வருந்துவதைக் காணலாம். அவர்களை ஒன்று கூட்டி நூல் நூற்கும்படி செய்தால், முழுவதும் உடுக்க ஆடை கிடைக்காதா?"

"அப்படி நீங்கள் தேடிப்பிடித்து, முயற்சி செய்து வெற்றிபெறக் குறைந்தது ஐம்பது வருஷ காலமாகலாம். அதுவரை மக்கள் இக்கஷ்டத்தை எதிர்த்து நிற்கவேண்டும். அப்படி அவர்கள் கஷ்டப்படும்பொழுது, உங்கள் காங்கிரஸையோ கதர் திட்டத்தையோ மனமுவந்து ஆதரிப்பார்களா? உலகில் அதனால் ஏற்படக்கூடிய நன்மைதான் என்ன? விஞ்ஞானம் நாளுக்கு நாள் மனிதனை எவ்வளவு தூரம் அடிமை கொள்கிறது? எவ்வளவு அதிசயங்களைக் காண்பிக்கின்றது. ஏன் ஆடை விஷயத்தில் அவை உபயோகமாகக்கூடாது. ஆனாலும் உங்களின் நோக்கம், நம்மிடமே கொள்ளை லாபம் அடிக்கும் அன்னிய நாட்டுத் துணி கூடாது என்பதே. தற்சமயம் அன்னியரிடம் நாம் அடிமையல்லவே. இப்பொழுது, நாமே இயந்திர சாதனத்தில், நமது பருத்திப் பஞ்சைக் கொண்டு நாமே நூல் நூற்று, நாமே ஆடையுண்டாக்கி நமது ஜனங்கள் குறைந்த விலையில் நிறைந்த ஆடை உடுத்தச் செய்யலாம்; கொள்வினை முதலியனவும் செய்யலாமல்லவா?"

"நீ சொல்லுவதெல்லாம் சரிதான். ஆனால் உலகத்திற்காக இவைகளை முன்னின்று நடத்துபவர்கள் இவைகளை ஒப்புக்கொள்ள வேண்டாமா?"

"தானே ஒப்புக்கொள்ளும் காலம் வரும். இப்பொழுது ஒவ்வோரிடம் தோன்றும், முதலாளி தொழிலாளி, மதவேறுபாடு ஜாதி வேறுபாடு என்ற பிரச்னையெல்லாம், ஏன் ரேஷனிலிருந்து காட்சிச்சாலைவரை சகல இடத்திலும் கியூ ஏற்பாடுமுதல் நமது பவானி புரத்தில் நான் பார்த்த நாள்களாக அமைதியாக நடந்து வருகின்றன. அவைபோல் இந்தக் கதர் திட்டமும் நமது பவானிபுரத்தில் நியாயமான முறையில் நடைபெறச் செய்ய முடியாதா?"

எழுந்து உட்கார்ந்து கொண்டு "உன் வாக்கியத்திற்கு அக்ஷரத்திற்கு லக்ஷம் பொன் கொடுக்கலாம். ஆனால் உன் அபிப்பிராயப்படி நடப்பதாக இருந்தால் கதர் திட்டம் என்று தனிப்பகுதியாகப் பிரிக்கவேண்டிய அவசியமில்லாமல் போய்விடும்."

"வேண்டவே வேண்டாம்"

"விளையாட்டுப் பருவம் நீங்கினது முதல் என்னிடம் பேசப் பயந்த கலா இப்பொழுது நான் அவளிடம் பேசப் பயப்படும் நிலைமைக்கு வந்துவிட்டாள். அம்மா! இப்பொழுதே இப்படியென்றால், நாளை பட்ட மஹிஷியாக வந்துவிட்டால் என் சுதந்திரமே பறிபோய்விடும். உன் சகவாசம் போதும். பாவம்! பாமா பட்டமஹிஷியாக வந்தால் பக்கத்தில் உட்காருவதுடன் நின்று விடுவாள்" என்று சிரித்தவாறு கூறினான்.

"வேண்டவே வேண்டாம். தாராளமாகச் செய்து கொள்ளுங்கள்! ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். என்றும் உங்களைச் சுதந்திரமில்லாமல் செய்யும் கைங்கரியம் என்னுடையதுதான். பவானிமாதா அந்த வரம் அன்றே தந்துவிட்டாள்" என்று சிரித்தாள்.

"அவ்வித கைங்கர்யத்திற்கு நான் பாத்திரனாகப் பவானி தேவியை வேண்டுகின்றேன். சரி, போன வாரம், கதர் திட்டம் வந்தால்? என்ற தலைப்பில் சங்கத்தின் கூட்டத்தில் ஒரு குறிப்புத்தயாரித்தீர்களல்லவா? அது எவ்விடமிருக்கிறது?"

"அசல் இவ்விடமிருக்கிறது. நகல் சங்க காரியாலயத்திலிருக்கிறது. ஏன்?"

"அதை அப்பாவிடம் காண்பிக்கவேண்டும். கொடு"

"போகும்பொழுது தருகிறேன்"

"ராணியாரே, இப்பொழுதாவது புரிந்ததா? முத்தத்தை நாடி ஓடிவரவில்லை, முக்கிய விஷயத்தை நாடி என்று. அந்த நாட்களில், அப்பாவுடன் அரசாங்க விஷயங்களைக் கவனித்து முக்கியமான விஷயங்களில் ஈடுபடும் சமயம் ஏற்படும் மனத்தின் தளர்ச்சி, டென்னிஸ் விளையாடுவதிலும் நண்பர்களுடன் தமாஷாகச் செல்வதிலும் பேசுவதிலும் உற்சாகமுற்றுப்புதிய உணர்ச்சி பெற்று வந்தது. உன்னைச் சந்திக்கத் தொடங்கின பிறகு, யுத்த சமயத்திலும் அதற்குப் பின்னும், ஏற்பட்ட விவகாரங்களை ஒழுங்கு செய்ய விஷயங்களை அப்பாவுடன் ஆலோசனை செய்து, பொது மக்களைத் திருப்திகரமாக நடத்தப் பாடுபட்டு அலுத்த மனம்,

சற்று உன்னுடன் தமாஷாகப்பேசிக்கொண்டிருந்தால், புதிய உணர்ச்சியும் மன உற்சாகமும் உண்டாகின்றன. அதுதான் காரணம். சரி இவை போகட்டும். வீணையை எடு. நான் வாசிக்கிறேன் நீ பாடு. ஆக்ஷேபனை?" என்றான்.

"தங்களுடன் பாட ஆக்ஷேபனையா" என்று எழுந்து சென்று, வீணையை எடுத்து வந்து அவன் கையில் கொடுத்தாள்.

"எதையோ நினைத்து ஓடி வந்ததாகச் சொன்னாய். ஆனால் நாடி வந்தது ஒன்றுமில்லையே" என்றான் வீணையை மீட்டியவாறு.

"விடையில் கிடைக்காது போகாது" என்று அவன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு, அவன் எழுப்பும் ஸ்வரத்திற்குரிய ராகத்தைச் சுருதியுடன் சேர்ந்து சிருங்கார ரச சாஹித்யமாகப் பாடலானாள்.

பாடிக்கொண்டேயிருந்த ஒன்றரை மணி அவகாசமும் இருவர் மனமும் வேறு சிந்தனையின்றிக் கான லோகத்தில் சஞ்சரித்தன. பாடிக்கொண்டே யிருக்கையில் ஒரு போக்காகக் கடிகாரத்தை நோக்கினாள். அவ்வளவே பாதியில் பாட்டை நிறுத்திக்கொண்டாள்.

"ஏன்" என்றான்.

"மணி இரண்டு"

வீணையைக் கீழே வைத்துவிட்டு "தியாகப் பிரும்மத்திற்கு முக்தி கொடுத்த கானத்தில் நாம் இரண்டு மணி அவகாசம் மெய்மறந்ததில் வியப்பென்ன?"

"அகாலமாகிவிட்டது. என்ன சாப்பிட முடியும்? ஷர்பத்தாவது சாப்பிடுகிறீர்களா?"

"உம் கொண்டுவா?"

ஷர்பத் கப்பைக் கையில் வாங்கி அவள் வாயருகில் கொண்டுபோனான்.

"இது என்ன வேடிக்கை? நீங்கள் முதலில் அருந்துங்கள்"

"இவ்வளவு நேரம் பாடியது நீ. ஷர்பத் அருந்துவது நானா? முடியாது. இத்துடன் என்னை அனுப்பிவிடலாமென்றா?"

"இல்லை. அப்படிச்செய்ய என் மனம் இடந்தருமா? முதலில் ஒருவாயாவது தாங்கள் அருந்தவேண்டும்"

"சரி" என்று தான் கொஞ்சம் அருந்திவிட்டு, அவள் வாயருகில் பிடித்தான்.

"அப்பா! தங்கள் கைபட்ட விசேஷம் அமிர்தபானமாக இருக்கிறது."

"சரி, நான் உன் மடிமீது தலைவைத்துப் படுத்தேனல்லவா? இப்பொழுது என் மடிமீது......"

"தெரியும் உங்கள் தந்திரம். இப்படி மாறி மாறிப் பரிமாறிக் கொண்டால் பொழுது புலர்ந்துவிடும்."

"பொழுதைப்பற்றி அக்கரையில்லை. ஒரு முக்கியமான விஷயம் சொல்லுகிறேன் கேள்" என்று அவளைப் பக்கத்தில் உட்கார வைத்து......"

"இதுதானா விஷயம்?"

"பொறு சொல்லுகிறேன். நமது சுற்றுப் பிரயாணம் தொடங்க இன்னும் பதினைந்தே நாட்கள் தான் இருக்கின்றன. ஆனால் பிரயாணத்தில் மாறுதல்?"

"என்ன நீங்கள் வரப்போவதில்லையா?"

"அவர்களை நம்பி உன்னை அனுப்பிவிடுவேனா? அதுவல்ல; வடக்கிந்தியா என்பதைப் பின்னால் தள்ளி வைக்கப்பட்டது. அயல்நாடுகளில் தான் அதிகம் வற்புறுத்துகிறார்களாம். எப்பொழுதுமே இந்த ராஜகுல வழக்கம், பட்டத்திற்கு வருமுன், அயல்நாடு முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்து ஆங்காங்குள்ள நல்ல விஷயங்களைப் பார்த்து வருவது என்பது. அப்பா அப்படிச் செய்த பிரயாணத்தின் பலன்தான் இன்று கலையில் சிறந்து விளங்குவதும், உலக முழுவதும், பஞ்சப் பிணியும், வகுப்புக் கலவரமும் தலைதூக்கி நிற்க, மக்கள் யாவரும் அமைதியாக அரை வயிறு உணவாவது பவானிபுரத்தில் சாப்பிட்டு வருவது. அந்த வழக்கப்படி என் பிரயாணமும், நடனகலா சக்ரவர்த்தினியின் நாட்டியம் பார்க்க ஆவலா இருக்கும் நாடுகளைத் திருப்தி செய்விக்க நடன கலாவதியின் பிரயாணமும் ஒன்றாக நிகழ்கின்றன. எது எப்படியானாலும் நம் இருவர் பிரயாணத்தினாலும் நன்மை அதிகம் நமது சமஸ்தானத்திற்கு, ஏன் நமது நாட்டிற்கே"

"மிகவும் சந்தோஷம். ஈன ஜாதியில் பிறந்த என்னால் நாட்டிற்கே நன்மை என்றால், அதைவிடப் பாக்கியம்? அந்தப் பாக்கியமளித்த தங்களை என்னவென்று போற்றுவது? என்ன கைம்மாறு அளிப்பது?" என்று கண்களை மூடியவண்ணம் நீண்ட மூச்சு விட்டாள்.

"கைம்மாறு நான் விரும்பும்பொழுதெல்லாம் முத்து மாரி பொழிவது" என்றான் ஆர்வத்துடன்.........

"ஒரு விண்ணப்பம்" என்றாள்.

"என்ன ?"

"இந்த விளையாட்டெல்லாம் இந்த அறையுடன் நிற்கவேண்டும். பவானிபுரம் எல்லை தாண்டினதிலிருந்து மறுபடி எல்லைக்குள் வருமளவும், நாம் அன்னியர்போல நடந்து கொள்ளவேண்டும் என்பது. இது இருவர்க்கும் நன்மை."

"அதை நீ சொல்லவும் வேண்டுமா? கவலைப்படாதே. நான் சென்று வரட்டுமா?" என்று எழுந்திருந்தான்.

சுரங்க வாயில் படியில் கால்வைத்த பிறகும்கூட கலாவதியைப் பிரிக்காமல், "கலா! இப்படி நாம் பிரியும் காலத்தைக் குறுகச் செய்யப் பவானிதேவி அருள் செய்யவேண்டும்" என்றான்.

"இவ்வளவு அருள் செய்தவள் அதையும் செய்யமாட்டாளா? இன்று ஏன் இவ்விதம்? எப்பொழுதும்போல் மலர்ந்த முகத்துடன் ......"

"அப்படியே சென்றுவரவா" என்று முகவாயைப் பிடித்தவாறு கேட்டுவிட்டு, அவளைப் பார்த்தபடியே விசையைத் திருப்பினான். பலவந்தமாகப் பிரிப்பதுபோல் வாயில் சட்டென மூடிக்கொண்டது.

சற்று நேரம் சுரங்க வாயிலையே உற்று நோக்கிய வண்ணம் நின்றுவிட்டு நீண்ட மூச்சுடன் திரும்பினாள்.

"மனமொத்த காதலர் என்றால் யாவரும் ஓர் தளை ஏற்படுமுன் இப்படியும் நடந்து கொள்வார்களா? அந்த நிலைமைதான் இதுவா? அல்லது தாசிப்பெண் என்ற குலத்தின் மீது ஏற்பட்ட ஓர்வித அடக்கமற்ற மனப்பான்மையா? பவானிமாதா நீதான் துணை செய்ய வேண்டும். இருந்தாலும் சமயத்தில் இந்த விஷயத்திற்காகத் தந்திரமாக ஓர் உபாயம் தேடவேண்டும்" என்று சொல்லியவாறு, விளக்கை அணைத்து விட்டுப் படுக்கையில் சாய்ந்தாள்.

15

அன்று மாதாந்தர சுக்கிரவாரம். காலை வேளை. கலாவதி எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்துவிட்டு, தலையைக் கோதிய வண்ணம் தோட்டத்தில் மாமரத்தில் தொங்கும் ஊஞ்சலில் உட்கார்ந்துகொண்டு, அவளால் நடனம் பழக்கப்பட்ட, வளர்க்கப்பட்ட "யாமினி" என்னும் மயில் அவள் எதிரில் தோகை விரித்து ஆடுவதற்குச் சரியாகப் பாட்டுப் பாடிக்கொண்டிருந்தாள். சுமார் எட்டரை மணிதானிருக்கும். மந்த மாருதமும், மேகத்தினுள் மறைந்த ஆதவனின் கிளர்ச்சிபொருந்திய வெய்யிலும், மனதிற்கு ரம்மியமாக இருந்தன. "கவலையைத் தீர்ப்பது நாட்டியக் கலையே" என்ற பாடலும், "தாம்தினனா" என்ற தில்லானாவும் பாடி, தன் மயில் அசைந்தாடுவதைக்கண்டு மனம் பூரித்து, தன்னையே மறந்து பாடினாள்.

"கலாவதி! 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்' என்பதுபோல் கலாவின் வீட்டுக் கலாபமும் நன்றாக நடனம் ஆடுகிறதே" என்று கேட்டவாறு மனோன்மணி அவ்விடம் வந்தாள்.

"மனோன்மணியா, வா!" என்று சொல்லிவிட்டு, அவள் கையைப் பற்றி ஊஞ்சலில் தன்பக்கத்தில் உட்காரவைத்துவிட்டு, "என்ன விஷயமோ இவ்வளவு காலையில் என்னைத் தேடி வந்தது" என்றாள்.

"சுற்றுப் பிரயாணம் செய்த மூன்று மாத அலுப்பு ஒரு மாதமாகியும் தீரவில்லையா?" என்று பார்க்கவந்தேன்.

"ஏன் அவ்விதம்?"

"சங்கத்தைப்பற்றிய விஷயத்தில் சம்பந்தமே யில்லாதவள் போலிருக்கிறாயே என்ன காரணம்?"

"நான் புறப்படுமுன் உன்னிடம் ஒப்படைத்த விஷயம் இனி என்றுமே உன் பொறுப்பில் இருப்பது நலம் என்றே தோன்றினது உன் அருமையான பணியால், அவ்வளவுதான்."

"என்ன இருந்தாலும் நீ இருப்பதுபோல் ஆகாது. உனக்கு அவகாசமில்லாவிடினும் ஏதாவது ஒரு சமயமாவது வரவேண்டும்."

"அதில் சந்தேகமே வேண்டாம்."

"வந்தனம், சங்க விஷய மிருக்கட்டும். சொந்த விஷயம் பேச அவகாசம்தானா?"

"தாராளமாக."

"மூன்று மாத காலம் மேல்நாடு சுற்றினதில் என்ன அருமையான நடனங்கள் கற்று வந்தாய்?"

"அருமையான விஷயங்கள் கற்று வந்தேன். நடனங்கள் புதிதாக ஒன்றும் காணப்படவில்லை. ஆங்கில ஆசிரியர் மஹா நாட்டிற்கு நமக்குக் கற்பித்ததைவிட ஒன்றும் அதிகமில்லை. ஆனாலும் அமெரிக்க ருஷ்யப் பிரதேசத்தில் ஓர் பெண் ஒருவித நடனம்

ஆடினுள் தனது ஜோடியுடன். அப்பப்பா, நினைக்கவே அஞ்சும் இந்தியப்பெண்மணியின் நெஞ்சம். நெளிவு பாவம் எல்லாம் மிக அற்புதம். ஆனல் முறை என் மனதிற்கு ஒப்பவில்லை. ஆனலும் அப் பெண்மணிகள் மூன்று நாளைக்குள் நமது நடனத்தைக் கற்றுக் கொண்டுவிட்டார்கள். பதிலாக நான் அந்த நடனத்தைக் கற்றுக்கொள்ளும்படி வேண்டினுள். அதைமட்டும் பயின்றேன்."

"எப்பொழுது அதை ஆடப்போகிருய்?"

"அதைச் சபையில் ஆடவா? முகம் பார்க்கும் கண்ணுடியாலான அறை வீட்டிற்குள் ஜோடிகளாக நின்று ஆடி, நாமே பிரதிபிம்பத்தைப் பார்த்து மகிழலாம் அவ்வளவே."

"அப்படியானல் ஒரு நாள்வருகிறேன். சரி, இவை யெல்லாமிருக்கட்டும். ஓர் விஷயம் உன்னைக் கேட்கலாமா?"

"தயக்கமில்லாமல் கேள்."

"யாவருக்கும் நல்வழிகாட்டி நல்வாழ்வு பெறச் செய்தாய். நீயும் ஓர் துணை தேடிக் கொள்ள வேண்டாமா? உனக்கு உற்ற துணை யுவராஜ் ஒருவர்தான், உன்னைக் கண்ணை இமை காப்பதுபோல் காத்துவருகிருர். சுற்றுப் பிரயாணத்தில்கூட உன்னைத் தனியேவிட மனமில்லை. அதை யெல்லாம் பார்க்கும் உலகம் ஒரு மாதிரியாக நினைக்கலாம். உலகம் நினைக்கும் விதம் நீ ஏற்க மாட்டாய் என்பது உள்ளங்கை நெல்லிக் கனி. ஆனல் பாமாதான் உரியவள். இவை யெல்லாம் அறிந்த நீ வேறு ஏதாவது ஏற்பாடு செய்திருப்பாய் என்பது என் அபிப்பிராயம். ஒரு சமயம் சுற்றுப் பிரயாணத்தில் யாராகிலும் .... எங்கள் யாவருக்கும் மிகவும் சந்தோஷமாக இருக்கும்."

"மனேன்மணி! பெண் என்றும் தனியாக வாழ முடியாதா?"

"முடியாதென்பதுதான் எனது அபிப்பிராயம்."

"ஏன் முடியாது? எதற்கும் மனந்தானே காரணம். சூழ்நிலையும் ஒரு விதத்தில் காரணமாகலாம். நாம் அதற்கு ஏற்றவாறு நடக்க முடியாதா?"

"கலா! மனம் பேய். அதை அடக்கி ஆள்வது மிகவும் கஷ்டம். ஆனல் உன் போன்று சகல விதத்திலும் மேதையாக இருந்தால் ஒரு சமயம் எப்படியோ? என்ற பிரச்னை தான்."

"என் மனமும் சூழ்நிலையும் ஒற்றுமையாய் அமைந்து விட்டபடியினல், என் வாழ்வு தனிமையில் இன்பம் பெறும். அன்று மஹாராஜா சொல்லியபடி என் வாழ்க்கை நாட்டியத்திற்கே அர்ப்பணம். யுவராஜாவைப் பற்றிச் சிந்தனை செய்யக்கூட அருகதையுண்டா? ஆனல் அவர் ஆதரவும் துணை வலியும் என்றும் எனக்கு உண்டு. அதனல் நீ பயப்படுகிறபடி என் வாழ்க்கை சீர் குலையாது; கவலைப்படாதே," என்ருள் புன்சிரிப்புடன்."

"கலாவதி! ஏதோ ஸ்வாதந்திரியத்தில், ஆவலினல் கேட்டுவிட்டேன், குற்றமாகக் கொள்ளாதே மன்னித்துவிடு" என்ருள்.

"மன்னிப்பதற்கு ஒன்றுமில்லை. நீ சொல்லுகிறபடி மனப்பேய் மட்டுமல்ல. மதயானை போல் கட்டுக்கடங்காமலே சஞ்சரிக்கும் புத்தி யென்னும் அங்குசத்தைச் சரியான இடம் பார்த்துப்பிரயோகம் செய்தால் நிச்சயம் வெற்றி கிடைக்குமென்பது என் நம்பிக்கை" என்று சொல்லி முடிக்குமுன், ராஜ சேவகன் வந்திருப்பதாக, வேலைக்காரி வந்து சொல்லவே இருவரும் எழுந்து உள்ளே சென்ருர்கள்.

மஹாராஜா அனுப்பியதாக ஓர் கவரைக் கலாவின் கையில் கொடுத்து, கையெழுத்து வாங்கிச்சென்ருன்.

செல்வி கலாவதிக்கு அநேக ஆசிகள்.

முக்கியமாக நமக்கு வேண்டிய.............. ஊர் ஜமீந்தார் நேற்று நம் விருந்தினராக வந்திருக்கிருர். அவர் விரும்பியதற்தாகவும், உன் நடனம் பார்த்து வெகு நாளாகிவிட்டபடியினல், நமது குடிமக்கள், சுற்றுப்புற வாசிகள் யாவரும் கொஞ்ச நாட்களாக என்னை வற்புறுத்திக் கேட்டுக் கொண்டதற்காகவும் நமது மைதானத்தில் உனது நடனம் இன்று சாயங்காலம் நடப்பதாக ஏற்பாடு செய்திருக்கின்றேன். சாயங்காலம் ஆறு மணிக்கு நீ மேடையில் இருக்கவேண்டும். ரவிவர்மன் உன்னை அழைத்துச் செல்ல வருவான். நீ மறுக்கமாட்டாய் என்ற நம்பிக்கையுடன்தான் முன்னல் கேட்காமல் ஏற்பாடு செய்துவிட்டேன். அதற்காக என்மீது வருத்தம் கொள்ளமாட்டாயென்று நம்புகிறேன்.

இப்படிக்கு,
உன் அன்புமிக்க தந்தை,
சிவ சர்மா.

என்ற கடிதம் எதிர்பாராத விஷயமாதலால் சற்று நேரம் கடிதத்தைப் பார்த்தபடியே நின்ருள்.

"என்ன கடிதம் கலாவதி? ஒரு மாதிரியாக இருக்கிருயே" என்ருள் மனேன்மணி



செம்பொன் நிறம்கொண்ட காரட் ஹல்வா டால்டாவில் தயாரித்தால் உயர்தரமாயிருக்கும்!

½ பவுண்டு காரடடை சீவி நேர்த்தியாக துருவவும். 2 கப் பால் கொதிக்கவைத்து அதில் காரட்டைப்போடவும். சிறு சூட்டில் பால் பூராவும் சிட்டத்தட்ட வற்றும் வரை கிண்டிக்கொண்டிருக்கவும். 1½ கப் சர்க்கரை, துண்டாக்கிய பதாம் பிஸ்தா பருப்புகள், கிஸ்மிஸ் இவைகளைப்போடவும். கலவை சுமாராக கெட்டியானதும் ½ கப் டால்டாவை சூடாக்கி சிறுகச்சிறுக விட்டு ஹல்வா செம்பொன் நிறமாவது வரை வறுக்கவும். ஒரு சிட்டிகை பொடித்த ஏலக்காய், ஜலத்தில் கரைத்த ¼ தேக்கரண்டி குங்குமப்பூ இவைகளை சேர்த்துக்கொள்ளவும். டால்டா தனியாக விலகும்வரை ஹல்வா அடுப்பிலிருக்கவேண்டும். சூடாகவோ, ஆறினபிறகோ பரிமாறலாம்.

"ஆரோக்கியத்தைக் காப்பாற்றும்" உணவுகள் எவை ?

நோய்களை எதிர்க்கும் உணவுகளே அவை. இது சம்பந்தமாக ரசமான விவரங்களுக்கு எங்களுக்கு எழுதுங்கள்.

இலவசமான ஆலோசனைகளுக்கு இன்றே — அல்லது என்று வேண்டுமானாலும் — எழுதுங்கள் !

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353,
பம்பாய் 1

HVM 77-28 TM

"இதைப் பார்" என்று கடிதத்தை அவள் கையில் கொடுத்துவிட்டு, "முன்னால் தகவல் இல்லாததினால் ஓர் மாதிரியாகத் தோன்றினது, அவ்வளவே" என்றாள்.

"ஆச்சரியம், மூன்று நாட்களாக இது பற்றி ஊர் முழுவதும் ஒரே பரபரப்பாக இருக்கிறதே. உனக்குத் தெரியாதா?" என்றாள்.

"அதனாலென்ன? மஹாராஜாவிற்கு எவ்வளவு நம்பிக்கை என்னிடம். எவ்வளவு அன்பு! என்று தோன்றினது. அவ்வளவே."

"காரணம் உனது குணம். சரி, நான் வரட்டுமா. அடுத்த கூட்டத்திற்கு வருகிறாயா?"

"அவசியம் வருகிறேன்."

சாயங்காலம் நாலு மணி முதல் தன்னை அலங்கரித்துக் கொள்ளத் தொடங்கினாள். ஓரிழைபொன் ஜரிகையும், ஓரிழை உயர்தரப் பட்டுமாக நெய்த ஆடையை நடனத்திற்குரிய விதம் இழுத்துக்கட்டினாள். நாட்டிய சக்கரவர்த்தினி என்ற பட்டத்துடன், மஹாராஜா பரிசளித்த அழகிய, வேலைப்பாடமைந்த வைரக் கிரீடத்தைத் தலையில் வைத்துக் கொண்டு, சரிபார்க்க நிலைக்கண்ணாடியின் முன் போய் நின்றாள். சுடர் விட்டுப் பிரகாசிக்கும் வைர ஆபரணங்களும், அஞ்சனம் தீட்டிய கண்களும், பவழம் போன்ற உதடும் சர்வாலங்கார பூஷிதையான அவளின் தோற்றமானது, அவளுக்கே ஆச்சரியத்தை அளித்தது. மனதில் குதூகலம் எழுந்தது. சற்று நேரம் தன் உருவத்தையே உற்று நோக்கிய அவள் மனதில் ஓர் பெருமிதம் தோன்றலாயிற்று.

"கிரீடமணிந்த எனது தோற்றம் மஹாராணி ஸ்தானத்திற்கு நான் தகுதியற்றவள் என்று சொல்ல முடியுமா? அவருக்குத் தகுந்த மருமகளாகக் கூடிய அம்சம் என்னிடத்தில் இல்லையென்று, மஹாராஜா என்னைப் பார்த்துச் சொல்ல முடியுமா?" என்று வாய்விட்டுச் சொல்லிவிட்டு, கண்ணாடியில் பார்த்தபடியே சற்று நேரம் நின்றாள். பிறகு ஒரு நீண்ட மூச்சு விட்டுவிட்டு, "எனது உன்னத வாழ்விற்குத் தடையாக நிற்பது எனது ரூபமா? இல்லை. குலம்! தாசி குலம்! ஐயோ! பவானிதேவி என்னை ஒரு குடியானவனின் வயிற்றில் ரூபவதியாக பிறப்பித்திருந்தாயானால் எனது ரூபத்தினால் குலம் தடையாகாமல், மஹாராணி ஆகிவிடுவேனே. குரூபியாகவும், மூடமாகவும் ஒரு சமஸ்தானாதிபதியின் வயிற்றில் பிறக்கச் செய்திருந்தால்? தடையில்லாமல் மஹாராணி பதவி என்னிடம் வலுவில் அடைக்கலமடையும்.

"நான் எம், ஏ. பட்டதாரியாகப் போகிறேன். நடனக் கலையில் உலகத்திலேயே முதல் பரிசு பெற்றேன். ரூபவதி என்பதில் எனக்கிணையாருமில்லை, ரசிகரும், அழகில் மன்மதனை தோற்கடிப்பவரும், ஆழ்ந்த புத்தி கூர்மையுடையவரும், எத்துறையிலும் சலிக்காத உழைப்பையுடையவருமான, யுவராஜாவின் காதலைப் பெற்றேன். ஆனால் காதல் நிறைவேற இவையொன்றும் உதவிபுரிய முடியவில்லை. தாசி என்ற ஒரே சொல் யாவற்றையும் மறைக்க செய்துவிடுகிறதே." என்று எண்ணும்பொழுது அதுவரை பிரகாசித்த ஆனந்த ஜோதி மங்கி, கவலையிருள் படர்ந்தது. "குலத்தில் உயர்த்திச் சொல்லும் பிரம்மகுலம் என் தந்தை. கணவனது நன்மைக்காகத் தனது வாழ்க்கையை ஜீவனற்றதாகச் செய்துகொண்ட, உத்தமி, தியாகி என் தாயார். அப்படியிருந்தும் தாசி என்னும் பதத்திலிருந்து என்னைப் பிரிக்கவில்லையே" என்ற நினைப்பில் கலங்கி நிற்கும் சமயம் மோட்டாரின் ஹாரன் சப்தம் கேட்கவே யுவராஜாவை வரவேற்கத் திரும்பினாள்.

"ஹலோ, குட் ஈவினிங் கலா" என்று புன்சிரிப்புத் தவழும் வதனத்துடன் வரும் ரவிவர்மனைக் கண்டதும், அவள் கவலை இருந்த இடம் தெரியாமல் மறைந்தது. "அம்மா, என்ன வசீகர சக்தி! இப்பாக்கியம் நமக்குக் கிடைத்திருக்கும்பொழுது மற்றவைகளைப்பற்றிக் கவலையேன்?" என்ற நிம்மதியுடன், 'நமஸ்காரம் யுவராஜ்!" என்று இரு கைகளையும் குவித்தாள்.

"யௌவனத்தின் சோபை ஒவ்வொரு அங்கத்திலும் பரிணமிக்க, திவ்யாலங்கார பூஷிதையாக நிற்கும் வனிதா ரத்தினத்தைக் கண்ட அவன் மனம் ஆனந்தத்தின் எல்லையைக் கடந்துவிட்டது. அருகில் சென்று அவள் இரு கைகளையும் தன் இரு கைகளால் பற்றிக்கொண்டு, "ஆஹா! ஸௌந்தர்யத்திலிருந்து ஸௌந்தர்யத்தை எடுத்துச் சிருஷ்டித்தான் போலும். நாளுக்குநாள் உன் அழகு பிரகாசிப்பதைக் கண்டு அதை எவ்விதம் சொல்லுவதென்று எனக்குத் தோன்றவில்லை. இன்று உன் தோற்றத்தை என் மனத்திரையில் பதித்துவிட்டேன். நாளை துணித் திரையில் புகுத்திவிடப்போகிறேன்" என்றான்.

"இன்று உங்கள் அரசாங்க உடையும் அலங்காரமும் உலகத்தையே அடிமை கொண்டுவிடும் என்பதில் ஐயமில்லை. இப்படியே உங்களைப் பார்த்த வண்ணம் எவ்வளவு யுகம் நின்றாலும் அலுப்புத் தட்டாதே. பசிதாகமே தோன்றாதே. இத்தோற்றம் நாளையே துணித்திரையில்" என்றாள்.

"திரையில் புகுத்துவது பிறகு, இப்போது கண்ணாடியில் புகுத்திப் பார்ப்போம்" என்று கண்ணாடிமுன் சென்று பக்கம் பக்கமாக அவள் தோளின்மீது தன் கையை வைத்த படி நின்றான். சற்று நேரம் கண்ணாடிக்கண் களும், உண்மைக் கண்களும் கலந்து உற வாடின. "கலா நமது ஜோடி எப்படி?" என் றான் பெருமிதத்துடன்.

"அதை நாம் சொல்லிப் பிரயோஜனம்?"

"நாம் சொல்வதா? இந்த நிலைமையில் யார் பார்த்தாலும் மறுக்க முடியுமா?"

"முடியாதுதான். ஆனால் பவானிமாதா என்ன எண்ணுகிறாளோ?"

"நன்மையைத் தான் எண்ணுவாள்."

"அப்படியே ஆகட்டும். புறப்பட நேர மாகவில்லையா?" என்றாள்.

"ஆகட்டும் பரவாயில்லை. அரங்கமேடை யில் தோன்றுவதில் உனக்கு அதிக உற் சாகம். அதிலும் இன்று உன்மனோ நிலைமை நோக்குமிடத்து ஆட்டம் அதியற்புதமாகவே அமையுமென்பது நிச்சயம். ஆனால்........."

"ஆனாலென்ன விஷயத்தை வெளியிட்டுச் சொல்லுங்கள். சட்டென உங்கள் முகம் மாறியதால் என்மனம் என்னவோ செய்கி றது." என்று அவன் இரு தோள்களையும் பற்றியவாறு கேட்டாள்.

"ஒன்றுமில்லை. இன்று யாருக்காக உனது நாட்டியமென்று அப்பா ஏற்படுத்தினரோ, அந்த ஜமீந்தார் சீர்திருத்தவாதி" என்று வாய்ப்பறை அடிப்பவன். ஏதோ சற்றுக் கலையுள்ளம் படைத்தவன் என்றே சொல் லலாம். ஆனால் காமாதுரன். பெண் ஆணின் ஆவலைத் தணிக்கும் கருவி என்ற மனப் பான்மையுடையவன். வேஷக்காரன். அவன் முன்பாக உன் நடனம் ஏற்பாடு செய்தது தான் என்மனதிற்குப் பிடிக்கவில்லை, அப்பா என்னைக்கலந்து கொள்ளாமலே ஏற்பாடு செய்துவிட்டார். இன்று மறுத்துச்சொல் வது சரியாகாது. காலைமுதல் இதே வேதனை தான். அதிலும் இப்பொழுதிருக்கும் உனது தோற்றம், மனதில் எந்தவிதமான கிளர்ச் சியை ஏற்படுத்துமோ என்று என் மனம் அஞ்சுகின்றது.

"ஏன்:? இப்பொழுது சௌகரியமில்லை, தேகநிலை கெட்டிருக்கிறது என்று சொல்லிய னுப்பிவிடுங்கள்."

"சே, மனச் சாக்ஷிக்கு விரோதமில்லாமல் நடக்க வேண்டும். மேலும் நமது குடிமக்கள், எவ்விடமிருந்தெல்லாமோ உனது நாட்டி யத்தைக் காணவேண்டுமென்று ஆவலுடன் வந்திருக்கிறார்கள். அவர்களைத் திருப்தி செய் விப்பது நமது கடமையாகும்."

"பின் யோசிப்பதால் பிரயோஜனம்? வாருங்கள் போகலாம்"

"அம்மா! என்ன ஆர்வம்! உனக்குச்சதஸில் ஆடுவதில் அதிக விருப்பம். தன்னை மறந்து விடுகிறாய்"

"நீங்கள் சொல்வது முக்காலும் உண்மை; என்னைச் சதா வருத்தி வரும் கவலையானது உங்கள் முகத்தை காணும்போதும், உங்களு டன் பேசும்பொழுதும், சதஸில் ஆடும் பொழுதும், இருந்த இடந்தெரியாமல் மறைந்து விடுகிறது. அந்த ஆனந்தம் சொல் லில் அடங்காது. ஐதிஸ்வரத்திற்கு ஓர் அடி தாளமாக வைத்ததுமே, என் மனம் என் வசத்திலில்லாது பரவசமடைந்து விடுகிறது. அப்பொழுது பாடும் பாவத்திலேயே என் மனம்லயித்துவிடுகிறது. கடைசியில் ஆட்டம் முடிந்து திரை விழும்பொழுதுதான், நான் நிற்குமிடம் என் நிலைமை எல்லாம் என் நினைவில் தோன்றுகிறது. அதனால் நான் ஆட விரும்புவதில்ஆச்சரியமில்லை யல்லவா?"

"உம், இதெல்லாம் கொஞ்சகாலம்தானே. பட்டமஹிஷி பொது ஸ்தலங்களில் மேடை யேறி ஆடமுடியுமா? நமது கலைவளர்ச்சியை உத்தேசித்தும் கலையிலே முதல் ஸ்தானம் பெற்ற பவானிபுரத்தின் மதிப்பிற்காகவும், நவராத்திரியில் பவானிதேவி சன்னிதானத் தில் பொது மக்கள் காண ஆடுவது என்ற வழக்கம் ஏற்படுத்தத் தீர்மானிக்கப்பட்டி ருக்கிறது. இவ்விதி இவ்வருஷமே பாமா விற்கு ஏற்படுத்தியாய்விட்டது. எவ்வளவு கலைப் பண்பாடு என்றாலும் ஸ்தானத்திற்கு மதிப்புக்கொடுத்துத்தானாகவேண்டும். அப் பொழுது உன் ஆனந்தம்?"

"ஆனந்தத்திற்கு என்ன குறைவு? பட்ட மஹிஷி என்ற பாக்யம் கிடைத்து விட்டால் சதா என்னை அரிக்கும் கவலை பறந்து விடும்.

"பிறகு கலைத் தெய்வமாகிய தங்கள் முன் ஆடுவதில் என் ஆனந்தம் சொல்லில் அடங் குமா?"

"என்? முன்னாகவும் ஆடக்கூடாது என்றால்?" என்றான் புன்சிரிப்புடன்.

"கலாரசிகர், கலைத் தெய்வம் மனதில் அவ்விதக் கட்டளை பிறக்காது"

"பிறந்து விட்டால் என்ன செய்வாய்? கலை பெரிதா? காதல் பெரிதா?"

"இரண்டும் பெரிதுதான்."

"இரண்டும் பெறமுடியாது. ஒன்றிற்காக ஒன்றைத்தியாகம் செய்யவேண்டி வந்தால்?"

"பிரபுவே! அப்படி நேர்ந்தால், கலைதான் பெரிதென்று மனம் விரும்பினாலும் எனது கொள்கையின்படி, கலையைக் குழிதோண்டி மூடிப் புதைத்துவிட்டு, யுவராஜாவும் பிரும்ம சிருஷ்டியில் வந்த ஆண்பிள்ளையினம்தான், தனிப்பட்ட சிருஷ்டியில்லை. பெண்கள் சுதந்திரம் வாயளவில்தான். வழி வழியாக வந்த, பெண்கள்மனதில் தாங்கள் ஆண் பிள்ளைகளுக்கு அடங்க வேண்டியவர்களே, அப்படியில்லாவிடில் வாழ்க்கையின் அகராதியில் சுகம் என்ற பதமே அகற்றப்பட்டுவிடும். ஆணின் சுயநலத்தில் பெண்களின் அடிமை மனப்பான்மையில்தான், வாழ்வின் இன்பத்தை, தாம்பந்தியத்தின்சூக்ஷமத்தை,காண முடியும் என்றமுடிவில் தங்களின் அளவில்லாக்காதலை, அன்பின் ரகசியத்தை, புன்சிரிப்புத்தவழும் இம் மந்தகாச வதனத்தின் ஒளியில், அடிமை கொள்ளும் கண்களின் வீச்சில், பிரேமாலிங்கனத்தில், ஆனந்தமான, நிச்சயமான வாழ்க்கையை நடத்துவேன். அவ்வளவே" என்றாள் புன்சிரிப்புடன்.

"உன் சுதந்தரத்தில்நான் குறுக்கிடுவதாகத் தோன்றினால் என்னை மறந்து விடுவதுதான் நன்மை தரும். பிரேமையில் மலர்ந்து குல கௌரவத்தின் உதிரும் மலர்களாக ஏற்பதானால்தான், கடமையில் கட்டுப்பட்டால்தான், ஒன்றுபட முடியும்."

"சுதந்திரத்தில் குறுக்கிடுவதாகாது, பறிமுதல்; அவ்வளவே. எனக்குச் சுதந்திரம் வேண்டாம், நீங்கள்தான் வேண்டும். கலை வேண்டாம் காதல்தான் வேண்டும். நான் வேண்டுவது பெண்மையின் உரிமையைத்தான். நாழிகையாகிறது, சாவகாசமாக நமது தர்க்கத்தை முடிப்போம். வாருங்கள் போகலாம்" என்று அவன் கையைப்பற்றினாள்.

"ஓ, மணி ஆறடிக்க ஐந்தே நிமிஷம்" என, கைக்கடிகாரத்தைப் பார்த்த வண்ணம் நடந்தான்.

அதியற்புதமான விஞ்ஞான உதவியினாலும், கலர் பல்புகளினாலும், ஆடரங்கம் இயற்கைக் காட்சி மிகுந்த தோட்டம்போல் நிர்மாணம் செய்யப்பட்டிருந்தது. திரை தூக்கியதும் இரண்டுகால் விரல்கள் மட்டும் பூமியைத்தொட, புடைவை விசிறினாற்போல் சுற்றும் விரிந்திருக்க, குதிகாலின்மீது உட்கார்ந்தாற்போல் இரு கைகளையும் தலைக்கு மேல் கூப்பியவண்ணம் கலாவைக் கண்டதும் ஒரே கரகோஷம் வானைப் பிளந்தது. அது

நின்றதும் ஜல் சதங்கை
டம் ஆரம்பமானது.
வெளிச்சத்தை அவள்மீ
செய்திருந்தார்கள். அல
வர்ணம் இவை யாவும்
மையான பின்னணிச்சங்
லாமோ" என்ற கோபா
யாரின் பாட்டைப்பாடி
தொடங்கினாள். மனமுரு
அவள் பாடியது, தன்னையு
யும் நோக்கி, நான் உங்கள்
வளில்லையா? என்று
தன்னைக் கேட்பது போ
மனுக்கு.

தமிழ் தெலுங்கு என்று ம
களைப் பாடி ஆடினாள். ஆ
மாக அமைந்தது........ ஜ
பிளந்தபடி பார்த்துக் கொ
கடைக்கண்ணாலேயே கவனி
வர்மனது மனதில் அருவருப்
யிற்று. இடைவேளைச்சமயம்
ராஜாக்களுக்கும் என்று
கூடாரங்களுக்குச் சென்
செய்து கொண்டார்கள். ம
வின் அறைக்குட் சென்றார். வ
வர்மன் மனிதர்கள் பார்வை
முக்காடிட்டுச் சுற்றி வரலானா

ஓரிடத்தில் பெரிய மனிதர்க
சாதாரண மக்களென்றும் நிர்
முடியாத ஒரு கோஷ்டி,
மாளமாகப் பேசிக்கொண்டிருந்
பேச்சைக் கவனிக்க மறைவாக

"ஆஹா! நாளுக்கு நாள் சுட
காசிக்கிறது அவள் அழகு. ஒவ்
அசைப்பிலும் நமது ஜீவனையே
விடுகிறாள். ரொம்ப நாள் ஆ
இவள் ஆட்டம்கண்டு," என்றான்

"அவள் ஆட்டமென்ன சொ
என்று பாடினான் மற்றொருவன்.

"என்ன பாட்டு கிளம்புகிறது
வேறு ஒருவன்.

"பாட்டுமட்டுமா கிளம்புகி
படியே மேடை மீதேறிக் கட்
லாமா? என்று துடிக்கிறது ம
றான் மற்றுமொருவன்.

"என்ன? உடம்பு ஒரு மாதிரி
கிறது போலும். அரசாங்கத்தை
யார் காதிலாகிலும் உங்கள்
விழுமானால் உம் கதி என்ன
யுமா?" அவள் சாதாரண

ராஜாவின் கண்ணின்
ன் ராஜாவின் மகள்
ம். ஜாக்கிரதை, நாவை
ருன் ஒருவன்.

ன்ன உயரம் பறந்தாலும்
தானேடா?"

மூடு. தேவடியாள் என்று
சுங்காலம் மலையேறிவிட்
து அவர்கள்தான் ஒழுங்
செய்து வருகிறார்கள்.
துப் பிரஜையாக இருந்தும்
றாயே. கலாவதி நெருப்பு.
எரிந்து போய்விடுவாய்."

ராஜாவின் பெண்போல்
ன் மனைக்குள்ளேயே ஆடிக்
கொண்டிருக்கவேண்டும். இப்படிச் சதஸில் ஆடினால், என்போன்றவர்களின் மனமும் ஆடத்தொடங்கி விடுகிறது. நிலைமை மோசமாகி விடுகிறது. வாயினாலாவது சொல்லி ஆற்றிக்கொள்வோம் என்பதே" என்றான்.

அதற்குமேல் அவ்விடம் நிற்க மனமில்லாமல், கலை, கலை, என்றாலும் மிருகத்தனமான மனிதர்களின் உணர்ச்சியைத் தடுப்பது என்பது ஆகாத விஷயம்போலும் என்று நினைத்தவாறு, திவான் தங்கியிருக்கும் கூடாரம் பக்கம் சென்றவன், ... ஜமீந்தார் ஏதோ உளறும் விஷயம் காதில் படவே சற்று நின்று கேட்டான்.

(தொடரும்.)

பாத்ருடுவின்

ாலசஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

களின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து
ற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

காலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக்
யாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற
இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

1, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

ாணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில்
கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு,
தெப்பக்குளம் போஸ்ட்.